சக்தி மலர்

ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய

3978

# கூண்டுக்கிளி

## முதலிய நாடகங்கள்

வங்காளத்தின் வாலிபக் கவிஞர், கலைஞர், இலக்கிய சிருஷ்டிகர் ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய. அவருடைய நாடகங்களிலே கவிதை மணம் வீசுகிறது; உன்னதக் கருத்துக்கள் ஜொலிக்கின்றன; கலையழகு தளும்பி நிற்கிறது. அவர் ஒரு நவயுக ஆசிரியர். வருங்கால உலகின் கற்பனைப் பெருக்கிலே ஆழ்ந்து, நிகழ்கால உலகின் மாசுகளைப் பொசுக்கும் ஆத்திரக் கனல் வீசுவன அவருடைய இலக்கிய சிருஷ்டிகள்.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

3978

031,21V
10.2.82(6)

TAMIL ASSOCIATION, * YOUNG MEN CHETTIARS,
PAGANERI.

PRESENTED BY:
V. PR. PL. M.
[illegible] CHETTIAR
PAGANERI.

3978

# கூண்டுக் கிளி

சக்தி மலர் 7

ஸ்ரீ ஏ. கே. செட்டியார்

எழுதிய

# அமெரிக்கா

[பிரயாண நூல்]

---

விலை ரூபாய் ஒன்று

பிரதிகளுக்கு முந்துங்கள்

# கூண்டுக் கிளி

முதலிய நாடகங்கள்

3978

★

மொழிபெயர்த்தவர் :

தி. ஜ. ர.

★

சக்தி காரியாலயம்
46, முத்துமாரி செட்டித் தெரு, சென்னை

பதிப்புரிமை]

[விலை ரூ. 1-0-0

வேதம் அண் கோ, ரங்கோன்.

முதற் பதிப்பு: விஷு, ஆனி

சகல உரிமைகளும்
சக்தி காரியாலயத்தாருக்கே

சக்தி பிரஸ் லிமிடெட் (சாந்தி பிரஸ்), சென்னை.

# பதிப்புரை

'கூண்டுக் கிளி முதலிய நாடகங்கள்' அடங்கிய இந்தத் தொகுப்பு, வங்கக் கவிஞர் ஹரீந்திரநாத சட்டோபாத்தியாயாவின் **Five Plays** (ஐந்து நாடகங்கள்) என்ற புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும்.

இதன் நடையின் இனிமையும், பொருளின் செறிவும், உணர்ச்சிப் பெருக்கும் இலக்கியாசிரியர்களின் உள்ளங் கவர்வனவாகும்.

'சக்தி'யின் கூட்டாசிரியர் தி. ஜ. ர. இதனை மூலத்தின் சுவை குன்றாமல் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார். பிற 'சக்தி மலர்'களைப் போலவே, அன்பர்களின் ஆதரவை இதுவும் பரிபூர்ணமாய்ப் பெறும் என்று நம்புகிறோம்.

★

சக்தி காரியாலயத்தார்

# பொருள் அடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| கூண்டுக் கிளி | .... | 1 |
| காவலன் தீபம் | .... | 13 |
| சவப் பெட்டி | .... | 26 |
| ஜன்னல் | .... | 76 |
| அந்தி விளக்கு | .... | 98 |



# கூண்டுக் கிளி

[ஓர் ஏழையின் வீட்டு உட்புறம். மச்சிலிருந்து தொங்கும் ஒரு சங்கிலியில் ஊசலாடும் கூண்டிலே ஒரு கிளி காணப்படுகிறது. வீட்டுத் தலைவி, அந்தக் கிளியோடு பேசுகிறாள்.]

**பெண்:** கூண்டிலே அடைபட்ட துர்ப்பாக்கியப் பட்சியே!—உன்னை அவர் சந்தையிலே ஒரு ரூபாய்க்கு வாங்கினார். ஒரே ரூபாய்! அந்த மூடச் சிறு வெள்ளிக் காசினால், உன் சுதந்திரத்தையே இழந்து விட்டாய்! வானத்து நட்சத்திரங்களையும் பாய்ந்தோடும் அருவிகளின் நீலவெள்ளத்தையும் தளதளவென்று ஜொலிக்கும் கனிமரங்களையும் நீ இழந்து விட்டாய்!—உனக்கு என்ன துர்ப்பாக்கியம்! உன் ஆத்மாவின் பாஷையையும், அதோடு உன்னருந் துணைவனையும் இழந்துவிட்டாய்! அழகு சொட்டும் சோகப் பசுங்கிளியே! கூண்டுக் கம்பிகளைத் திக்கற்றுக் கொத்துகிறாய்! சுதந்திர வேட்கை உன்னிடம் பொங்கி நிற்கிறது. ஆனால், அது பயனில்லையே. உன்னைத்தான் ஒருவர் ஒரு ரூபாய்க் காசுக்கு வாங்கி விட்டாரே!—என்ன—என்ன? நான் நீயா, துர்ப் பாக்கியக் கூண்டுப் பறவையே!

[மகன் பிரவேசிக்கிறான்]

**மகன்:** அம்மா, அம்மா!

**பெண்:** என் முத்தே! என் மோகனமே! என் ரகஸ்யக் களஞ்சியமே!

**மகன்:** அம்மா, நான் மேகமாய்ப் பறக்க ஆசையா யிருக்கம்மா. மேகமாய் மாறி, அதோ பார், அந்தக் கறுப்பு மலைமேலே மிதக்கணும் போலிருக்கு.

**பெண்:** (அவனைத் தட்டிக்கொடுத்துக் கொஞ்சிக் கொண்டே) சரி, சரி. நல்ல ஆசைதான்.

**மகன்:** நான் மழையாய் மாறி அந்த மரங்களின் இலையை யெல்லாம் அலம்பணும். வெள்ளைப் பனியும் மஞ்சள் குருவியும் செவந்த ரோஜாவும் ஆகணும். உன் பதக்கத்தின் சிவப்புக் கல்லுக் குள்ளேயுள்ள வர்ணமாய் மாறணும். மின்னலாய் மின்னணும்—பளீர் என்று மின்னும் ஒரு மின்னல் கோடாகணும். பச்சைப் பசேலென்றிருக்கும் வயலாய் மாறவும் எனக்கு ஆசையா யிருக்கம்மா!

**பெண்:** ஆமாம், என் ஆருயிர்ச் செல்வமே! நாம் என்னென்னவோ வெல்லாந்தான் ஆக விரும்புறோம்! ஆனால் முடியவில்லையே, என்ன செய்ய!

**மகன்:** அம்மா, அம்மா! வான வில்லும் வண்ணாத்திப் பூச்சியும் காயும் நிலாவும் ஆகிவிட எனக்கு ஆசையா யிருக்கே. அது ஏன் அம்மா?

**பெண்:** என் கண்ணே! ஒருநாள் இந்த அழகையெல்லாம் ஒருகால் நீ பெற்றுவிடப் போகிறாயோ என்னவோ!

**மகன்:** நம்ம சின்ன நாய்க்குட்டி யிருந்துதே, காலையிலே துப்பாக்கியால் அப்பா சுட்டுட்டாரே; அந்த மாதிரி அழகான கண்களுள்ள நாய்க்குட்டியாய் நான் ஆகிவிட்டால், என்ன ஜோராயிருக்கும்! வீட்டுக்கு வரச்சே பித்துக்குள்ளி மாதிரி நடந்துண்டு, குரூரமாய் முழிச்சுண்டு, அந்தக் குட்டியை அப்பா சுட்டுட்டாரே! ஏன் அம்மா, அப்பா கண், உன் கண் மாதிரி இல்லே? எரி ஜலம் மாதிரி 'குளு குளு'ன்னு

இருக்கே உன் கண்; அப்பா கண் மாத்திரம் சுடு காட்டிலே எரியற நெருப்பு மாதிரி இருக்கே! பாவம்! ஏன் அம்மா அந்த நாய்க்குட்டியை அப்பா சுட்டுட் டார்?

**பெண்:** அதையெல்லாம் மறந்து விடு, கண்ணு! எங்கே, கிட்ட வந்து ஒரு முத்தம் கொடு, பார்க்க லாம்.

**மகன்:** அம்மா! உன்னை அப்பா முத்தமிட் டாரே, அப்போ உன் வாய் வலிக்கவில்லை?

**பெண்:** உஷ்! உஷ்! இதைக் கேள். நாளைக் குத் தீபாலங்காரத் திருநாள். நாமிருவரும் ஒரு சின்ன மண்கோட்டை கட்டுவோம். கட்டி........

**மகன்:** அம்மா! உன்கிட்ட எனக்கு ரொம்பப் பிரியமாயிருக்கு, அம்மா!

**பெண்:** அட என் கண்மணீ!

**மகன்:** ஆனால், அப்பாவை எனக்குப் பிடிக் கவே இல்லை.

[புருஷன் பூரண மதுவெறியுடன் பிரவேசிக் கிறான்.]

**புருஷன்:** நாளைக்குத் தீபாலங்காரத் திருநாள் என்றா சொன்னாய்? ஹா! ஹா! அடி மூடமே........... குடித்து விட்டு உளறுகிறாய் போலிருக்கிறது; இன் றைக் கல்லவா தீபாலங்கார நாள்! ஏற்று வீட்டி லுள்ள அத்தனை லாந்தர்களையும். அவை என் கண்ணை உறுத்தினால், நொறுக்கித் தள்ளிவிடுவேன்; அதை மாத்திரம் பார்த்துக்கொள்.

**பெண்:** ஏன் எப்பொழுது பார்த்தாலும் நீங் கள் இப்படிக் குடித்துவிட்டு வீட்டுக்கு வருகி றீர்கள்?

**புருஷன்:** நான் புத்தித் தெளிவோ டிருக்க வேண்டாமா? அதற்காகவே குடிக்கிறேன். நான் குடித்திருக்கும் ஒரே சமயத்தில்தான் என் புத்தி தெளிந்திருக்கிறது. கடவுள் ஏன் என்னைப் படைத்தார்? பெண்ணைக் கடவுள் ஏன் சிருஷ்டித்தார்? என் கைகள் ஏன் வலுவாயிருக்கின்றன? உன் உதடு ஏன் மிருதுவாயிருக்கிறது? இதை யெல்லாம், நான் குடித்திருக்கும் இந்த ஒரே சமயத்தில்தான் அறிகிறேன்.

**மகன்:** அம்மா...............அம்மா! எனக்குத் தூக்கம் வருகிறது.

**புருஷன்:** (குழந்தையுடன் சென்று அதன் வாயை முகர்ந்து பார்க்கிறான்) மூட்டாள் பயலே! உன் வாய் நாறுகிறதேடா! நாயே, நாய்க்குட்டியே! திருட்டுத்தனமாய்க் குடிக்கிறாய் போலிருக்கிறது! அதனால் தான் எப்பொழுது பார்த்தாலும் நீ இப்படி உளறுகிறாய்........வெட்டுக் கிளியாகணுமாம்; வண்ணாத்திப் பூச்சி ஆகணுமாம்; பேரீச்ச மரம் ஆகணுமாம்; இதாகணுமாம், அதாகணுமாம்! இதெல்லாமா உன் ஆசை? குடிகாரப் பயலே! இந்தப் பிதற்றலெல்லாம் கவிதை என்கிறாள் உன் அம்மாள்; நீ ஒரு கவிஞன் என்கிறாள் அவள்! ஏ குடிகார அல்பமே! உன் வாய் நாறுகிறதேடா!

**பெண்:** உங்கள் வாயன்றோ நாறுகிறது?

**புருஷன்:** நீ என்ன பேசுகிறாய் என்று உனக்கே தெரியவில்லை. தான் பேசுவது என்ன என்று எந்தப் பெண்ணுக்காவதுதான் தெரியுமோ? மகனே! இங்கே வா. உன் வாயை உப்பு நீரில் கழுவி விடுகிறேன்!

**பெண்:** இதை என்னால் சகிக்க முடியவில்லையே!

**புருஷன்:** (குழந்தையைச் சுட்டிக் காட்டி) இதை நீ எவ்வளவோ சகித்துக்கொண் டிருக்க வில்லையா ?

**பெண்:** கண்ணே! உன் கண்கள் தூக்கத்தால் கெஞ்சுகின்றன. படுக்கப் போ, அப்பா! நேற்றிரவு பூராவும் நீ இமை கொட்டவில்லையே.

**புருஷன்:** ஏன் அந்தக் கழுதை நேற்றுத் தூங்க வில்லை? தூங்குவதற்குத்தானே இரவைக் கடவுள் படைத்திருக்கிறார். இந்த அயோக்கியப் பயல் ஏன் இருளை நிந்தித்து, எதிர்க்கிறான்; இரவு பூராவும் கண் விழித்துக் கொண்டிருப்பது இருளை அவமதிப்ப தல்லவா? மடப்பயல்! ஏனடா நேற்றிரவு நீ தூங்க வில்லை?

**பெண்:** நீங்கள் வெளியே போயிருந்ததால்தான். இரவு முழுதும் கண் விழித்து, உங்களுக்காக நாங் கள் காத்துக்கொண்டிருந்தோம். நடுராத்திரியில் பயங் கரமான ஓலங்களோடு நமது வாசல் வழியாய் ஒரு பிரேதத்தைக் கொண்டு சென்றார்கள். என் குழந்தை பயந்து விட்டான். நீங்களோ இன்று காலை வரையில் திரும்பி வரவில்லை.

**மகன்:** அம்மா! படுக்கப் போகிறேன்.

**புருஷன்:** சோம்பேறிப் பயலே! என்னோடு கடலுக்கு வா, குளிக்கலாம். மகனே, மகனே! அகண்ட ஆழமான கடலில் ஒரு முழுக்குப் போடு வோம். உன் மெல்லிய மேனியை அலைகள் ஆசை யோடு தழுவும். மகனே! ஆழ்ந்த கருங்கடல் நீர் உன் ஆழ்ந்த கருவிழிகளை முத்தமிடும். (முரட்டுத்தன மாய்ச் சிறுவனை முத்த மிடுகிறான்.) வா; இன்று மாலை போய்க் குளிக்கலாம், சூரியன் மலை வாயில் விழும் போது—ஆமாம், அவன் மலைவாயில் விழும்போது. ஹா! ஹா! ஹா!

**பெண் :** இன்று மாலை வேண்டாம்; இன்று மாலை வேண்டாம். நாளைக்கு—தயவு பண்ணி நாளைக்குப் போங்கள்.

**புருஷன் :** நாளை என்று ஒன்று கிடையாது. நாளை என்பது ஊசிப்போன, முட்டாள்தனமான தொரு பொய்! இன்றுதான் உண்மை. இப்பொழுது, இதோ, இங்கே யிருப்பது இன்றுதான்; அதை நீ பார்க்க வில்லையா, உணரவில்லையா? ஓ! மாலை வெயில் மதுவாய் இனிக்கிறது! ஆம், மதுத்தான்! இன்னும் கொஞ்சம் மதுக் குடிக்கிறேன்! (ஜேபியிலிருந்து மதுச் சீசாவை வெளியே எடுத்து, கொஞ்சம் குடிக்கிறான்.)

**பெண் :** மறுபடியுமா? அட ஈசுவரா! இவர் ஏன் இப்படிக் குடிக்கிறார்?

**புருஷன் :** சகல பொருள்களுமேதான் குடித்திருக்கின்றன. மேஜை குடித்திருக்கிறது; சுவர் குடித்திருக்கிறது; தரை குடித்திருக்கிறது; மச்சு குடித்திருக்கிறது. சகலமும் குடித்திருக்கின்றன. ஏன்—உன் கருங்கூந்தல் குடித்திருக்கிறது. சொல்லப் போனால் **கடவுளே** குடித்திருக்கிறார்! **கடவுள்** குடித்திருப்பதால்தான், தேளும், தேரையும், பாம்பும், காண்டாமிருகமும், நீர்யானையும், வெள்ளமும், பஞ்சமும், கோயிலும், குருக்களும், கடன்காரரும், கடன் சுமையும் தோன்றியிருக்கின்றன. அந்தக் குடிகாரக் **கோமாளி** மேல்தான் குற்றம். ஆமாம், **கடவுள்** பெருங் குடியன்—மனித ரத்தத்தை உறிஞ்சும் குடியன்! (விம்மி யழுகிறான்; பிறகு, பெருநகை புரிகிறான்).

**பெண் :** இல்லை; குழந்தையை இன்று மாலை உங்களோடு கூட்டிக்கொண்டு போகாதீர்கள். கிருபை பண்ணி, நான் சொல்வதைக் கேளுங்கள்; உங்களைக் கெஞ்சுகிறேன்! கடல் கொந்தளிப்பா யிருக்கிறது.

**புருஷன் :** மகனே! உனக்குக் கடலாக மாற ஆசைதானே! ஹா! ஹா! ஹா! அந்தக் கடல்தான் என்ன குளுமை, என்ன நீலம், என்ன அற்புதம்!

**மகன் :** அம்மா! எனக்கு ரொம்பத் தூக்கம் வருகிறதே.

**புருஷன் :** (மூர்க்கமாய்) வா என்னோடு; வா, வா! அப்புறம் தூங்கலாம்; அப்புறம், அப்ப் (கடைசிச் சொட்டு மதுவையும் குடித்து, சீசாவை எறிந்துவிட்டு) புறம்.

**மகன் :** அம்மா, அம்மா!

**பெண் :** குழந்தைக்குத் தூக்கக் கலக்கம்.

**புருஷன் :** அலைகள் விழித்துக்கொண் டிருக்கின்றனவே! (குழந்தையை இழுத்துக்கொண்டு வெளியே போகிறான்.)

**பெண் :** (கிளியை நோக்கி) துர்ப்பாக்கியக் கூண்டுப் பறவையே! உன்னைச் சூழ்ந்திருக்கிறது உன் கூண்டு; என்னைச் சூழ்ந்திருக்கிறது என் விதி. இரண்டு பேருமே அடைபட்டு நசுங்கிச் சோர்ந்து போயிருக்கிறோம். (யாரோ கதவை யிடிக்கும் சத்தம் கேட்கிறது) யார் அங்கே?

**பரதேசி :** கதவைத் திற.

**பெண் :** நீ யார்?

**பரதேசி :** நான் ஒரு பரதேசி.

**பெண் :** வீட்டெஜமான் வெளியே போயிருக்கிறார். அப்புறம் வா.

**பரதேசி :** நாம் அனைவருமே எஜமான்கள் தான், உலகம் என்று சொல்லுகிறோமே இதற்கு. திற கதவை.

**பெண்:** (விளக்கை ஏற்றச் செல்கிறாள்) நான் விளக்கேற்றும் வரையில் பொறுத்திரு. (விளக்கை ஏற்றுகிறாள்) அதென்ன கூச்சல்? விளக்கணைந்து போய் விட்டதா? இல்லை, அது வெறுங் கனவு. (கதவைத் திறக்கிறாள்) ஏழைப் பரதேசியே! உள்ளே வா. நரைத்துக் களைத்துப் பசித்து வாடுகிறாய்போல் தோன்றுகிறாயே?

**பரதேசி:** நான் நரைத்துக் களைத்து ஒடிந்து தான் போனேன்.

**பெண்:** பாவம்!

**பரதேசி:** நீ இன்னும் என்னிடம் இறங்கு கிறாயா?

**பெண்:** இன்னும் உன்னிடம் இறங்குகிறேனுவா? நீ யார்?

**பரதேசி:** என்னை நீ அடையாளங் கண்டு கொள்ளவில்லையா?

**பெண்:** வெகு நாளைக்கு முன் உன்னை நான் எங்கேயோ பார்த்த ஞாபகமா யிருக்கிறது; உன் குரலும் கேட்ட குரலாகவே தோன்றுகிறது. ஆனாலும் உன்னை எனக்குத் தெரியவில்லை.

**பரதேசி:** தெரியவில்லையா?

**பெண்:** இல்லை.

**பரதேசி:** உன் மறதிக்கு உன்மேல் குற்ற மில்லை. என் தலைமயிர் வெண்பனி போல் நரைத்து விட்டது; உன் கூந்தலோ சூரியோதயம் வந்தே தீரும் என்ற முழு நம்பிக்கையோடு இருண்டிருக்கும் இரவுபோல் இன்னும் கறுத்திருக்கிறது. என் கண் கள் பஞ்சடைந்து, ஜீவனற்று, சோர்ந்திருக்கின்றன; உன் கண்களோ, இன்னும் இளமை கொழித்து,

வசந்தத்தின் பெரு வேட்கை நிறைந்து பொலிகின்றன.

**பெண்:** நீ யார்?

**பரதேசி:** உன் பெண்மையின் வாயிற்படியிலே நின்று, உன்னை முதன் முதலில் வரவேற்ற காதலன் நான்; உனது ரகஸ்ய விருந்தினனாய்ச் சில காலமிருந்து, பின்னால் பிரிந்த துர்ப்பாக்கியன் நான். உனது கூண்டுக் கம்பிகளைத் தகர்த்தெறியலாமென்ற நம்பிக்கையோடுதான், நான் திரும்பி வந்திருக்கின்றேன்.

**பெண்:** என் கூண்டுக் கம்பிகளையா?

**பரதேசி:** உனது புலம்பலை இரவுதொறும் இரவுதொறும் நான் கேட்டிருக்கிறேன். சட்டம் அவனை உன் கணவன் எனக் கூறுகிறது. அந்தக் கோழை, ஒரு சமயம் சமையல் அறையிலே, ஒரு கத்தியை உன்மீது விட்டெறிந்தான். ஆனால், அது உன் நெற்றியில் படாது தவறி, இன்னும் சில காலம் நீ அவனது விளையாட்டுப் பொம்மையாய் வாழ விட்டுவிட்டது! உன் கை வளையலைக் கையோடு நொறுக்கி, அந்தக் கண்ணாடித் துகள் உன் கையைக் குத்திக் குருதி வழியும்படி அவன் செய்ததை நான் அறிவேன். அட ஈசுவரா! இத்தனை காலமும் நான் உன்னைக் காதலித்துக் கொண்டே யிருக்கிறேன். இப்போது நான் வந்தது ஏன் எனில், இனிப் பொறுக்க முடியாது என்றுதான். என் சுந்தரியே! உன் கூண்டுக் கம்பிகளைத் தகர்த்தெறிந்து, திறந்த தூய வான வெளியிலே உன்னை அழைத்துச் செல்வேன்; அங்கே நீ ஒளியையும் விடுதலையையும் பாடித் துதிப்பாய்!

**பெண்:** நான் வர முடியாது—இன்னும் முடியாது—முடியாது, இல்லை, முடியாது.

**பரதேசி:** எனக்கு நேரமாகிவிட்டது, போக வேண்டும். ஆனால், உனக்கு எப்போதாவது தேவை ஏற்பட்டால், என்னை நினைவுகூர்; என்னை அழை. சாலையோரத்தில், அதோ அந்தக் குடிசையில் தான் நான் வசிக்கிறேன்.

**பெண்:** போகாதே, போகாதே. உனக்கொரு ரகஸ்யத்தைச் சொல்லுகிறேன்.

**பரதேசி:** நான் உடனே போகவேண்டும்.

**பெண்:** பொறு; குழந்தையைப் பார். அவன் மகா அழகு, மகா பெரியவன். என்னவெல்லாம் ஆக ஆசைப்படுகிறான்! மேகமாய் மிதக்க வேண்டுமாம்; பட்சியாய்ப் பறக்க வேண்டுமாம்; அலைந்து, அலைந்து, பரதேசியாய் வெகு தூரம் திரியவேண்டுமாம்!

**பரதேசி:** பெண்ணே! அவனைக் கடவுள் காப்பாற்றுவாராக! (வெளியேறுகிறான்)

[பெண் கதவடியில் நிற்கிறாள். புருஷன் உரத்த நகைப்புடன் பிரவேசிக்கிறான்.]

**பெண்:** பையன் எங்கே?

[புருஷன் வெறிபிடித்தவன் போல் சிரிக்கிறான்.]

**பெண்:** குழந்தை எங்கே?

**புருஷன்:** கடலைக் கேள்!

**பெண்:** என்ன!

**புருஷன்:** பையனிடம் நீ கொண்ட அன்பை விட அதிக அன்பைக் கடல் கொண்டுவிட்டது. பெண்ணே! அது என்ன அற்புதக் காட்சியா யிருந்தது தெரியுமா?

**பெண்:** எங்கே சிறுவன்?

**புருஷன்:** கடலின் வெள்ளலைக் கைகள் அவ னுடலைக் கட்டி யணைத்துக் கொட்டி முழக்கின; காற்று பட்சிகளைப்போல் சிட்டி யடித்தது; முத்துக் கள் கண்விழிகளைப்போல் துள்ளி எழும்பின—ஹா! என்ன காட்சி!—பெண்ணே! குளிர்ந்த ஜலத்திரள் தன் மேனியைச் சூழ்ந்திருக்கவேண்டுமெனப் பையன் ஆசை கொண்டான். 'அப்பா, நீ வீட்டுக்குப் போ; நான் சமுத்ர ராஜகுமாரிகளோடு விளையாடப் போகி றேன்' என்று அவன் கூறினன். உடனே கடலரசன் துள்ளி எழும்பிச் சிறுவனைக் கரத்திலேந்தி யிழுத்துக் கொண்டு, கடலுக்குள்ளே மூழ்கி விட்டான். பெண்ணே! அது என்ன அற்புதக் காட்சியா யிருந் தது தெரியுமா?

**பெண்:** என்ன! என்ன சொல்கிறீர்! உண்மை யிலே அவன் முழுகி விட்டானு? மகனே! என் மகனே! நீ எங்கேயடா போனுய்?

**புருஷன்:** அவன் நாளைக்குத் தீபாலங்காரத் திருநாளுக்கு வீட்டுக்குத் திரும்பி விடுவான். ஹா! ஹா! ஹா!

**பெண்:** அவன் முழுகி விட்டானு?

**புருஷன்:** பெண்ணே! இதைக் கேள். நான் உன்னிடம் உண்மையைச் சொல்லுகிறேன். அற்புத மான உண்மை; அபாரமான உண்மை; உருக்க மான உண்மை! அந்த முட்டாள் சிறுவன் தனக்குத் தானே பேசுவதை நானும் பல நாளாய்க் கேட்டு வந்தேன். அவன் பேச்செல்லாம் குடிகாரன் பேச்சுப் போலிருந்தது; ஆமாம், குடிவெறி அவன் ரத்தத்திலே தோய்ந்திருக்கிறது. என் தாத்தாவின் தகப்பன் ஒரு குடிகாரன்; என் தாத்தா ஒரு குடிகாரன்; என் தந்தை ஒரு குடிகாரன்; நானும் ஒரு குடிகாரன். பல தலைமுறைகளாய் எங்கள் ரத்தத்திலே குடிவெறி ஊறிக்கிடக்கிறது. என் மகனும் வளர்ந்து ஒரு குடி

காரனைப் போக எனக்கு இஷ்டமில்லை. ஆதலால்— அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டேன் ; நேரே கடலுக்குச் சென்றேன் ; ஜலத்திலே அமிழ்த்திவிட்டேன்!

**பெண்:** அட பாவி! அவன் உன் மகன் அல்லவே!

[பரதேசி மௌனமாய் உள்ளே பிரவேசிக்கிறான் ; புருஷனை வெறித்துப் பார்க்கிறான்.]

---

# காவலன் தீபம்

[சிறையில் ஒரு அறை. ஒரு வர்த்தகன், ஒரு கவிஞன், ஒரு தொழிலாளி ஆகிய மூவர் நிற்கிறார்கள். அடுத்த நாள் அருணோதயத்தில் மூவரும் தூக்குமரம் ஏறப் போகிறார்கள். இதுதான் அவர்களது கடைசி இரவு. நடு ராத்திரி நேரம். ஆழ்ந்த அமைதி நிலவுகிறது. மங்கல் விளக்கொன்று, அறையிலே மினுக்கு மினுக்கென்று எரிகிறது. அசைவற்ற சித்திரம் ஒன்றைப் போர்த்தியிருந்த போர்வை விலகுவதுபோல, நிழற் படம் ஒன்று நகர்வது போல, திரை அகல்கிறது. சிறிது நேரம் சென்ற பின், ஒரு காவலன் நடை போடும் சந்தடி— அவனது துப்பாக்கியின் 'கிளிக்' என்ற சத்தம்— மீண்டும் 'கிண், கிண்' என்று அவனது காலடி ஓசை கேட்கிறது. காவலன் தோள் மிசை ஒரு துப்பாக்கி தாங்கி, ஒரு நிழலைப் போல் மேடையைக் கடக்கிறான்; சபையோருக்கு இருண்ட துக்க நினைவுகளை மூட்டுகிறது அவனது நிழல் உருவம். தொழிலாளி, ஒரு புகைச் சுருட்டைக் கொளுத்தி, பலமாய் ஒரு மூச்சு இழுத்து விட்டு, பிறகு அதை வர்த்தகனிடம் நீட்டுகிறான். மூவரிலும் வர்த்தகன்தான் மிகவும் மனங் கலங்கி நிற்பவன். வர்த்தகன் ஏதோ ஓர் இயந்திரம்போல் சிறிது புகையை இழுத்துவிட்டு, சுருட்டைக் கவிஞனிடம் நீட்டுகிறான்.]

**தொழிலாளி:** (புகைச் சுருள்களைச் சுட்டிக் காட்டி) நமது கடைசிப் புகை!

[வர்த்தகன் மற்றிருவர் கண்களையும் உற்று நோக்கி விட்டு, திடீரென்று பித்தனைப்போல் பேரொலியுடன் நகைக்கிறான்; பிறகு நின்று விடுகிறான்.]

**தொழிலாளி :** இது ஒரு பைத்தியக்காரனின் நகைப்பு!

**கவிஞன் :** செத்தவன் குரலோசை!

**தொழிலாளி :** செத்தவர் மௌனமாகி விடுவார்கள்; அவர்கள் நகைப்பதில்லை. தளராதே, தோழா! மனசைத் திடப்படுத்திக்கொள்!

**வர்த்தகன் :** மனிதனைப் படைத்தது யார்?

**கவிஞன் :** கடவுள்.

**வர்த்தகன் :** தூக்குமரத்தைப் படைத்தது யார்?

**தொழிலாளி :** மனிதன்.

**வர்த்தகன் :** கடவுள் மனிதனைப் படைத்தார்.... ........மனிதன் தூக்குமரத்தைப் படைத்தான்........ (விரல் விட்டு எண்ணிக்கொண்டே)........ஆகையால், கடவுள் தூக்குமரத்தைப் படைத்தார்...........ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு (முன்னும் பின்னும் நடக்கிறான்.)

**கவிஞன் :** நாளையதினம், நமது கடைசி நாள்! இரவு எவ்வளவு அழகா யிருக்கிறது! வானம் நிறைய நட்சத்திரங்கள், தெளிந்த வெண்மையான நட்சத்திரங்கள்! காதலர் சொரிந்த கண்ணீர் முத்துக்கள் போல் அவை பிரகாசிக்கின்றன!

**தொழிலாளி :** இல்லை, இல்லை. கோடிக் கணக்கான என் தோழர்கள் சிந்திய வியர்வைத் துளிகள் அவை!

**கவிஞன்:** தோழா! நாளைக்கு இதே நேரத்தில் இந்த இரவும் வரத்தான் போகிறது........நாளை நின்றும் வரும்; அதற்கு மறுநாளும் வரும்!........ஆனால், அதைப் பார்க்க, நீங்களும் நானும் இங்கே யிருக்க மாட்டோம். அதை நினைக்கும் பொழுது........

**தொழிலாளி:** உன்னையும் என்னையும் பற்றி இரவுக்கு என்ன கவலை?

**கவிஞன்:** ஆஹா! உலகம் அழகு குலுங்குகிறது! அதை நாம் இழக்கப் போகிறோமே!

**தொழிலாளி:** இழக்கப் போகிறோமா! பூ.... உலகின் அழகாம்! நன்றாய் உண்டு கொழுத்து, பொழுது போகாமல் மனோராஜ்யம் செய்துகொண்டிருக்கும் அகங்காரிக்குத்தான் உலகம் அழகாய்த் தோன்றும்! மனிதனே! அழகு அழகாய்த்தான் தோன்றுகிறது! ஆனால், ஆழ்ந்து பார்த்தால், அத்தனையும் குரூர மிருகத்தனமாய் அன்றோ இருக்கிறது!

**கவிஞன்:** ஏன் உன் வாழ்வின் கடைசி நாளில் கூட இப்படி அழகை அவமதிக்கிறாய்?

**தொழிலாளி:** என் வாழ்வின் கடைசி நாளா?

**கவிஞன்:** நாளைக்குச் சாகப்போவதை எண்ணி, உனக்குத் துக்கம் உண்டாக வில்லையா?

**தொழிலாளி:** நாளைக்குச் செத்து விடுவேனே யென்ற துக்கமா?........கவிஞனே! நான் ஒரு தொழிலாளி; கோடி கோடிக் கணக்கான தொழிலாளிகளில் ஒருவன். நாங்கள் என்றாவது வாழ்ந்திருந்தால் அல்லவா, சாவதைப் பற்றித் துக்கப்பட? நாங்கள் பிறந்த உடனேயே, உயிர்ப்பிணங்கள் ஆகிவிடுகிறோம். எனக்கு வாழ்வென்பதே என்ன வென்று தெரியாது. நீ சொல்லும் உன்னதமான ஆத்ம பரிதாபம் எனக்கு எப்படி உண்டாகும்? இன்

பானுபவத்தையே நீ வாழ்வென்கிறாய். 'அதை விட்டு, ஐயோ! பிரிய வேண்டியிருக்கிறதே!' என்ற புளகாங்கித உணர்ச்சி எனக்கெப்படி உண்டாகும்?

**கவிஞன்:** ஐயோ! ஆனால், அது மகா கஷ்டமாயிருக்கிறதே! கறுத் தடர்ந்த மேகத்திரள், ராஜாங்க யானைகளைப் போல் மலைக்குமேல் திரளுமே! அந்த அற்புத ஊர்வலத்தைக் கண்டு ஆண்டுதோறும் நான் ஆனந்த முறுவேனே! என் குழந்தைப் பருவத்தில் நான் விளையாடிய தோட்டத்திலே, வன்ன மயில்கள், பச்சையும் நீலமும் பல வர்ணக் கண்களும் நிறைந்தகண்ட தோகைகளை விரித்து, கார்காலக் கடவுள் வருணனின் முன்னே நடனம் பயிலுமே! அடடா! சாலை யோரத்திலே மரங்களின் குளிர் நிழல் ஜில்லென்று பரவி அமைதி நிலவுமே! தன்னந்தனியே நந்தவனங்களிலே புறுக்கள் கூவிக் காதல் புரியுமே! நம் பழத் தோட்டங்களிலே குலை குலையாய்க் கனிகள் தொங்குமே! ஐயோ தோழா! இதையெல்லாம் நினைக்க நினைக்க என் உள்ளம் பதறுகிறதே!

**தொழிலாளி:** இதுதான் ஒரு வேளை உனது கடைசிக் கவியோ?

**கவிஞன்:** அழகுலகத்துக்கு இதுதான் என் கடைசி அழுகுரல்! ராணுவச் சட்டப்படி என்னை அவர்கள் கைதுசெய்து விட்டார்கள். மகா உக்ரமான தண்டனை விதிக்கத் தக்க குற்றவாளி என்று முடிவுசெய்து விட்டார்கள் — நான் — நான் என்ன செய்து விட்டேன்? **பகவானே!** நிரபராதிகள் இவ்வளவு கொடுமையாய், நியாயமின்றித் தண்டனையடைய, நீயும் அனுமதிப்பாயா?

**தொழிலாளி:** (நகைக்கிறான்) **கடவுளை** அழைக்கிறாயா! பேஷ்! பைத்தியக்காரக் கவிஞனே! நட்சத்திர கணங்களையும் வெண்ணிலவையும் மயில் கூட்டங்களையும் புறுக்களையும் சிருஷ்டித்தானே **அவனை** —

ஆமாம்,—உலகின் அழகை, (தூரத்தில் ஒரு நரி ஊளை யிடுகிறது) குளிர்ந்த இடுகாட்டிலே அதோ அலைந்து திரிகிறதே அந்த நரியையுந்தான்—படைத்தானே அவனை அழைக்கிருயா!

**கவிஞன் :** (மெய் நடுங்கிக்கொண்டே) ஆமாம்!

**தொழிலாளி :** அந்த நரியின் வாலைச் சொக்க வெள்ளிபோல் ஒளிரச் செய்யும் மங்கல் நிலவுந்தான் காய்கிறது! அட கவிஞனே! உன் வாழ்வு பூராவும் வாழ்வைப்பற்றி என்னென்ன கனவுகளைக் கண்டு கொண்டிருந்தாய்!........நாளைக்கு உன் அத்தனை கனவு களும் பாழாய்ப் போகப் போகின்றனவே!

**கவிஞன் :** இல்லை; ஒருபோதும் அவை பாழாக மாட்டா. நான் மீண்டும் பிறப்பேன்!

**வர்த்தகன் :** (பாதி மனத் திகைப்புடன்) நானுங் கூட மறுபடி பிறப்பேனே? நான் இன்னும் ஐந்து லட்சம் ரூபாய் சேர்க்கவேண்டும்! மேலும் மேலும் கடன் கொடுக்கவேண்டும்! — பணம்! பணம்! பணம்! பணத்திலே எனக்கு மோகம் — உயிரினும் அதிகமாய்ப் பணத்திலே எனக்கு ஆசை!

**தொழிலாளி :** உனக்கும் மறுபிறப்பிலே நம் பிக்கையா? பேஷ்!

**கவிஞன் :** நான் மீண்டும் இவ்வுலகத்துக்குத் திரும்பி வருவேன். இவ்வுலகிலுள்ள அத்தனை பொருள்களையும்—பட்சிகள், ஜல வெள்ளம், மலைத் தொடர் அனைத்தின் அழகையும்—மீண்டும் கண்டு கொள்வேன்.

**தொழிலாளி :** சாகப்போகிற சமயத்திலும் மன ஆறுதல் அடைய நீ கொள்ளும் ஆசையை, நான் பாராட்டுகிறேன். உன் வாழ்நாள் முழுதும் போக பாக் கியங்களை அனுபவித்தவன்போல் நீ தோன்றுகிருய்!

வாழ்வு என்பது, உனக்கு ஏதோ ஒரு வாடிக்கை போல் ஆகிவிட்டது—கவிதை உன் கஞ்சா மயக்கம்! கவிஞனே! என் விஷயம் வேறு—நாங்கள் எப்போதும் செத்த சவங்கள்; எங்களுக்கு மறுபிறப்பே யிருக்க முடியாது! ஆனால், அப்படி யிருப்பினுங்கூட, பிறப்பிறப்பற்ற அமரத்துவத்தை நான் அடையப் போகிறேன் என்பதை மட்டில் நினைவில் வை!

**கவிஞன்:** என் கவிகள் எந்நாளும் வாழ்ந்திருக்கும்; அவற்றின் மூலம் நானும் வாழ்வேன்!

**தொழிலாளி:** மாய்ந்த மனுக்குலத்தின் கஞ்சாக் கனவுகளின் உச்சிஷ்டமாகவே உன் அழகுக் கவிகள் நிலவும். ஆனால், நானோ, ஒரே ஒரு தனிப் பெருங்கருத்தின் — மேகங்களையும் நிலவுக் கதிர்களையும் தோகை மயில்களையும் பற்றிய கவிதை யனைத்தினும் பெரியதோர் அகண்டக் கருத்தின்—உடைவாளினும் கூரிய, கண்ணீரினும் தெளிந்ததோர் உயர் கருத்தின் கவிஞனாக வாழ்வேன்! பாட்டாளிகளின் சர்வாதிகாரம் என்ற தத்துவந்தான் அந்தப் பெருங் கருத்து! ஜே!

[சேமக்கலம் ஐந்து அடிக்கிறது]

**கவிஞன்:** இன்னும் ஒரு மணி நேரந்தான் இருக்கிறது—பிறகு, பிறகு — சோகைபோல் வெளிறிட்ட அருணோதய மாகிவிடும்—கடைசி—

**தொழிலாளி:** செந்நிற அருணோதயம்! வரப் போகும் பல செந்நிற அருணோதயங்களில் முதலாவது!

**வர்த்தகன்:** அதென்ன, நாட்டியப் பெண்களின் சிலம்பொலியா? அற்புதம்! நாளைக்கு என் மகனுக்குக் கலியாணம். ஒரு சுந்தர ராஜகுமாரியை அவன் மணக்கப்போகிறான்—என் வாழ்நாள் பூராவும் உதவினேனே அந்த மன்னனை விருந்தழைக்கப்

போகிறேன். அவனுக்கு நான் பை பையாய்த் தங்கம் கொடுத்தேன்; எனக்கு அவன் நாளுக்கொரு பட்டமளித்தான்—நாளைக்கும் மறுநாளும் மீண்டும் மீண்டும் அளிப்பான்.

**கவிஞன்:** தோழா! நாம் மரணத்துக்கு அஞ்சா திருப்பது ஆச்சர்யமா யில்லையா? மரண தண்டனை விதிக்கப்பட்ட அன்றே, என்னுள்ளிருந்த ஏதோ ஒன்று செத்துவிட்டது! ஆனால், இப்போது, சாவு எண்ணம் எனக்குப் பழக்கமாகி விட்டது; ஆதலால், அந்த எண்ணமே எனக்கு ருசியாயு மிருக்கிறது—செத்தால், ஒருவேளை, மறு உலகைப்பற்றி எழுத எத்தனையோ சங்கதிகள் எனக்குக் கிடைக்கலா மன்றோ?

**தொழிலாளி:** உன் கனவு, ஒரு லாகிரி; அன்பு மயமானது!

[காவலனின் துப்பாக்கி மீண்டும் 'கிளிக்' என்று சொடுக்குகிறது—ஆழ்ந்த நிசப்தம்—காவலன் கடக்கிறான்.]

**வர்த்தகன்:** ஆ! ஏ காவலா! நாளை நடக்கும் திருமணத்துக்குப் பந்தல் எங்கே? மின்சார தீபங்கள் எங்கே? அவை ஒளிக்கண்கள்போல் இருக்கட்டும்—உறக்கமின்றிச் சிவந்து விழித்த கண்களா யிருக்கட்டும்! கல்கத்தாவிலிருந்து மூன்று நாட்டியப் பெண்களும் இரண்டு நட்டுவரும் ஸ்பெஷல் ரயில் வண்டியில் வந்து சேரும்படி தந்தி யடி! பத்து மத்தளங்களும் நான்கு வீணைகளும் வரவேண்டும்—மாலைகளை மறக்காதே—மாலைகள், மாலைகள்......

**கவிஞன்:** தோழர்களே! உங்கள் கண்கள் ஏன் இப்படிக் களைத்திருக்கின்றன?

**தொழிலாளி:** நெடுந் தூரத்துக் கப்பால் பார்க்கும் பார்வையின் களைப்பு—அந்தத் தூரத்திலே நான் காணும் காட்சியை என் சகோதரரும் காண்பார்கள்!

மகத்தான போராட்டம் — முடிவான போராட்டம் —அதன்பின்—

[தாரை முழக்கம்]

**வர்த்தகன் :** மணமகளே வரவேற்க, மணமகன் தயாராகிவிட்டான்! அவர்கள்தான் என்ன வாலிபம்! என்ன நாணம் அவளுக்கு, அந்த நவயௌவனக் கன்னிகைக்கு! அவள் பாதி நிர்வாணமாய் நிற்கக் காண்கிறேன்—அவளது கருங்கூந்தல் நீண்ட பல ஜடைகளாய்த் தொங்குகின்றது—ஒற்றைநாடி சரீரம் — நிமிர்ந்து கம்பீரமாய் நிற்கிருள் — ஒரு வார்த்தை சொல்கிருளில்லை — மணமகனைத் தழுவக் காத்து நிற்கிருள். அவளது நெற்றியிலே சிவந்ததொரு பொட்டு—ரத்தச் சிவப்பு! ரத்தச் சிவப்பு!!—ஏ கன்னிகையே! நீ யார்—நீ யார்? தூக்குமரம்! தூக்குமரம்!! கயிறு! கயிறு!! உன்னை எனக்குப் பிடிக்கவில்லை! உன்னை என் மருமகளாய் ஏற்கமாட்டேன். என் ஆசைநாயகி யாகக்கூட வைத்துக்கொள்ள மாட்டேன்—! (நகைக்கிருன்)

**கவிஞன் :** தோழா, ஏழைத் தோழா! பொறுமையா யிரு. இவ்வேதனை யெல்லாம் சீக்கிரம் தீர்ந்து விடும்! உலக வாழ்வே! உன்னிடம் நான் எவ்வளவு ஆழ்ந்த ஆசை வைத்தேன்! என் கனவுகளையும், பரவச வெறிகளையும், துயர வேதனைகளையும், ஆசைக் காதல்களையும், வேட்கைகள், நம்பிக்கைகள், உணர்ச்சிகள், அச்சங்களையும் உன்னிலே எப்படியெல்லாம் கொட்டி நிறைத்தேன்! உலகமே! உன்னேடு எத்தனை தடவை நான் ஊடல் கொண்டேன்! பின் கூடலும் செய்தேன்!! ஹே உலகமே! இதை நினைவில் வை! நான் உன்னைக் கைவிடவில்லை; நீதான் என்னைக் கைவிடுகிருய்....இந்த வாலிபத்தில்—இந்த வாலிபத்திலா! — அட ஈசுவரா! இதுவோ உன் திருவுள்ளம்?

**தொழிலாளி :** இல்லை! இது சர்க்கார் திருவுள்ளம். சர்க்காரே **கடவுளைத்** தங்கள் சேவகனாக—எஜமானாக அல்ல—நியமித்துக் கொண்டுள்ளது. ஆம், தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக, அதுதான் **அவனை** நியமித்திருக்கிறது; உன் தேவைகளையும் என் தேவைகளையும் பூர்த்தி செய்ய அன்று! ஏழைக் கவிஞனே! உன்னை அடக்கி வைத்திருப்பதற்காக, இல்லாப் **பொருள்** ஒன்றைக் குருட்டுத்தனமாய் நீ நம்பச் செய்து, வாழ்வு பூராவும் உன்னை ஏமாற்றி விட்டார்கள்—பாவம்!

**கவிஞன் :** இப்பொழுதும் கூட **அவனை** நீ ஏற்க வில்லையா?

**தொழிலாளி :** நான் அதை ஏற்கமாட்டேன். கோழைக்குத்தான் **கடவுள்** என்ற ஆறுதல் வேண்டும்; அதை நான் தூவென்று வெறுக்கிறேன்! நண்பா! ஏதோ இயற்கை அதிசயத்தால் நீ திரும்பவும் ஒரு வேளை இம்மண்ணிலே பிறந்தால், அறிவு தெளிந்த, நெஞ்சுரம் படைத்த நாஸ்திகனாய்ப் பிறக்க வேண்டும் என்பதே என் ஆசை.

**கவிஞன் :** நீ இவ்வளவு அவமதிப்பாய்க் **கடவுளைப்** பற்றி இந்தச் சாவு நேரத்திலும் பேசுகிறாயே, உனக்கு அச்சமா யில்லையா? **அவனை** நீ மன்னிப்புக் கேட்டுக்கொள்ள மாட்டாயா?

**தொழிலாளி :** தோழா! **கடவுள்** என்றொருவன் இருந்தால், **அவன்**தான் கோடிக் கணக்கான எங்கள் முன்னே—தொழிலாளிகளின் முன்னே—மண்டியிட்டு, கோடி கோடி தடவைகள் மன்றாடி மன்னிப்புக் கேட்கவேண்டும்—அப்படிச் செய்தும் எங்கள் மன்னிப்பைப் பெறத் தனக்கு யோக்கியதையில்லையென்று, **அவன்** மனமுருகவும் வேண்டும்! பன்னூற்றாண்டுகளாய், எங்களின் — தொழிலாளிகளின்—ரத்தத்தைப் பிழிந்து, துன்புறுத்தி, காலால்

மிதித்து வந்திருப்பவன் **அவனே** யன்றோ? நட்சத்திரங்கள் அடர்ந்த தன் வான பீடத்திலே யமர்ந்து, எங்களைத் திக்கற்ற வேட்டை விலங்குகளைப்போல் மதித்து, வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவனும் **அவனே** யன்றோ? எங்களிடம் மன்னிப்புப் பெற அவனுக்கென்ன யோக்கியதையிருக்கிறது? எங்களைச் சூழப் பல்வேறு வர்க்கங்களும் பல்வேறு சமயங்களும் பல்வேறு வகுப்புக்களும் கொண்டதொரு வலையைப் பின்னி, பல்லாயிரம் கால்களுடைய சிலந்தியைப் போல் எங்கள்மீது பாயச் சமயம் பார்த்துக்கொண்டிருப்பவன் **அவனே** யன்றோ?........ஏ கவிஞனே! கவிஞனே!! கவிஞனே!!! உன் வாழ்க்கையிலே ஒரு தரங்கூட அழகையன்றி வேறெதனையும் பற்றி நீ பேசியறியாய், பாடியறியாய்! உன் உள்ளத்தே உறையும் வேதாந்தத்தை அறைகூவி யழைப்பது போல - உலகு முற்றிலும் வேண்டுமென்றே சூழ்ந்திருப்பதுபோல - தோன்றும் அழுக்கும் கோரமும் குஷ்டமும் உன் கண்ணிலே ஒருபோதும் படவேயில்லையா? அரைவயிற்றுச் சோற்றோடு வாடும் குழந்தைகளை ஒருபோதும் நீ கண்டதில்லையா? இரத்தம் செத்துச் சோகையான அவர்களது காலுங்கையுமிடும் வெற்றோலம் உன் கவிதை யுள்ளத்தை ஒருபோதும் கிளரவில்லையா? சோகத்தால் வெளிரிட்ட மேனியின் மானத்தைக் காக்கக்கூடப் போதாத கந்தலுடுத்த கன்னியரை ஒருபோதும் நீ கண்டதில்லையா? நாளைக்கு ஒரு வாய்க் கவளம் சோறு வாங்குவதற்காகத் தங்கள் மானத்தையே விற்க முயன்று தெருவிலே திரியும் ஏழை மாதர்களைத் தான் நீ கண்டதில்லையா? சமூகம் என்ற போலிக் கண்கட்டு வித்தையால், ஜாதிப் பிரஷ்டரும் திருடரும் நீசருமாய் ஒதுக்கி வைக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான எளியரைப்பற்றி நீ அறிந்ததில்லையா? அவர்கள் அப்படியானதற்குச் சமூகந்தானே பொறுப்பாளி? ஓ ஹோ! இன்னுமா நீ அழகைப்பற்றியே பேசு

கிருய்? உன்னைப் போன்ற கவிஞர்கள், பிரம்மாண்டமான மாளிகையில் நான்காவது உப்பரிகையில் உட்கார்ந்து, வெளியே வறுமையால் வாடித் துன்பத்தில் உழலும் ஏழை மக்களை வெறித்து நோக்கி, அந்தி மயக்கிலே அவர்களின் அழகை வர்ணிக்கிருர்கள்! அவர்தம் துயரத்தைத் தூரத்தே யிருந்த வண்ணம் உபயோகித்துக்கொண்டு, அவர்தம் திருவிளக்கற்ற குடிசைகளையும் நலிந்து சாகும் குழந்தைகளையும், விண்ணகத்தே யொளிரும் நட்சத்திரங்களோடும் வெண்பனிச் சூழலோடும் மேகத் திரளோடும் குழைத்திழைத்து, நேர்த்தியான சொல்லலங்காரச் சித்திரங்கள் தீட்டி விடுகிருர்கள்! அந்தக் கவிஞர்களின் பெயர்களும், புதை பொருள் வைத்துப் பாடும் அருட் கவிஞர்களின் திருப்பட்டியலிலே ஏறி விடுகின்றன! கவிஞனே! நீ மீண்டும் உண்மையிலே ஜனிப்பாயானல், சௌக்கியமாய்க் கவலையற்று வாழும் செல்வரின் கவிஞனுயில்லாமல், அவனைவிட மிக நாணயமான வேறு ஏதாவதொன்ருய்ப் பிறப்பாயென்று நம்புகிறேன்—ஒரு தொழிலாளியின் சமையலறையிலேயுள்ள மண்பானையாய் நீ பிறந்தாலும் போதும்; அது அவனுக்கும் அவனுடைய குடும்பத்துக்கும் சிறிதேனும் உதவியாயிருக்கும். ஆனல், இதையெல்லாம்விட, நீயும் ஒரு தொழிலாளியாகவே பிறந்து, நமது கோடி கோடிக் கணக்கான சகோதரரையெல்லாம் கனல் வீசும் செங்கொடியின் கீழே - இப்போதே பல சாம்ராஜ்யங்களை நிலைகலங்கச் செய்துள்ள அக்கொடியின் கீழே - திரளச் செய்வதே மேலாகும்!

**கவிஞன்:** தோழா! நான் இதுவரை கேட்டிராததொரு மகாகவியைப் போலன்ருே நீ பேசிவிட்டாய். ஐயோ!—லட்சாதி லட்சமான மக்களின் சக்தியை, அற்புதத்தை, வெட்ட வெளியான சத்தியத்தை, இதற்கு முன்னே நான் அறியாமற்

போனேனே! ஆண்டவா! நீ இருப்பது உண்மை யானல்!—

[தாரை முழக்கம்—ஆழ்ந்த நிசப்தம்—பிறகு, காவலனின் சொடுக்கல்—மீண்டும் அவன் ஒரு சாவியுடன் தோன்றிக் கதவைத் திறக்க வருகிருன்.]

**வர்த்தகன் :** வாடா என் மகனே! மணக்கோலம் ஆகிவிட்டாயா?

[காவலன் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை—கதவைத் திறக்கிருன்—இவர்களை ஒருவர் ஒருவராய் வெளியே இட்டுச் செல்கிருன்.]

**கவிஞன் :** விடை கொடுங்கள், தோழர்களே! மீண்டும் ஒரு தொழிலாளியாய் நான் திரும்பி வருவேன்! தொழிலாளியாய்!

**வர்த்தகன் :** (திடீரென்று சொற்ப ஞாபகம் வந்தவனுய்) என்னை எங்கே அழைத்துச் செல்கிருய், எங்கே? அட எங்கே? தூக்குமேடை! தூக்குமேடைக்கா! ஐயோ! என் மனைவி, குழந்தைகளை விட்டா?—ஐயோ!—நான் சாகமாட்டேன், மாட்டேன்! (வர்த்தகன் கடைசி வார்த்தையைச் சொல்லி முடிக்குமுன் வெளியே கொண்டுபோகப் படுகிருன்.)

**தொழிலாளி :** (காவலனை நோக்கி) நமஸ்காரம், தோழா! உன்னைப் பார்க்க, எனக்கு வருத்தமாயிருக்கிறது. எங்களைப் போலவே, சுரண்டப்படுவோரில் நீயுமொருவன்! ஆனல், அதிசீக்கிரத்திலே இந்நிலைமைகள் யாவும் மாறிவிடும்! புரட்சி வரும்—புரட்சி வரும்—இதோ இந்த உதயவானச் செக்கர் போல வரும். புரட்சி நீடூழி வாழ்க!

[தொழில்ாளி வெளியே செல்லும்போது, உலகத் தொழிலாளரின் வாழ்த்துப் பாட்டைப் பாடுகிருன்—பல குரல்கள் அந்தப் பாட்டை வெகு தூரத்துக் கப்பால் வெளியே கொண்டு செல்கின்

றனை—சிறை வாசற்படிக்கு வெளியிலே ஜனத் திரள் அதனைப் பாடுவதுபோல் சத்தம் கேட்கிறது. பிறகு, மௌனம்.

காவலன் தனது தீபத்திலே மூன்று திரிகளை இட்டு, முச்சுடருடன் திரும்புகிறுன். அமைதியாய், ஓர் இயந்திரம்போல, தீபமிருக்கும் லாந்தரின் கண் ணாடிக் கதவைத் திறக்கிறுன். பின்னர், அந்த மூன்று சுடர்களையும் ஒவ்வொன்ருய் அணைக் கிறுன். அவன் கையிலுள்ள லாந்தரின் கம்பிக் கூடு மட்டில் மிஞ்சி இருள் சூழ்கிறது.]

---

# சவப் பெட்டி

## அங்கம் 1

[நடுத்தரமான பணக்கார வகுப்பைச் சேர்ந்த ஓர் ஓவியனின் படிப்பறை. மாலை நேரம். வானத்திலே ஒளி மங்கி வருகிறது. ஒரு விளக்கின் அருகே, மோஹன் உட்கார்ந்திருக்கிறான். ஆனால், அந்த விளக்கு இன்னும் ஏற்றப்படவில்லை. அவனது மடியிலே, ஐரோப்பாவின் படம் ஒன்று விரிந்து கிடக்கிறது. கையிலே ஒரு சிவப்பு நீலப் பென்ஸிலைப் பிடித்து, ஐரோப்பாவுக்குக் குறுக்கே ஏதோ ஒரு பாதையை அவன் குறித்துக் கொண் டிருக்கிறான். என்றோ ஒரு நாள் அங்கெல்லாம் தானே 'விஜயம்' செய்யலாம் என்பது அவன் நோக்கம்.

அத்தை குமுதினி பிரவேசிக்கிறாள். அவள் கலியாண மாகாத கன்னியாகவே காலம் கழிப்பவள்; இயற்கையிலே குரூர சுபாவ முடையவள். ஆனால், அந்தக் குரூரம் எப்போதாவதுதான் வெளிப்படத் தோன்றும். 'ஆத்மீக காரணங்க'ளால் மணம் செய்துகொள்ளாமல் வாழ்வின் நோக்கமே குலைவுற்ற சில முதியவர்கள் உண்டு அல்லவா? அப்படிப்பட்ட ஒருத்தி அவள்.]

**அத்தை :** பார்த்தாயா............இதோ பார்! இப்படியா உன் கண்ணைக் கெடுத்துக்கொள்வது!

**மோஹன் :** அத்தை! என்னைச் சும்மா விட மாட்டாயா? என் சகல காரியத்திலும் நீ சற்று அதிகமாய்த் தலையிடுகிறாய். சில சமயம் எனக்கு

மிக்க கோபம் வருகிறது. நீ செய்வது நியாயமல்ல என்று சில சமயம் எனக்குத் தோன்றுகிறது...........

**அத்தை:** எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை. உனக்கு அது பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி; எனக்குக் கவலை யில்லை. என்னை நீ மறுத்துப் பேசக்கூடாது. உன்னைக் குழந்தை முதல் நான் காப்பாற்றி வருகிறேன். என் பணத்தையெல்லாம் உனக்காக நான் பாங்கியில் போட்டிருக்கிறேன். ஆகையால், என் விருப்பங்களையும் உணர்ச்சிகளையும் நீ மதித்து நடக்கவேண்டுமென்று நான் எதிர் பார்க்கிறேன்.

**மோஹன்:** ஆனால், அத்தை! என் விஷயத்தில் நீ ஏன் அற்ப சங்கதிகளுக்கெல்லாம் பெருந் தடபுடல் செய்கிறாய்? இது எப்படி என் கண்களைக் கெடுக்கும்? ஐரோப்பியப் படமொன்றைப் பார்த்தால், கண்கள் கெட்டுவிடுமா?

**அத்தை:** அந்தி மாலையின் மங்கிய அரை வெளிச்சம் கண்களுக்குக் கெடுதலாகும், மோஹன்! என் வார்த்தையைக் கேள்...........நீ நல்ல பையனில்லையா...........கேள். நான் உன்னைவிட வயசிலே பெரியவள்; அநேக விஷயங்களில் எனக்கு உன்னைவிட அதிக ஞானமும் அனுபவமும் உண்டு. மங்கிய அரை வெளிச்சம் கெடுதலாகும்; அதுவும், பல வர்ணங்கள் தீட்டிய ஒரு படத்தின்மீது அந்த வெளிச்சம் பரவும்போது இன்னும் கெடுதலாகும்...........எனக்கு ஸயின்ஸ் தெரியும்; எதிரொளியையும் ஒளிக் கதிர்கள் முறிந்து திரும்புவதையும் சகல ஸயின்ஸையும் பற்றி யெல்லாம் என் இயற்கை யறிவால் நான் அறிந்துகொண்டுள்ளேன். கலப்புப் பானங்களைப் போலவே கலப்பு வெளிச்சமும் கண்ணுக்கும் ஆரோக்கியத்துக்கும் கேடாகும்.

**மோஹன்:** நீ உனது பாதி வெளிச்சத்தில் இருக்கிறாய், அத்தை! உனக்கு வயது ஐம்பதுக்குமேல் ஆகிறது; இல்லையா?

**அத்தை:** ஆமாம், ராஜா! நான் பிறந்து ஐம்பது வருஷங்களுக்கு மேல் ஆகிறது.

**மோஹன்:** ஆனால், நீ இன்னும் பதினாறு வயசுப் பாலகுமாரி போலவே தோன்றுகிறாயே!

**அத்தை** (அசட்டு நாணத்துடன்)**:** நீ இப்படிச் சொல்வது எனக்குச் சந்தோஷமாய் இருக்கிறது. என்றாலும், உன்னிடம் ஒளிப்பானேன்; அரை நூற்றாண்டுக் கிழவியாகி விட்டதைப்பற்றி, நான் கவலைப்பட வில்லை. மோஹன்! இது உனக்குத் தெரியுமா? என்னை யார் கண்டாலும் நான் ஒரு வாலிபப் பெண்ணென்றே நினைக்கிறார்கள்........... அதோடே, (தளதள வென்று ஜொலிக்கும் நிலக்கரித் தணலைப் போல் வெட்கத்தால் முகம் சிவந்து) விடர்கள் தங்களை மணந்துகொள்ளும்படி கூட என்னைக் கேட்கிறார்கள்...........என்ன துணிச்சல்!

**மோஹன்:** அவர்கள் அப்படி மணம் புரியக் கேட்பது உனக்கு பரவச முண்டாக்கி யிருக்குமே...........ஆமாம்; இல்லை யென்று என்னிடம் மறைக்காதே.

**அத்தை:** அதென்ன நீயே இப்படிச் சொல்லுகிறாய், ராஜா! சகல வாலிபர்களையும் என் பிள்ளைகளைப் போலவே நான் பாவிக்கிறேன். மோஹன்! நீ ரொம்பப் போக்கிரி.

**மோஹன்:** ஏன்? தங்களை வாலிபர் வியந்து போற்றுகிறார்கள் என்று நினைப்பதிலே, வயசு முதிர்ந்த கன்னிப் பெண்களுக்கு ஒரு ஆசை என்பதை நீ மறந்து விட்டாயே! ஏன் நாணுகிறாய்? வேண்டாம்........மேலும், தங்கள் முதல் காதலுக்கு

வயது முதிர்ந்த கன்னிப் பெண்களையே அநேக வாலிபர்களுந்தான் விரும்புகிறார்கள்!

**அத்தை:** இந்தா, அசட்டுப் பிசட்டென்று பேசாதே, மோஹன்! ஒரு க்ஷணத்திலே எனக்குக் கோபம் வந்துவிடும். உன் அத்தையிடமும் அவளது ஒழுக்கத்தினிடமும் நீ கொஞ்சம் மரியாதை பாராட்ட வேண்டும். (மின்சார விளக்கின் ஸ்விட்சைப் போட்டு அதை ஏற்றுகிறாள்.) இதோ பார்! இதுதான் தேவலை! ரொம்பத் தேவலை!

**மோஹன்:** அத்தை! நீ எங்களோடு ஐரோப்பாவுக்கு வரப் போகிறாய் என்று நம்புகிறேன்.

**அத்தை:** என்றால் எப்படி முடியும், ராஜா! நான் வீட்டைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அதோடு, எனக்கு எவ்விடம் செல்லவும் பிடிக்கவில்லை. அதிலும், ஐரோப்பாவிலே இது மாரிகாலமில்லையா? இச் சமயம் அங்கே போவார்களோ? அடேயப்பா! அங்கே குளிர் சகிக்கவே முடியாது. இப்போது ஐரோப்பா ரொம்ப மாறியிருக்கும்.

**மோஹன்:** நீ எப்போது ஐரோப்பாவுக்குச் சென்றாய்?

**அத்தை:** யுத்தத்துக்கு வெகு காலம் முந்திப் போனேன். அங்கே அப்போது சர்வாதிகாரிகளும் கிடையாது; யுத்தங்களும் கிடையாது. காலம் ரொம்ப மாறிவிட்டது.

**மோஹன்:** ஆனால், நீ துளிக்கூட மாறவில்லை. ஐரோப்பாவில் ஒரு முஸலீனியும் ஒரு ஹிட்லரும் தோன்ற வெகுகாலம் முந்தியே, நமது வீட்டிலே அத்தை குமுதினி தோன்றி விட்டாள்........

**அத்தை:** மருமகனே! நீ இப்படிக் கவி கட்டுவதை ஒருபோதும் நிறுத்தமாட்டாயா?

**மோஹன் :** இப்போது பேசியதைவிடத் தெளிவான வசனத்தில் நான் ஒரு போதும் பேசியதில்லை........

[அத்தை வெளியே செல்கிறள்]

**மோஹன் :** அடடா! வயசு முதிர்ந்த கன்னிப் பெண்ணென்றல், இவளைத்தான் சொல்ல வேண்டும்! நான் இதைச் செய்யவேண்டும், அதைச் செய்ய வேண்டும்; இதைச் செய்யக்கூடாது, அதைச் செய்யக் கூடாது. நான் சமாசாரப் பத்திரிகைகளைப் படிக்கக்கூடாது; ஏனென்றல், அவை ஆபாசமா யிருக்கின்றனவாம். இன்னுரை நான் பார்க்கக்கூடாது. என் சுண்டு விரலால்கூட யாருக்கும் உதவி செய்யக் கூடாது! அவள் என்னிடம் காதல் கொண்டிருக்கிறள் போலவே தோன்றுகிறது; குரூரமும் தன்னலமும் மிகுந்ததொரு காதல் சிறையிலே என்னைக் கைதியாய் வைத்திருக்க விரும்புகிறள் போல் தோன்றுகிறது. கொடிய சர்வாதிகாரியா யிருக்கிறளே! அவள் சொல்லுவதெதையும் நான் மறுக்கவே கூடாதாம்! இதெல்லாம் எனக்குச் சகிக்கவில்லை....இருந்தாலும் நான் ஒரு மேதை........இன்னும் முக்கியம் என்னவென்றல், பணம் அவளிடம் இருக்கிறது. பேஷ், பேஷ், பேஷ்! கலியாணமாகாத ஒரு கிழவிக்கு, அடக்கப்பட்ட அவளது வாலிபத்தை வெளிப்படுத்த ஒரு வடிகால் வேண்டியது தானே!

[மோஹனின் சிறு பெண் நாட்டியமாடிக் கொண்டு, மெல்லப் பிரவேசிக்கிறள்.]

**சிறுமி :** அப்பா, அப்பா! என்ன வேடிக்கை நாம் பார்க்கப் போகிறேம்! நாம் படகிலே போவோமா? படகு ரொம்பப் பெரிசா யிருக்குமோ, அப்பா?

**மோஹன் :** ஆமாம்; படகிலேதான் நாம் மிதக்கப் போகிறேம். ஆம்; படகு ரொம்பப் பெரிசுதான்.

**சிறுமி:** அது நீர்யானையை விடப் பெரிசா யிருக்குமோ ?

**மோஹன்:** ரொம்பப் பெரிசா யிருக்கும், ராணி !

**சிறுமி:** ரோட்டைவிடப் பெரிசா? இந்த வீட்டையும் விடப் பெரிசா ?

**மோஹன்:** ஆம், இந்த வீட்டைவிடப் பெரிசு. அதற்கு மூன்று மாடிகள் உண்டு; எழுநூறு 'காபின்'கள் உண்டு.

**சிறுமி:** 'காபின்' என்ருல் என்ன, அப்பா ?

**மோஹன்:** என் குஞ்சல ராணி! அது ஒரு மாதிரி அறை.

**சிறுமி:** ஒரு மாதிரி அறையா ? ஜெயிலிலே கைதியிருக்கிருனே, அது மாதிரி அறையா ? பசியோடழும் தன் குழந்தைக்காக, ஒரு ரொட்டித் துண்டைத் திருடிய ஏழை மனிதன் வசிக்க வேண்டிய இடமல்லவா அது? எனக்குப் பயமா யிருக்கிறது........

**மோஹன்:** இல்லை; 'காபின்' என்ருல் ஜெயில் அறையல்ல. அது பெரிசாய், நல்ல வெளிச்சமுள்ளதாய், மின்சார விளக்குகளோ டிருக்கும்.

**சிறுமி:** அப்படியாஞல், கைதியின் அறை மட்டில் ஏன் இருட்டாயும் அழுக்காயும் குளிராயும் இருக்கிறது ? தோழி ஷீலா எனக்கு வாசித்துச் சொன்ன ஒரு கதையில், அப்படித்தான் இருக்கிறது ஜெயில் அறை. தோழி ஷீலா, ஸ்ரீ ரஞ்சித்தின் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் ஒரு ஏழை, அப்பா! (உள்ளேயிருந்து ராணியின் தாயார் கூப்பிடுகிருள்: "ராணி! ராணி! இங்கே வா ; குளித்துவிட்டுப் போ!")

**மோஹன்:** உள்ளே போ, ராணி! அம்மா கூப்பிடுகிறாள். அம்மாவுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

**சிறுமி:** இதோ வருகிறேன், அம்மா!........ அதிருக்கட்டும், அப்பா! கப்பல் கடலைவிடப் பெரிசாயிருக்குமோ?

**மோஹன்:** அட பெண்ணே! என்ன விசித்திரமான கேள்வி இது! உனது தோழி ஷீலாதான் இதை உனக்குச் சொன்னாளாக்கும்........கடலைவிடக் கப்பல் பெரிதென்று அவள் உன்னிடம் சொன்னாள்?

**சிறுமி:** கடல் ரொம்பப் பெரிசாயிருந்தால், கப்பலை அது முழுகடித்து விடாதா?

**மோஹன்:** புயலடித்தா லொழிய, கப்பல் முழுகாது.

**சிறுமி:** அப்பா! புயல் அடிக்கும்போது கப்பல் என்ன செய்யும்? அப்போது கடல் பொங்குமே!

**மோஹன்:** சில சமயம் கப்பல் தப்பித்துக் கொள்ள முடியும். கப்பலுக்கு எத்தனையோ தந்திரங்களும் யுக்திகளும் தெரியும்........அதனால் அது தப்பித்துக் கொள்ளும்.

**சிறுமி:** தொழிற்சாலையிலே வேலை செய்யும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கடலைப்போல்தான் அலை மோதுகிறார்களாம். தொழிற்சாலையின் மானேஜர் ஒரு கப்பல் மாதிரி யிருக்கிறாராம். இதெல்லாம் தோழி ஷீலா சொன்னாள். அப்படியானால், மானேஜருக்குப் பல தந்திரங்களும் யுக்திகளும் தெரியுமோ?

**மோஹன்:** அந்த நாசமாய்ப் போகிற பாமர ஷீலா உனதழகிய குஞ்சலத் தலைக்குள்ளே பல விசித்திரக் குப்பைகளை யெல்லா மல்லவா திணித்துக்

கொண்டிருக்கிறாள்! (சிறுமியின் தாய் மீண்டும் கூப்பிடும் குரல் கேட்கிறது.)

**சிறுமி:** வருகிறேன், அம்மா. நாம் ஐரோப்பாவுக்குப் போகப் போகிறோமே அப்பா, அந்தக் கப்பலைப் பற்றியும், அந்தக் கப்பல் செல்லப்போகும் கடலைப்பற்றியும் நீங்கள் எழுதி யிருக்கிறீர்கள் இல்லையா ?

**மோஹன்:** ஆம், குஞ்சு! அநேகம் கவிகளும் கதைகளும் எழுதி யிருக்கிறேன்.

**சிறுமி:** ஆனால், தொழிற்சாலையிலே அலை மோதும் கடலைப்பற்றியும், மானேஜர் என்ற தந்திரக் கப்பலைப் பற்றியும் மட்டில் நீங்கள் ஏன் ஒன்றும் எழுதவில்லை ?

[சிறுமியின் தாய் பிரவேசிக்கிறாள்; அவளுக்கு பின்னே மோஹனுடைய அத்தை வருகிறாள்; அவள் ஒரு கண்ணாடி ஜாடி நிறைய எலுமிச்சம்பழ ரஸத்தைக் கொண்டு வந்து, சிறிய தொரு மேஜையின் ஒரு மூலையில் வைக்கிறாள்.]

**நளினி:** ராணி! என் தொண்டை என்ன துருத்திக் குழாய் என்று நினைத்திருக்கிறாய் ? உன்னைக் கூப்பிட்ட உடனே வரக்கூடாதா ?

**சிறுமி:** அம்மா! நான் அப்பாவை ஒரு போதும் பார்க்கிறதேயில்லை. அவரிடம் எனக்குப் பிரியமாயிருக்கிறது. அவரோடு பேச வேண்டுமென்று சில சமயம் எனக்கு ஆசையா யிருக்கிறது.

**அத்தை:** அட பிஞ்சிலே பழுத்த குழந்தையே! உன் அப்பாவின் அருமையான நேரத்தை நீ வீணாக்கப் பார்க்கிறாயே! உன்னோடு தொல்லைப்பட அவனால் முடியாது. தன் வேலையைச் செய்யும்படி அவனைத் தனியாய் விட்டுவிடவேண்டும். வா என்னோடு; படுக்க நேரமாகிவிட்டது.

[ராணியைப் பிடித்து இழுக்கிறாள்]

**மோஹன் :** அடடா! அவள்தான் என்ன அழகா யிருக்கிருள்!

**நளினி :** யார், நாசமாய்ப் போகிற உங்கள் கிழக்கோட்டான் அத்தையா?

**மோஹன் :** சேச்சே.......ராணியை யல்லவா சொன்னேன்.

**நளினி :** மோஹன்! எனக்கு அந்தச் சொர்ண ஆங்கி வேண்டும்; கட்டாயம் வேண்டும். நாம் ஐரோப்பாவுக்குப் போகும்போது, கந்தலைக் கட்டிக்கொண்டு போக முடியாது. பார்த்ததுமே இந்தியாவுடையது என்று தோன்றவேண்டும்; அப்படிப்பட்ட ஏதாவது ஒன்று நம்மிடம் இருக்கவேண்டும். இந்திய ஆடைகள் விஷயத்தில் பிரெஞ்சு ஜனங்களுக்கெல்லாம் பிரமாதப் பைத்தியம். நம்மைத் தெருவிலே கண்டால் கூட அவர்கள் முத்தமிட்டு விடுகிருர்கள். ஆஹா! அது எவ்வளவு குதூகலமா யிருக்கும்!

**மோஹன் :** அந்தச் சொர்ண அங்கி ரொம்பப் பணச் செலவாயிற்றே என்று உனக்குத் தோன்றவில்லையே! ஆயிரம் ரூபாய் அல்லவா?

**நளினி :** எனக்கு அப்படித் தோன்றவில்லை. அதன் இழையழகையும் வேலைப்பாட்டையும் பாருங்கள். காசியிலிருந்து-மாட்சிமிக்க தூய அந்தப் புராதன இந்திய நகரத்திலிருந்து - அது வருகிறது........ ஐரோப்பா........அதைக் கண்டு என்ன பிரமாதப் பைத்தியம் கொள்ளும் என்பதை நீங்கள் சிந்தியுங்கள்!

**மோஹன் :** அதற்கு நாம் பணம் வாங்குமுன், அத்தைக்கு நான் சமாதானம் சொல்ல வேண்டும்....

**நளினி :** ஐயோ! அவளிடம் உங்கள் அடிமைத் தனத்தைக் கண்டு எனக்கு மகா வெறுப்பா யிருக்கிறது.

**மோஹன் :** பணம் அவளுடைய தாயிற்றே?

**நளினி :** ஆமாம்; ஆனால், நீங்கள் ஒரு மேதை என்பதை மறந்து விடுகிறீர்களே. ஒரு மேதைக்கு எவர் பணத்தின்மீதும் பாத்தியமுண்டு.

**மோஹன் :** அவளுக்கு மிக நயமாய் நான் சமாதானம் சொல்லுகிறேன். அழகான பொருள்களை ஐரோப்பாவுக்குக் கொண்டுசெல்வது, நம் நாட்டின் நன்மையை உத்தேசித்து அவசியமாகும் என்று அவளுக்கு நான் ருசுப்பிக்கிறேன்........வெளி நாட்டிலே இந்தியாமீது மதிப்பு உண்டாகும்படி செய்ய, அது ஒரு வழி என்று சொல்லுகிறேன்.

**நளினி :** நீங்கள் இப்பொழுதுதான் உண்மையிலேயே ஒரு மேதை! சொர்ண அங்கிகளை விட மதிப்புயர்ந்த இதைப் பெற்றுக்கொள்ளுங்கள். (அவனை முத்தமிடுகிறாள்.) நீங்கள் சொல்வது உண்மை. நான் அந்த அங்கியை வாங்கியாகவேண்டும்........ பேஷ்!........எனக்காக அல்ல, நமது தேசத்துக்காக!

[வேலைக்காரன் பிரவேசிக்கிறான்.]

**வேலைக்காரன் :** தொழிற்சாலை முதலாளி ஸ்ரீ. ரஞ்சித் வந்திருக்கிறார்; எஜமானையும் எஜமானியையும் பார்க்க வேண்டுமாம்.

**மோஹன் :** உள்ளே அழைத்து வா........

[வேலைக்காரன் போகிறான்]

**நளினி :** (வெறுப்புக் கொண்டவள் போலப் பாசாங்கு செய்து) இப்படி அகால நேரங்களிலெல்லாம் அவர் இங்கே வராமலிருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மோஹன்! உங்களிடம் நான் ஒரு ரகஸ்யத்தைச் சொல்லுகிறேன். அவர் என்னிடம் காதல் கொண்டிருக்கிறார் என்று தோன்றுகிறது. அதற்கு அவரை நான் குற்றங் கூறவில்லை;

நான் ஏன் இவ்வளவு அழகாயிருக்கிறேன் என்று என்னையே குற்றம் கூறிக் கொள்கிறேன்.

[ரஞ்சித் உள்ளே வருகிறார். உள்ளே 'சரக்கு' இல்லாமல் ஊரை ஏமாற்றி, பிறர் உழைப்பின் மூலம் தான் பணம் சம்பாதித்துக் கொழுத்து, ஈர இரக்கமில்லாமல் வாழும் ஆசாமிகளில் ஒருவர் அவர் என்று ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. நடுத்தர வயசு உடையவர்.]

**ரஞ்சித்:** நமஸ்காரம், மோஹன்! தேவிக்கும் நமஸ்காரம். ஐரோப்பாவுக்குப் பிரயாணமாவதற்காக, மூட்டை முடிச்சுக்கள் அவசரமாய்க் கட்டு கிறப்போ லிருக்கிறது?

**நளினி:** ஆமாம்; இப்போதுதான் மோஹ னிடம் அதைப்பற்றி வாதித்துக் கொண்டிருந்தேன்.

**ரஞ்சித்:** வாதமா? எதைப்பற்றி?

**நளினி:** காசியிலிருந்து வந்த வியாபாரி ஒரு வன் ஒரு சொர்ண அங்கி கொணர்ந்திருக்கிறான். அதை நான் வாங்க விரும்புவது பற்றியே வாதம். அதன் விலை ஆயிரம் ரூபாய்தான். ஐரோப்பாவுக்கு ஓர் அழகான பொருளைக் கொண்டுபோனால், அங்கே அது பெரிய பரபரப்பை உண்டு பண்ணும் என்று நான் அபிப்பிராயப் படுகிறேன். அது நம் நாட்டுக்கே ஒருவிதப் பிரசாரம் ஆகுமல்லவா? இந்திய ராஜீயவாதி களையும் கவிகளையும் போலவே, காசிச் சொர்ண அங்கி ஒன்றும் இந்தியாவின் கட்சியை எடுத்துரைக் கும் பிரசாரகன் ஆகுமல்லவா? அவர்களைவிட இது உயர்ந்த பிரசாரகன் என்றுகூட நான் சொல்வேன்.

**ரஞ்சித்:** ரொம்ப ஸரி. (தனது 'செக்' புஸ்த கத்தை எடுத்து) நான் ஒரு 'செக்' கொடுக்கிறேன்; அதை அங்கீகரிப்பீர்க ளென்று நம்புகிறேன்.

**நளினி:** ஆயிரம் ரூபாய் பணமாகவா? வந்த னம்........வேண்டாம்........ஆனால்........

**மோஹன்:** ரஞ்சித்! இதென்ன மடத்தனம்! வேண்டாம்.

**ரஞ்சித்:** அவளுக்கு நான் ஒரு 'செக்' கொடுப்பதில் என்ன குற்றம்?

**நளினி:** இல்லை, ரஞ்சித்! தயவு பண்ணுங்கள். 'செக்'கை, 'செக்' உருவத்தில் நான் வாங்கிக் கொள்ள மாட்டேன். வந்தனம்........அதை நான் வாங்கிக்கொள்ள முடியாது; அங்கீகரிக்கக் கூடாது........

**ரஞ்சித்:** நல்லது; 'செக்' வேண்டாம். அந்த அங்கியையே வாங்கிக் கொடுத்தால்........அதிலே........

**மோஹன்:** அவளுடைய பிறந்த நாள் வரும் போது என் அத்தை அவளுக்கு அந்த அங்கியை வாங்கிப் பரிசளிப்பாள்........

**ரஞ்சித்:** அவளுடைய பிறந்த நாள் எப்போது வருகிறது? ஆனால், அது முற்றிலும் தனியான வேறொரு சந்தர்ப்பமா யிருக்கட்டுமே........அப்போது, இதைவிடச் சிறந்ததும் பொருத்தமுமான இன்னொரு பொருளை உங்கள் அத்தை கொடுப்பாள்........நானும் கொடுப்பேன்.

**நளினி:** உங்கள் தாராளத்தால், எனக்குத் துக்கமுண்டாகிறது........நண்பர் ரஞ்சித்! நீங்கள் ரொம்ப அன்பா யிருக்கிறீர்கள்; அதைப் பெறும் தகுதி எனக்கில்லை.

**ரஞ்சித்:** (உண்டியலை எழுதி, நளினியிடம் கொடுத்துக் கொண்டே) தயவு பண்ணி அனுமதியுங்கள், மோஹன்!........உங்கள் ஆத்ம சிநேகிதனாக என்னை மதியுங்கள்; உங்கள் க்ஷேமத்தை மனப்பூர்வமாகக் கோரும் ஒருவன் நான்.

**நளினி:** மட்டற்ற அன்பு காட்டுகிறீர்கள் நீங்கள்........

**மோஹன்:** (மனங்கசிந்து) இல்லே, ரஞ்சித்! இதென்ன முட்டாள்தனம்!

**ரஞ்சித்:** இது உங்களுக்கு வருத்த மூட்டு கிறதா? உங்களுக்கு........ஊம்........இந்த நன்கொடை யின் நோக்கம் ஏதேனும் தீயதா யிருக்குமோ என்ற சந்தேகமா?

**மோஹன்:** அப்படி உங்கள் கருத்தானல், நமது நட்பை உறுதி செய்ய இது தேவை என்று நீங்கள் நினைத்தால், இதை நீங்கள் தாராளமாய்க் கொடுக்கலாம். ஆனல், உண்மையில் நீங்கள் மித மிஞ்சிய தயாளம் காட்டுகிறீர்கள்.

**ரஞ்சித்:** ஓ! இல்லவே யில்லே. கடவுள் எனக்கு உலகத்திலே ஒரு பதவியைக் கொடுத்திருக்கிறர்; என்னே ஒரு பணக்காரன் ஆக்கியிருக்கிறர். சாமானி யப் பணமுள்ள மற்ருெருவருக்கு உதவி செய்வது தான் பணக்காரனின் கடமையாகும். பெரிய வீதி யிலே எனக்கு நாலு வீடுகள் இருக்கின்றன. ஏழு தொழிற்சாலேகள் எனக்குச் சொந்தமா யிருக்கின் றன. என்னிடம் பத்து மோட்டார்க்கார்கள் இருக் கின்றன. இத்தனையையும் நாணயமாய்க் கஷ்டப் பட்டு உழைத்தே நான் சம்பாதித்திருக்கிறேன்.

**மோஹன்:** அதுதான் விதி என்பது. சில பேர் செல்வத்திலே பிறக்கிறர்கள். மற்றவர்களோ உழைக்கப் பிறக்கிறர்கள்; வியர்வை சொட்டச் சொட்ட உழைத்து, வறுமையிலே உழலப் பிறக்கிறர் கள்........ஆனல், இந்த வேற்றுமைகளுக் கெல்லாம் பின்னே, ஓர் அற்புதத் திட்டம் இருக்கிறது.

**நளினி:** ரஞ்சித்! என் புருஷன் பெரிய கவி; அதோடு பெரிய தத்துவதர்சி. (ஒரு தட்டில் தேநீ ரும் பணிகாரங்களும் எடுத்துக்கொண்டு, அத்தை பிரவேசிக்கிறள்.)

அத்தை: ரஞ்சித்துக்குக் கொஞ்சம் தேத் தண்ணீர்?

ரஞ்சித்: ரொம்ப வந்தனம்.

அத்தை: ஆஹா! என்ன சந்தோஷமா யிருக்கிறது, தெரியுமா........என் வீட்டிலே நாள் பூராவும் தேநீர் ஆருய் ஓடுகிறது. ஒரு பணிகாரத்தை ருசி பாருங்களேன்........நானே சுட்டது, ரஞ்சித்! என் மருமகன் பெரிய தேநீர்க் குடியன்; அதுவும், அவனுக்குத் தேநீர் ரொம்பக் கெட்டியா யிருக்கவேண்டும். ஆனுல், அது ஏன் என்று நான் அறிவேன்........கலைஞனுக்கு உற்சாகமூட்ட ஏதாவது லாகிரி வேண்டி யிருக்கிறது. தினம் படுக்கப் போகுமுன் கொஞ்சம் 'போர்ட் ஒயின்' அல்லது பிராந்தி குடிக்கும்படி, நான் அவனுக்குச் சொல்லுகிறேன். அவனுக்கு அது நல்லது. முடுக்கி விட்ட வீணை மாதிரி அவன் இருக்கிருன்; இயற்கையின் அவசர பரிணமப் பிறவி என்கிருர்களே, அது அவன்தான்.

ரஞ்சித்: மிஸ் குமுதினி! நீங்கள் ரொம்பப் படித்திருக்கிறீர்கள்; ரொம்ப ஏராளமாய் வாசித்துக் கொண் டிருக்கிறீர்கள் என்று நன்ருய்த் தெரிகிறது.

அத்தை: புத்தகம் படிக்க எனக்கு நேரமிருந்தால் தேவலைதான்........ஆனுல், எனக்கு நேரம் கிடைப்பதே யில்லை. என்ருலும் அதனுல் ஒன்றும் நஷ்டமில்லை. ஏனென்ருல், நான் கண்ணை மூடிக கொண்டு யோகாப்பியாசம் செய்கிறேன். அப்போது எனக்கு, புத்தங்களிலேயுள்ள பௌதிகமும் பிறவுமான ஞானமெல்லாம் தானுகவே தட்டுப்படுகிறது. அதனுல்தான், அதிகமாய் யோசியாமலே, 'அவசர பரிணமம்' என்பது போன்ற வார்த்தைகளிலே நான் தடுக்கி விழுகிறேன்........எனது மருமகன் உங்களுக்குச் சொல்லுவான். அப்பா! என் மருமகன் எப் பேர்ப்பட்ட மேதை தெரியுமா?........

**மோஹன்:** அத்தை! நான் ஒரு மேதை என்று சதா எனக்கு ஞாபக மூட்டிக்கொண்டே யிராதே. மேலும், ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்பக் கேட்டால் யாருக்கும் பிடிக்காது.

**அத்தை:** நமது குடும்பம் மேதைகள் நிறைந்த குடும்பம், ராஜா! உன்னையே பார், என்னைத்தான் பாரேன்...........என் சொந்த வழியில், நானும் ஒரு மேதைதான்; அதை நீ மறுக்க முடியாது...........

**ரஞ்சித்:** எனக்கு அது தெரியும், மிஸ் குமுதினி....

**அத்தை:** தயவு பண்ணி, மிஸ் குமுதினி என்று கூப்பிடாதீர்கள்...........உங்களுக்கு ஆட்சேப மில்லா விட்டால், என்னைக் 'குமுதினி அத்தை' என்று அழையுங்கள். என் வாலிபத்தை எனக்கு ஞாபக மூட்டாதீர்கள். நான் கிழவி என்றே எனக்கு நீங்கள் ஞாபக மூட்ட வேண்டும்...........ஆனால், நான் கிழவி யாய்த் தோன்றவில்லை; தோன்றுகிறேனா, மோஹன்?

**ரஞ்சித்:** பார்வைக்கு நீங்கள் கிழவியாய்த் தோன்றவேயில்லை...........அன்றியும்........நான் ஒன்று சொல்லலாமா? நான் பார்த்த அநேக வாலிபப் பெண்களை விட, நீங்கள் அதிக வாலிபமா யிருக்கிறீர் கள்; இதற்குமேல் என்ன சொல்லக்கிடக்கிறது!

**அத்தை:** என்னைப் பரிகாசமா செய்கிறீர்கள், ரஞ்சித்? பரிகாசமா? இல்லையென்றே நினைக்கிறேன். நீங்கள் ஒரு பணக்காரர்; ஆகையால், ஒரு கனவான். நான் வாலிபமா யிருக்கிறேன் என்று நீங்கள் சொல்லு வது சரிதான். (அவர் காதோடு கிசுகிசுக்கிறாள்.) உங்களிடம் ஒரு ரகஸ்யம் சொல்லுகிறேன். வாலிபர் கள் அத்தனை பேரும் என்மேல் காதல்கொண்டு விடு கிறார்கள்........நானோ அவர்களை என் சொந்தப் பிள்ளை களைப்போல் பாவிக்கிறேன். எப்படி!

**ரஞ்சித் :** ஓ! இதில் எனக்கு ஆச்சர்யமில்லை. உங்கள் மாதிரி அத்தையைப் படைத்திருப்பது, மோஹனுக்குப் பெரிய அதிர்ஷ்டமாகும்.

**அத்தை :** மோஹன் மாதிரி ஒரு மருமகனைப் படைத்தது எனக்குந்தான் அதிர்ஷ்டம்.......அவன் எவ்வளவு சாதுவாய், பணிவாய் இருக்கிறான் !........ என் மனசை ஒருபோதும் அவன் புண்படுத்துவ தில்லை. மோஹன் ஒரு குழந்தை. உலகம் அவனை வெகு சுலபமாய் ஏமாற்றி விடலாம்.

**ரஞ்சித் :** லட்சியக் கலைஞனின் லட்சணம் அது தானே.

**நளினி :** அவர் ரொம்ப வெள்ளை உள்ளம் படைத்தவர்.

**அத்தை :** அதனால்தான் அவன் விஷயத்தில் நான் இவ்வளவு கவலை எடுத்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் என் மருமகனை நான் கண்காணித்து வருகிறேன் ; கண்ணை இமை காப்பதுபோல், வெகு ஜாக்கிரதையாய்க் காத்து வரு கிறேன். கலைஞன் கடவுளே ஆவான் என்பது என் சொந்த அபிப்பிராயம். அவனை எப்போதும் உன்னத மானதொரு பீடத்தில் வைத்திருக்கவேண்டும். அவன் உலகிலுள்ள மற்றவரைப்போல் அல்ல. உண்மை யைச் சொல்லப்போனால், அவனுக்கு உலகத்திடமோ உலகத்து மனிதரிடமோ எவ்வித சம்பந்தமும் கிடை யாது. சுருங்கச் சொன்னால், தெய்விக சக்தியின் விசித்திர வெளியீடு அவன்.

**மோஹன் :** சரிதான் ; இதையெல்லாம் கேட் காமல் நான் ஒதுங்கிப் போகவேண்டியதுதான். என்னைப் பற்றிய புகழுரைகளைக் கேட்கையில், எனக்கு ரொம்ப ஸங்கோஜமா யிருக்கிறது.

**அத்தை :** இல்லை........மோஹன்! நீ இங்கேயே உட்கார்ந்திருக்கவேண்டும். உன்னைப் பற்றி நல்லதோ கெட்டதோ எதை வேண்டுமானாலும் என்னிஷ்டப் படி சொல்ல எனக்கு உரிமை யுண்டு; இதை நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதை யெல்லாம் சொந்த விருப்பு வெறுப்பின்றிப் பொதுப் படவே சொல்லுகிறேன்; நீயும் அவற்றைப் பொதுப் படவே ஏற்றுக்கொள்ள வேண்டும். நீ ஒரு மேதையா யிருப்பது உனக்குப் பெருமை யல்ல: உன்னை மேதை யாகப் படைத்தவர் கடவுள்; மேதையாகப் போஷித்து வளர்த்தவள்........நான்.

**மோஹன் :** பேஷ்........இன்னும் சொல்லு........ நான் பொதுப்படையாகவே கேட்கிறேன்.

**ரஞ்சித் :** அவள் பேசட்டும்; அவளது பேச் சைக் கேட்கக் கேட்க ஆனந்தமா யிருக்கிறது.

['அம்மா' என்று சிறுமி கூப்பிடும் குரல் கேட்கிறது]

**நளினி :** நண்பர் ரஞ்சித்! மன்னியுங்கள். கொஞ்சம் போய் வருகிறேன். (வெளியே செல் கிறாள்.)

**ரஞ்சித் :** சமீபத்தில் நீங்கள் ரொம்ப எழுதிக் கொண்டிருக்கிறீர்களோ, ஐயா?

**அத்தை :** ஆமாம்; அவன் எவ்வளவு எழுதி யிருக்கிறான் என்பதை நீங்கள் அளவிடவே முடி யாது. அவனது இலக்கிய சிருஷ்டிகளை அளக்க, இனி நமக்கு, கஜக்கோல்தான் வேண்டும்.

**ரஞ்சித் :** எதைப்பற்றி நீங்கள் சமீபத்தில் எழுதியிருக்கிறீர்கள்?

**அத்தை :** மிக்க உயர்ந்த ரகமான எழுத்து. இந் தக் காலத்துக்கு மிகவும் மிஞ்சிய முற்போக்கான

விஷயம் என்பது என் சொந்த அபிப்பிராயம். அவன் காலமான பிறகுதான்—யுத்தங்களெல்லாம் நின்று வர்க்கப் போராட்டம் ஒழிந்து, புலியும் பசுவும் ஒரு துறையில் நீர் பருக, பாம்பும் தேரையும் கூடி விளையாட, முதலாளியும் தொழிலாளியும் ஒன்று சேர்ந்த காலத்திலேதான்—அவனுடைய எழுத்துக்களை ஜனங்கள் மதித்துப் போற்றுவார்கள்; புரிந்து கொள்வார்கள்.

**மோஹன் :** கவனியுங்கள்; வாழ்வின் ஆழ்ந்த உட்பொருளைப் பற்றியே நான் எழுதுகிறேன்.

**ரஞ்சித் :** அப்படி யென்றால் என்ன ?

**மோஹன் :** ஆன்மாவையும் ஆண்டவனையும் பிரபஞ்சத்தின் பின்னுறையும் மகத்தானதொரு பிரக்ஞையையும் பற்றி எழுதுகிறேன்.

**அத்தை :** அந்தரார்த்தங்களை வைத்து எழுதும் எழுத்தாளன் அவன். அந்தரத்துக்கும் அதற்கும் ஏதோ சம்பந்தமென நினைத்து விடாதீர்கள்.

**ரஞ்சித் :** ஜீவ சோகத்தையும் வாழ்க்கையின் துயரத்தையும் தற்கொலையையும் பற்றியே இக்கால எழுத்தாளர்கள் எழுதுவதாகச் சொல்லுகிறார்களே !

**அத்தை :** அபஸ்மாரங்கள்தான் அப்படி எழுதும் !

**மோஹன் :** (யோகியைப் போன்ற பாவனையுடன்) சிந்தித்துப் பார்த்தீர்களானால், சோகம் என்பது எவ்விடத்தும் இல்லை. தெய்வத்தின் திருக் கரத்தை எங்கும் காணலாம். அது மிக மர்மமாய் வேலை செய்கிறது. ஓர் அழகுப் போட்டியில் பரிசு பெற்ற ஒருவனைப்போலவே, பெருவியாதி பிடித்த ஒருவனுக்கும், பிரக்ருதியின் முடிவான அழகுத் திட்டத்திலே இட

முண்டு. அவ்விருவரும் ஒன்றுபோல்தான்; ஒன்றேதான்.

ரஞ்சித்: அழகுப் போட்டியில் பரிசு பெற்ற ஒருவனும் பெரு வியாதிக்காரனும் ஒன்ரு?........... எனக்கு இது புரியவில்லை. ஆனல், நான் ஒரு தொழிற்சாலை முதலாளிதானே; இலக்கிய சிந்தனையிலும் ஆத்மார்த்த உண்மையிலும் வல்லவன் அல்லவே!

அத்தை: உங்களால் புரிந்துகொள்ளக் கடினமான ஏதோவோர் ஆழ்ந்த ரகஸ்யத்தைத்தான் அவன் இப்படிச் சொல்லுகிருன்.

மோஹன்: நான் சொல்ல வந்தது இதுதான்—தெய்விக நோக்கம் ஏதோ ஒன்றிருக்கிறது என்ற நம்பிக்கை மட்டிலும் நமக்குண்டானல், எங்கும் நிறைந்ததொரு பரிபூர்ணத்தையும் ஆராய்ச்சிக்கு மிஞ்சியதொரு பரிபக்குவத்தையும் நாம் காண்போம். உலகில் பிச்சைக்காரன் இருக்கத்தான் இருக்கிருன். ஆனல், பணக்காரன் இருப்பது சாத்தியமாக வேண்டாமா; அதற்காகவே பிச்சைக்காரன் இருக்கிருன். பகலின் அழகைச் சாத்திய மாக்குவதற்காகத்தான் இரவு இருக்கிறது. வாழ்வை நிரூபிக்கவே சாவு வருகிறது.

அத்தை: வாழ்வையும் பிரபஞ்சத்தையும் பற்றிய முழு ரகஸ்யமும் இதுதான்.

மோஹன்: நாங்கள் நேர்மாருன திசைகளில் செல்லுகிறோம். எனக்கு ஓய்வு இருக்கிறது; நான் எழுதுகிறேன். வீதியிலுள்ள பிச்சைக்காரனுக்கும் ஓய்வு இருக்கிறது; ஆனல், அவன் பிச்சையெடுக்கிருன்! நாங்கள் இருவரும் ஒரே தெய்வ சித்தத்தின் தலையும் பூவும் போல் இருக்கிறோம்.

ரஞ்சித்: எனக்கு இந்த வேதாந்தமே புரிவதில்லை. என்ருலும், மோஹன் மாதிரி தத்துவதர்சிகள்

நமது நாட்டில், அதுவும் இந்தக் காலத்தில், இருப்பது எனக்குச் சந்தோஷமா யிருக்கிறது. ஏனெனில், இப்போது எல்லாரும் முற்போக்கு எழுத்தாளர்களைப் பற்றியே பேசுகிறார்கள்; இரும்புக் கட்டிடமும் செங்கல்லுமான வறண்ட பிரத்யட்ச விஷயங்களைப் பற்றியே எழுதுகிறார்கள். உங்களைப் போன்ற கவிஞரிடந்தான், மோஹன்! நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம். உலகம் புரட்சிப் பைத்தியம் பிடித்திருக்கும் இந்தச் சமயத்திலே, சிதைவும் சீர்குலைவும் தோன்றி வரும் இந்த வேளையிலே, நீங்களே மிக உபயோகமா யிருக்கிறீர்கள். உலகத்தின் சம நிலையை நீங்கள்தான் காப்பாற்றுகிறீர்கள்.

**அத்தை:** நன்றாய்ச் சொன்னீர்கள், ரஞ்சித்! அருட் கவிகளும் அவதார புருஷர்களும் சரியான தருணத்தில் ஜனனமாகி, புரட்சிகளுக்கு விரோதமான பிரசாரம் புரிந்து, கண்ணியமான ஸ்திரீ புருஷர்களைச் சீரழியாமல் காப்பாற்றுகிறார்கள்; இது சரித்திரத்திலே காணக் கிடைக்கும் சிறந்ததோர் உண்மையாகும். ஆனால், ஓர் அபாயம் இருக்கிறது: பலமானதோர் இயக்கம் ஆரம்பிக்கப்படும்போது, புதிய சக்திகளும் வேலை புரியத் தொடங்கி விடுகின்றன. மோஹன் அத்தகையதொரு யோகிதான். அப்படி யிருந்தும், சில சமயம் அவன் அதிருப்தி காட்டி விடுகிறான். அவனது முன்னேயோர் கண்ட தர்சனமே, உபநிஷத்துக்களையும் வேதங்களையும் வரைந்த மகரிஷிகளின் தர்சனமே, அவனது இயற்கையான தர்சனமாகும்; அந்தத் தர்சனத்துக்குத் துரோகமாயும் சிலபோது அவன் நடந்து விடுகிறான். 'உன் தர்சனத்துக்கு நீ உண்மையாய் நடந்துகொள். சத்தியமே உனக்கு முக்கியம்; உலகில் நடப்பதையெல்லாம் பார்த்து நீ மயங்கி விடலாகாது' என்றே நான் எப்போதும் அவனுக்குச் சொல்லி வருகிறேன்.

**மோஹன்:** இக்காலத்துக் கவிஞர்கள் ஏன் இவ்

வளவு துயரம் குடி கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவே யில்லை. ஏன் அப்படி யிருக்கிறார்கள் அவர்கள்?

**ரஞ்சித்:** சில தினங்களுக்கு முன் ஒரு கவிஞர் தற்கொலை புரிந்துகொண்டார். ஏனென்றால், அவருக்குக் கடன் ஏற்பட்டு விட்டது; அதைக் கொடுக்க அவரால் முடியாததுதான் காரணம்.

**மோஹன்:** கவிஞரே வேண்டாம், யாராயிருந்தாலும் சரிதான்; ஏன் கடனில் அகப்பட்டுக் கொள்ள வேண்டும்? அது எனக்குப் புரியவில்லை. உண்மையான கவிஞன் ஒரு போதும் பட்டினியால் வாடலாகாது.

**அத்தை:** நல்லது, ராஜா! உன்னைப்போல எல்லாக் கவிஞர்களும் அத்தையைப் படைத்திருக்கவில்லை; அதை நீ மறந்து விடுகிறாயே! ஆனால், அத்தையிருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரிதான்; தற்கொலை புரிந்து கொள்வது, கடவுளின் கண்களிலே, மகா பாதகமாகும்; அது விபசாரத்தைவிட மிகக் கொடியதாகும்.

**மோஹன்:** அது மிகக் கேவலமான கோழைத் தனம். வாழ்க்கை யென்பது நமக்குக் கடவுள் அளித்த—இல்லை, இரவல் கொடுத்த—ஒரு மகத்தான சந்தர்ப்பமாகும். அதை வீணாக்க நமக்கு உரிமையில்லை. சற்றும் கலாருசி இல்லாதவர்களே, தற்கொலை செய்துகொள்ளுவார்கள். என் உயிரே போவதானாலும் சரி, நான் தற்கொலை செய்துகொள்ளவே மாட்டேன்.

**அத்தை:** எவ்வளவு அழகாய்ச் சொல்லி விட்டாய்!

**ரஞ்சித்:** மோஹன்! கீழ்ச் சாதி மக்களே தற்கொலை செய்துகொள்வார்கள்.

**அத்தை:** கண்ணியம் வாய்ந்த உயர் வகுப்பு ஜனங்கள் அதைப்பற்றி நினைக்கவும் மாட்டார்கள்.

**மோஹன்:** ஆனால் வாழ்க்கை சலித்துப் போனதால், கோடீசுவரர்கள் கூடத் தற்கொலை புரிந்து கொண்டதாக, நான் கேள்விப்பட் டிருக்கிறேன்!

**அத்தை:** அவர்கள்தான் விதியை நிரூபிக்கும் விலக்குகள்.

**மோஹன்:** வாழ்க்கை யென்பது எவ்வளவு அழகான சங்கதி!

**அத்தை:** உன் பொருட்டு நான் சந்தோஷிக்கிறேன், மோஹன்! இவ்வுலகின் லௌகிக வாழ்க்கையை விட்டு—அதன் கோரத்தை யெல்லாம் அறியாது ஒதுங்கி—நீ வாழ்வது சாத்தியமா யிருக்கிறதே, அதற்கு நான் சந்தோஷிக்கிறேன். உன்னுள்ளே அழகின் ஆழ்ந்த தன்மையும் தெய்விக தர்சனமும் உறைவதால்தான், நீ இவ்வளவு பரிசுத்தமாயும் மாசுபடாமலும் இருக்கிறாய்; நிறைந்த நம்பிக்கை யுடையவனா யிருக்கிறாய். உன் சிருஷ்டிகளை—ஆத்மானுபவத்தையும் தேவ கணங்களையும் பற்றிய உனது வரகவிகளையும் அருட் கதைகளையும்—நீ ஐரோப்பாவுக்கு எடுத்துச் செல்லப் போகிறாய்; துன்புற்று வருந்தும் உலகத்துக்கு, மகா சௌந்தர்யத்தைப் பற்றியதோர் இன்பச் செய்தியையே, அதன் மூலம் நீ கொண்டு செல்லப்போகிறாய். ஒரு வேளை அந்த உன் செய்தியால் யுத்தங்களெல்லாம் நின்றுவிடக் கூடும்; உலக சகோதரத்துவம் ஏற்படவுங்கூடும்.... அதைத்தான் நான் எதிர் பார்த்துக்கொண் டிருக்கிறேன்.

**ரஞ்சித்:** அதனால் கிடைக்கக்கூடிய பெருமை யெல்லாம் உங்களைத் தான் சேரும், அத்தை குமுதினி!

**மோஹன்:** நான் அங்கே போயிருக்கும்போது வெளி நாட்டில் செய்துவரும் வேலைகளை யெல்லாம் நீ அவ்வப்போது கவனித்து வருவாய் என்று நம்பு கிறேன்.

**அத்தை:** ஆஹா! பத்திரிகைகளெல்லாம் உனது நடமாட்டங்களைப்பற்றிய தகவல்களைப் பிரசுரித்துக் கொண்டிருக்கும். உன்னைப்பற்றிப் பத்தி பத்தியாய் எழுதும்படி செய்து, அதற்கு வேண்டிய பணத்தை நான் அவற்றுக்குக் கொடுத்துக் கொண்டிருப்பேன். பணங் கொடுத்தால், பத்திரிகைகள் நம்மிஷ்டப்படி எழுதுகின்றன.

**ரஞ்சித்:** பேரும் புகழும் வேண்டுவோ ரெல்லாம் விளம்பரச் செலவைக் கொடுத்துத்தா னாகவேண்டும். நல்லது, நான் இப்போது போக வேண்டும்........சுகமான தேநீரும் பணியாரங்களும் அளித்ததற்காக, உங்களுக்கு வந்தனம்.

**அத்தை:** அந்த ஸந்தோஷம் பூராகவும் எனக்கு அல்லவா?

**ரஞ்சித்:** ஒரு வார காலம் நான் நகரத்தை விட்டு வெளியே போயிருப்பேன். ஆயினும், நீங்கள் கப்பலில் புறப்படுமுன், நான் கட்டாயம் திரும்பி வந்து சேருகிறேன். நேரே யிருந்து உங்களை நான் வழியனுப்பவேண்டும்.

**மோஹன்:** 'வைஸிராய் ஆப் இந்தியா' என்ற கப்பலில் புறப்படலாமென நாங்கள் எண்ணி யிருக் கிறோம்.

**ரஞ்சித்:** ஜோரான கப்பல்; ஜோரான கப்பல்.

**அத்தை:** கௌரவமான கப்பல். பி அண்ட் ஒ கப்பல்களே ரொம்ப கௌரவமானவை.

[வேலைக்காரன் பிரவேசிக்கிறான்.]

**வேலைக்காரன்:** அம்மா! பால்காரன் வந்திருக்கிறுன்.

**அத்தை:** எதற்காக வந்திருக்கிறுன்?

**வேலைக்காரன்:** பணம் வேண்டுமாம்.

**அத்தை:** இந்தப் பால்காரன்களும் சலவைக்காரன்களும் வேலைக்காரன்களும் பெரிய உபத்திரவமா யிருக்கிறுன்கள்! எப்பொழுது பார்த்தாலும் பணம் கேட்கிறுன்கள். ஒரு வாரம் வரையில் என்னுல் பணம் கொடுக்க முடியாதென்று சொல்லு அவனிடம்.

[வேலைக்காரன் வெளியே செல்கிறுன்.]

**ரஞ்சித்:** ஆமாம், இந்தக் கீழ்ச்சாதிக்காரன்களே, எப்போதும் மகா உபத்திரவந்தான். சொல்ப ரூபாய்க்காக நம்மை ஓயாமல் தொந்தரை செய்கிறுன்கள். ஏதோ அவன்களை நாம் மோசம் செய்துவிடப் பார்ப்பதுபோல், அவசரப் படுகிறுன்கள். படிப்பில்லாப் பாமரங்கள் தானே!

[டெலிபோன் மணி அடிக்கிறது.]

**அத்தை:** ஆனுல், அவன்களுக்கு அப்படி என்ன பிரமாதச் செலவு?

[பால்காரனை அழைத்துக்கொண்டு, வேலைக்காரன் மீண்டும் வருகிறுன்.]

**அத்தை:** உள்ளே வர இந்தப் பால்காரனுக்கு எவ்வளவு துணிச்சல்! நீ வெளியே நில்லடா!

**பால்காரன்:** அம்மா! நான் ஒரு மாசம் பூராவும் காத்திருந்துவிட்டேன். இரண்டு மாசப் பணம் பாக்கி யிருக்கிறதே?

**அத்தை:** என்னப்பா! உன் பணம் ஓடிப் போய்விடாது. நீ காடியாய்க் கத்தினுலும் சரிதான்;

இன்னும் ஒரு மாசம் வரையில் உன் பணம் கிடைக்காது. தவிர, நீ பாலா கொடுக்கிறாய்? தண்ணீரையல்லவா கொடுக்கிறாய்! உனக்குப் பணமே கொடுக்கப் படாது.

**மோஹன் :** அத்தை! இந்த ஆளை வெளியே நிற்கச் சொல். இவன் என்ன நாற்றம் நாறுகிறான்! இவனுடைய துணியெல்லாம் ஒரே அழுக்காயிருக்கிறது. கீழ்ச் சாதியான்களோடு சண்டை போடாதே; அதுவும் என் படிப்பறையில். என் படிப்பறையிலே அமைதி நிலவ வேண்டும்.

**அத்தை :** பார்! காது கேட்கிறதா உனக்கு! இவ்வுலகில் என் மருமகனுக்கு, அழுக்கு, சந்தடி இந்த இரண்டும் சகிக்காது. ஆகையால், போ வெளியே.

**பால்காரன் :** முதலில் எனக்கு என் பணத்தைக் கொடு. நான் போய்விடுகிறேன்........வீட்டிலே என் குழந்தைகள் பட்டினியால் வாடுகின்றன.

**அத்தை :** அவர்களுக்குப் பாலைக் கொடுத்துக் குடிக்கச் சொல்லேன். ஏன் அவர்கள் பட்டினி கிடக்க வேண்டும்? உன் வீட்டிலே பசுக்கள் இருக்கின்றன. அவர்கள் பால் குடிக்கலாமே; மற்றவர்களை விட நன்றாய்க் குடிக்கலாமே?

**மோஹன் :** அத்தை! அவன் நாற்றமாய் நாறுகிறான். போடா வெளியே.

[பால்காரனருகே வேலைக்காரன் சென்று, அவனைப் பிடித்து வெளியே தள்ளுகிறான்.]

**பால்காரன் :** (தன்னை வேலைக்காரன் துரத்திக் கொண்டேயிருக்கையில்) சாமி இருந்தால், அல்லது பூதமாவது இருந்தால், உன்னை அதுதான் கேட்க வேண்டும்.

[வேலைக்காரனும், பால்காரனும் வெளியே செல்கிறார்கள்.]

**ரஞ்சித்:** மோஹன் எவ்வளவு உயர்ந்த உணர்ச்சிக் களஞ்சியமாயிருக்கிறார்! கீழ்ச்சாதி மக்களுக்கு எவ்வளவு துடுக்குத் தனம் வந்திருக்கிறது, பார்த்தீர்களா? இந்த மாதிரி எதிர்ப்புக்கு இடங் கொடுத்து வந்தோமானால், நம் எல்லார் பாடும் ரொம்பத் திண்டாட்டந்தான்.

[நளினி பிரவேசிக்கிறாள்.]

**நளினி:** (பரபரப்புடன்) அந்தப் போக்கிரிப் பால்காரன்........என்னை அவமரியாதையாய்ப் பேசினான். வெளியே போகையில், அத்தையைத் திட்டினான்.

**மோஹன்:** அத்தை! இது உன் குற்றமேயாகும்.

**நளினி:** அயோக்கியன்!

3978

**ரஞ்சித்:** ஆத்திரப்படாதே.

**நளினி:** அந்த மிருகத்துக்கு நாம் ஒரு பாடம் போதிக்க வேண்டும்.

**ரஞ்சித்:** அவனைப்பற்றிப் போலீஸாரிடம் சொல்லி, அகாரணமாய்த் தாக்கியதாகக் கைது செய்யும்படி செய்கிறேன்.

**நளினி:** எப்படி? நம்மிடம் அதற்கு ருசுக்கள் இல்லையே!

**ரஞ்சித்:** ஆனால், பணம் இருக்கிறது. போய் வருகிறேன்.

[ரஞ்சித் வெளியே செல்கிறார்.]

**மோஹன்:** அத்தை! நான் சொல்கிறேன், இது உன் குற்றமேயாகும். காலாகாலத்தில் இந்தப்

பயல்களுக்கு என் பணத்தைக் கொடுக்கமாட்டே னென்கிறாய்?

**அத்தை:** தர்க்கத்துக்கு நான் தயாரில்லே, மோஹன்! தெரிகிறதா? என்னை மறுத்துப் பேசக் கூடாது. இந்தப் பயல்களிடம் எப்படி நடந்து கொள்வதென்று எனக்குத் தெரியும். வீட்டைப் பார்த்துக் கொள்பவள் நான் அல்லவா? நீ இதில் எல்லாம் தலையிடக்கூடாது.

**மோஹன்:** ரொம்ப ஸரி; நான் ஒரு வார்த்தை யும் பேசவில்லை.

**அத்தை:** (சாந்தமடைந்து) ராஜா! இதற்காக வருத்தப்படாதே. இலௌகீக விவகாரங்களைப்பற்றி யெல்லாம் உன் மூளையைக் குழப்பிக் கொள்ளாதே; அது எனக்கு இஷ்டமில்லை. நீ பாட்டுக்கு எழுதிக் கொண்டு போ. பிரத்யட்ச வாழ்க்கையில் காணப் படும் விஷயங்கள், கவிஞருக்கும் கலைஞருக்கும் உண்மை யாகமாட்டா.

[டெலிபோன் மணி மீண்டும் அடிக்கிறது.]

**அத்தை:** அடேயப்பா! இந்த டெலிபோன் ஒரு உபத்திரவம். என்ன தொல்லை கொடுக்கிறது! (அதனிடம் செல்கிறாள்) ஆமாம்........யார்?........நீங் கள் யார்?........ஆமாம்........நான்தான் அத்தை........ என்ன வேண்டும்?........மோஹனா? மோஹன் இளைப் பாறிக் கொண்டிருக்கிறான். அவன் டெலிபோனிடம் வரமுடியாது........இல்லை........அவன் இந்த அறையில் தான் இருக்கிறான்; ஆனால், ரொம்பக் களைத்திருக் கிறான். ஆகையால், டெலிபோனிடம் வர முடி யாது........இருக்கட்டும்; நீங்கள் யார்?

**மோஹன்:** யாரோ சில வாலிபர்கள் என்று நினைக்கிறேன்........உன்னை ஏதோ பதினாறு வயது பால குமாரி என்று நினைக்கிறார்க ளாக்கும்!

**அத்தை:** கொஞ்சம் உரக்கப் பேசுங்கள்....

**நளினி:** அது டெலிபோனின் குற்றமல்ல; பேசுகிறவர் குற்றமுமல்ல. இவள் செவிடு.

**அத்தை:** நீங்கள் யார்? ஓ.......மன்னியுங்கள்.......என் வக்கீலா? ஹல்லோ.......நமஸ்காரம், ஸ்வாமி!.......என்ன சேதி? அவசர ஜோலியா?

**மோஹன்:** வக்கீலா? அவசர ஜோலியா?

**அத்தை:** எனக்குச் சொல்ல மாட்டீர்களா? மோஹன் அசதியா யிருக்கிருன்..........பாங்கியைப் பற்றிய சங்கதியா?

**மோஹன்:** இந்த ராத்திரி நேரத்திலா?

**அத்தை:** என்ன, என்ன, என்ன?

**நளினி:** அவள் என்னவோ பைத்தியம்மாதிரி ஆடுகிருளே.......கிழ வயசு அல்லவா!

**அத்தை:** (டெலிபோனுக்குப் பக்கத்திலுள்ள ஒரு நாற்காலியில் சாய்ந்துகொண்டே) என்ன! முறிந்து போயிற்று? மோஹன்!..............இது உண்மையா?

[அத்தை மூர்ச்சையடைகிருள்? அவள் கையிலிருந்த டெலிபோன் ரெஸீவர் தரையில் விழுகிறது. வேலைக்காரன் பிரவேசிக்கிருன்.]

**வேலைக்காரன்:** அம்மா! பால்காரன் தூர்ப் பாஷையாய்ப் பேசினுன்; உங்களையும் வீடு அடங் கலையுமே சபித்துவிட்டுப் போனுன். "தெய்வம் என்று ஒன்று இருந்தால், அது உங்கள் வீட்டை நாசமாக்கி விடும்" என்ருன்.

**மோஹன்:** (வேலைக்காரனின் கழுத்தைப் பிடித்து நெரித்துக்கொண்டே) பால்காரன் பாழாய்ப் போக! அவன் தெய்வமும் பாழாய்ப் போக!

[அரங்க மேடை முழுவதும் இருள் சூழ்கிறது. மெல்ல மெல்ல, கனவில் தோன்றுவது போல, சிறுமி தனது இரவு அங்கியை அணிந்துகொண்டு மிதந்து வருகிறாள். அவள் கையிலே பிடித்திருக்கும் மெழுகுவர்த்தியின் ஜ்வாலை அவளது முகத்தை ஒளி செய்கிறது.]

**சிறுமி:** நான் ஒரு கனாக் கண்டேன்; படகைக் கடல் விழுங்கி விட்டது!

# அங்கம் 2

[ஆறுமாதங்களுக்குப் பிறகு, வீடு சீர்குலைந்து கிடக்கிறது. சாமான்களெல்லாம் போய்விட்டன. காலி அறை, வறுமையையும் நாசத்தையும் விளம்பரம் செய்துகொண்டிருக்கிறது. ஒரு கந்தையைப் போர்த்திக்கொண்டு கரடுமுரடான விசிப்பலகையொன்றில், மோஹன் படுத்து உறங்குகிறான். காலை நேரம். சித்தப் பிரமை கொண்டவளாய், ஏதோ ஆவி ரூபம்போல், அத்தை பிரவேசிக்கிறாள். பாங்கி முறிந்ததால்., அவளது தளுக்கான நாடி நரம்புகளெல்லாம் வெலவெலத்து விட்டன; அதனால், அவளது ஆயுட் காலம் பூராவுக்குமே நீடித்த மனமுறிவு ஏற்பட்டுவிட்டது. ஏதோ சில சமயங்களில் மாத்திரமே மனத்தெளிவோடு பேசுகிறாள்.]

**அத்தை :** திருடர்கள்! கொள்ளைக்காரர்கள்! என் பணத்தை, நான் மண்ணுக்குள்ளே குழி தோண்டிப் புதைத்து மூடிவைத்திருக்க வேண்டும்............ அதற்குப் பதிலாக, அவர்கள் எனக்கே ஒரு குழி தோண்டிப் புதைத்து மண்ணைத் தூவி மூடிவிட்டார்கள்............(விம்மி அழுகிறாள்) கொள்ளைக்காரர்கள்! (மோஹனிடம் செல்லுகிறாள்) இந்தச் சோம்பேறிக் கழுதையைப் பார்! எழுந்திரடா, சோதா! சோம்பேறிச் சோதா! சீரழிந்த குடும்பத்திலே ஒரு உபயோகமும் இல்லாதிருக்கும் பேடியே! ஊரெல்லாம் விழித்துக்கொண்டு விட்டது; நீ மட்டில் இன்னும் குறட்டை விடுகிறாய். திருடன்! பாங்கி விழுந்தது! இடி விழுந்தது!

[சிறுமி பிரவேசிக்கிறாள்.]

**சிறுமி:** அத்தை! நீ ஏன் இவ்வளவு துக்கமா யிருக்கிறாய்?

[அத்தை விரல் விட்டு ஏதோ எண்ணுகிறாள்.]

**சிறுமி:** அத்தைப் பாட்டி! நீ எப்பொழுது பார்த்தாலும் என்னவோ எண்ணிக்கொண்டே யிருக்கிறாயே! அதென்ன எண்ணுகிறாய்?

**அத்தை:** என் தலையிலுள்ள நரைமயிர்களை....

**சிறுமி:** பாவம்! அத்தைப் பாட்டி! நீ ஏன் இவ்வளவு துக்கமா யிருக்கிறாய்?

**அத்தை:** திருடர்கள்! திருடர்கள்!

**சிறுமி:** நான் பாடுகிறேன், கேட்கிறாயா? ஆடுகிறேன், பார்க்கிறாயா?

**அத்தை:** அவர்கள் அத்தனை பேரும் திருடர்கள்! நீ ஒரு திருடி! உன் அம்மா ஒரு திருடி! உன் அப்பா ஒரு திருடன். அவர்கள் என்னைக் கொள்ளையடித்து விட்டார்கள். நான் ஒரு குழி தோண்டி அதைப் புதைத்து வைத்திருக்க வேண்டும்.

**சிறுமி:** புதைத்திருக்க வேண்டுமா? எதை, அத்தைப் பாட்டி?

**அத்தை:** (சிறுமியை ஏதோ மனோவசியம் செய்வதுபோல, அவளது கண்களை உறுத்துப் பார்க்கிறாள்) நீ........

[அப்படியே அத்தை மெல்ல நழுவுகிறாள். சிறுமி அழுதுகொண்டே, தகப்பனிடம் செல்கிறாள்.]

**சிறுமி:** என் அப்பாவைத் திருடன் என்றாளே........என்ன பாவம்! எனக்குப் பயமா யிருக்கிறது. அப்பா! நீ என்னோடே பேசமாட்டையா?

என்னை யாரும் லட்சியம் செய்ய மாட்டேனென்கிறார்களே!

**மோஹன்:** (மனமுடைந்து நோயுற்று) ராணி! உன் அப்பா உன்னிடம் வாஞ்சையாய் இருக்கிறார். நீ இப்படி அழக்கூடாது.

**சிறுமி:** நான் அழவில்லை.......உனக்கு நான் துக்கம் உண்டாக்கமாட்டேன். அப்பா! உனக்கு நாட்டிய மாடிக் காட்டட்டுமா? அதைப் பார்த்தால், உனக்குச் சந்தோஷம் உண்டாகுமா? (அவனை முத்தமிடுகிறாள்) அப்பா! உன் வாய் ஏன் இன்றைக்கு நாறுகிறது!

**மோஹன்:** என் ஈரற்குலை நோவுற் றிருக்கிறது. என் கண்ணே! நீ அழாதே.

**சிறுமி:** என்கிட்ட உனக்குப் பிரியந்தானே, அப்பா?

**மோஹன்:** உலகத்தையே வேண்டுமானாலும் உனக்காக ஈடுவைப்பேன், குஞ்சு! அப்பாவுக்கு உன்னிடம் அன்பு; உனக்காகத்தான் அவன் உயிர் வாழ்கிறான். தோழி ஷீலாவுக்கு உன்னிடம் அன்பு.

**சிறுமி:** அம்மாவுக்கு என்னைக் கண்டால் பிடிக்கவே யில்லை....... என்னைக் குழியை வெட்டிப் புதைக்கவேண்டு மென்று அவள் நினைக்கிறாளாம்! அத்தைப் பாட்டி இப்படிச் சொல்லுகிறாள்.

**மோஹன்:** அது நிஜமல்ல...........அம்மாவுக்கு உன்னிடம் பிரியந்தான்........

**சிறுமி:** இல்லவே யில்லை........ அவளுக்கு என்கிட்டப் பிரியமிருந்தால், அடிக்கடி என்னை அவள் இப்படி அடிப்பாளா? சில நாளைக்கு முன் ஒரு நாற்காலியை என்மேல் விட்டெறிந்தாளே, உனக்கு ஞாபக மில்லை? அது என் வயிற்றிலே காயப்படுத்தி

விட்டது. ஆனால், அது அப்போது வலிக்கவில்லை; இப்போது வலிக்கிறது.......தெரிந்ததா? இங்கே அம்மாவும் பாட்டியும் எப்போது பார்த்தாலும் என்னை இம்சிக்கிறார்கள்.......அவர்கள் என்னைக் கிள்ளுகிறார்கள்; காதைப் பிடித்து இழுக்கிறார்கள்; கண்ட சாமானை யெல்லாம் என்மேல் விட்டெறி கிறார்கள்.

**மோஹன்:** அதை யெல்லாம் மறந்துவிடு, கண்ணே! அம்மா கொஞ்சம் சோர்ந்து போய் நோய் பிடித்திருக்கிறாள். அதனால்தான் இப்படி விசித்திரமாய் நடக்கிறாள், ராணி!

**சிறுமி:** அவள் ஒரு போதும் வீட்டில் இருப் பதே யில்லையே; எப்பொழுது பார்த்தாலும் ரஞ்சித் தோடு ஓடிக்கொண்டே யிருக்கிறாளே! எனக்கு அவளைக் கண்டால் பிடிக்கவில்லை. அப்பா! அம்மா வுக்கு உன்கிட்டப் பிரியமுண்டா?

**மோஹன்:** உனக்கு என்னிடம் பிரியமுண்டா?

**சிறுமி:** சந்தேக மில்லாமல்; கூடை கூடை யாய் உண்டு.

**மோஹன்:** நீ உன் அம்மாவின் குழந்தை; உன் மூலமாய் உனது அம்மா என்னிடம் பிரியம் செலுத்துகிறாள்.

**ராணி:** நீ நல்ல அப்பா (அவனைத் தடவிக் கொஞ்சுகிறாள்.)

[வெளியே யிருந்து ஓர் அழுத்தமான குரல் கேட்கிறது]

**குரல்:** வீட்டில் யார்?

**மோஹன்:** அது நமது சிநேகிதனான தச்சன் என்று நினைக்கிறேன்.......குரல் தெரிகிறது. என்ன ஆண்மையான குரல்!

[தச்சன் பிரவேசிக்கிறன்.]

**சிறுமி :** யார் அது? உள்ளே வாருங்கள்.

**தச்சன் :** நமஸ்காரம், சுவாமி! வெகு நாளைக்குப் பிறகு இப்பொழுதுதான் உங்களைப் பார்க்கிறேன். பல வருஷங்கள் ஆகிவிட்டதுபோல் அல்லவா தோன்றுகிறது........நீங்களும் உங்கள் வீட்டு அம்மாவும் வந்து, உங்கள் பிரயாணத்துக்கு ஒரு மரப் பெட்டி வேண்டுமென்று உத்தரவு கொடுத்தீர்களே, அப்பொழுதுதான் கடைசியாகப் பார்த்தேன். உங்கள் பிரயாணம் சுகமா யிருந்ததா, சுவாமி?

**மோஹன் :** போகவே யில்லை. நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது, ஆசாரியாரே!

**தச்சன் :** வாஸ்தவம், சுவாமி! நாங்கள் தொழிலாளிகள்தான் சந்தேகப்படுகிறோம்; கடவுள் மாடியிலே வாழ்கிறரா, தரையிலே வாழ்கிறரா என்று சந்தேகம். கடவுள் இருந்தால், அவரும் ஏழைகளைச் சுரண்டும் ஒரு முதலாளி போலத்தான் இருக்கவேண்டும். நல்லது; அம்மா செய்யச் சொன்னர்கள் இதை—ஒரு தொட்டில்.

**மோஹன் :** தொட்டிலா! எதற்கு? யாருக்கு?

**தச்சன் :** எனக்கு அதெல்லாம் தெரியாது, சுவாமி! அவர்கள் என்னிடம் வேறு விலாசம் கொடுத்தார்கள்; பிளாக் நம்பர் 324 என்ற விலாசம். ஏதோ தனிப்பட்ட அறைபோ லிருக்கிறது. ஆனல், காலை ஏழு மணியிலிருந்து இந்த நிமிஷம் வரையில் நடந்து நடந்து பார்த்துவிட்டேன்; அந்த இடத்தை என்னல் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆகையால், அந்தத் தொட்டிலை இங்கே கொண்டுவந் திருக்கிறேன். களைத்துப்போன என் காலுக்கும் தொட்

டிலுக்கும் விமோசனம் கிடைக்கும் என்றெண்ணியே இப்படிக் கொண்டுவந்தேன்.

**மோஹன்:** தொட்டிலா? அவள் செய்யச் சொன்னுள் என்று உனக்கு நிச்சயமாய் ஞாபகமிருக்கிறதா? என் மனைவி சொன்னுள் என்று?

**தச்சன்:** நன்ருய் ஞாபகமிருக்கிறது. உங்களுக்கு அவர்கள் ஒரு புதுக் குழந்தையைப் பெற்றுத் தந்திருக்கிருர்கள் என்றும் கேள்விப்பட்டேன். அவர்களும் அவர்களின் குடும்பமும் பகவான் அருளால் க்ஷேமமா யிருக்கவேண்டும்........

**மோஹன்:** நிச்சயமாகவா?

**தச்சன்:** நிச்சயந்தான். ஆனல், அம்மாள் கொஞ்சம் மாறிவிட்டது மாத்திரம் வாஸ்தவம்; அவர்கள் தோற்றமும் கொஞ்சம் மாறிவிட்டது........ அவர்களது கன்னங்கள் ரோஜா நிறம் பாய்ந்திருக்கின்றன; அது ஆரோக்கியத்தாலோ, அல்லது வர்ணம் பூசியிருக்கிருர்களோ தெரியாது........அவர்களது உதடு செவந்திருக்கிறது; அது வாலிபக் களேயோ, அல்லது வர்ணப் பூச்சுத்தாமே அறியேன். இப்போது வேறு விதமாய் வாரி முடிக்கிருர்கள். ஓயாமல் புகை குடிக்கும் நாகரிகப் பெண்ணுக மாறியிருக்கிருர்கள். உங்களுக்கு ரொம்ப செளக்கியம் ஏற்பட்டிருப்பதாக நினைக்கிறேன்.

**மோஹன்:** இந்த இடத்தின் நிலைமையைப் பார்த்து, நீரே அதை யூகித்துவிடலாமே!

**தச்சன்:** (அமைதியுற்று) ஆமாம், பேஷாய். நமக்குள்ளே அந்தரங்கமாய்ப் பேசிக் கொள்வதற்கென்ன? இங்கே இப்படி இருண்டு, விடியற் காலையில் ஆந்தையின் கண்போலப் பாழடைந் திருப்பதை, உள்ளே வந்து கண்டதும் நான் ஆச்சரியமடைந்தேன். உண்மையற்ற கற்பனைகளைப் பாடும்

உங்களைப் போன்ற கவிஞருக்குத் துளியும் ஏற்ற இட மல்ல இது. வேலையை முடித்தபின்னே பாடும் எங்களைப் போன்ற தொழிலாளியா யிருந்தால் பரவா யில்லை; நாங்கள் எங்கே பாடினாலும் ஒன்றுதான். ஏனெனில், ஓய்வையும் சூழவுள்ள நிலைமைகளையும் பொறுத்த தல்ல எங்கள் பாட்டு. வாழ்வையும் அதன் சோக நிகழ்ச்சிகளையும் நாங்கள் போராடப் போகும் வழியையும் முடிவிலே எங்களுக்குக் கிடைக்க விருக் கும் வெற்றியையும் பற்றியது எங்கள் பாட்டு.

**மோஹன்:** தொட்டிலா? நீர் ஏதோ ஞாபகப் பிசகாய்ச் சொல்கிறீர்........என் மனைவியா?

**தச்சன்:** ஆமாம், சூரியன் சூடாயிருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாய் உங்கள் சம்சாரந்தான் — சட்டப்படி. அவளோடிருந்து, தொட்டிலுக்கு உத்தர விட்ட மனிதனை நான் அறி வேன். அவன்தான் ரஞ்சித்; தொழிற்சாலைகளின் முதலாளி. கொடுமையாய் வேலை வாங்கும் எஜமானின் முகத்தை யாருக்குத்தான் தெரியாது?

**சிறுமி:** அப்பா! இதென்ன ஒரு சவப் பெட்டி மாதிரி இருக்கே!

**தச்சன்:** தொட்டில்—சவப் பெட்டி! எங்களைப் போன்ற ஏழைகளுக்கு அந்த இரண்டுக்கும் அதிக வித்தியாச மில்லை. ஆனால், மேற்படியிலுள்ள உயர் வகுப்பாருக்குத் தொட்டில் தொட்டிலாகவேதான் இருக்கிறது.

[அத்தை ஓர் ஆவி ரூபம்போல் வருகிறாள்]

**அத்தை:** யார், இந்த முரடன், அநாகரிகன்?

**தச்சன்:** தாயே! தங்களது மிகப் பணிவான, கீழ்ப்படிதலுள்ள ஊழியன். தொழிலால் தச்சன்;

வாழ்க்கையின் நியாயத்தால், நம்பிக்கை மிகுந்தவன்; இயற்கையின் கவிஞன்.

**அத்தை:** (பரிகாசமாய் நகைத்து) அத்தனை பேரும் கொள்ளைக்காரர்கள்—பாங்கி முதலாளிகள், கவிகள், தச்சர்கள் எல்லாருமே கொள்ளைக்காரர்கள்!

**மோஹன்:** அவள் சொல்வது ஒன்றையும் கவனி யாதே. அவளுக்குப் புத்தி சுவாதீனமில்லை. சமீபத்தில் பாங்கி முறிந்ததால், ஏற்பட்ட கஷ்டம்.

**தச்சன்:** கோழை மனசு படைத்தோருக்கு அற்ப நஷ்டம் ஏற்பட்டாலும் முறிந்து விடுகிறார்கள். அந்தக் கோழை மனசு உங்கள் வகுப்பின் ஏகபோக உரிமை, சுவாமி!

**அத்தை:** உன் கைகள் முரடா யிருக்கின்றன; மணிக்கட்டுக்கள் திருகி யிருக்கின்றன. தொழிலால் ஒரு தச்சன். அதோடு ஒரு கவியுமாவாய் என்று கேட்கும்போது எவ்வளவு வேடிக்கையா யிருக்கிறது! (நகைக்கிறாள்) உன் கையைப் போன்றதொரு முரட்டுக் கையும் கவி யெழுதுமா? அடே தொழிலாளி! கண்ணியமான எதையாவது உன்னால் செய்ய முடியுமா? உனக்கு நாகரிக வளர்ச்சி என்பது உண்டாகுமா? மரத்திலே வேலை செய், மரத்திலே; காய்ந்து கடினமான மரத்திலே; மந்தமான, உயிரற்ற, விறுவிறுப்பில்லாத மரத்திலே. என் புத்திமதியைக் கேள். பாட்டுக்கள் கட்டுவதில் நீ இறங்காதே; அது பாவம். பாட்டைவிட மரம் சிறந்தது. மரத்தால் சோறு கிடைக்கும்; பாட்டினாலோ, பாழும் வறுமையும் சாவுந்தான் கிடைக்கும். கொள்ளைக்காரர்கள்! அது எப்படிப்போனாலும் போகட்டும்; உனக்கு இங்கே என்ன வேலை?

**மோஹன்:** அவன் ஒரு தொட்டில் கொண்டு வந்திருக்கிறான்.

**சிறுமி:** நான் ரொம்ப வளர்ந்துவிட்டேனே; எனக்குத் தொட்டில் இனி எதற்கு?

**அத்தை:** தொட்டிலா? (நகைக்கிருள்) ஆமாம், என் கண்ணே! நீ ரொம்ப வளர்ந்துவிட்டாய்; உனக்குத் தொட்டில் இனித் தேவையில்லை.

**சிறுமி:** ஆனல், அது ஒரு சவப் பெட்டி மாதிரி தோணுது........

**அத்தை:** உனக்காக........

**சிறுமி:** நான் ரொம்பப் பாலிய மாயிற்றே; எனக்கு அதற்குள் சவப்பெட்டி எதற்கு?

**தச்சன்:** உத்திரவு கொடுத்தவன் பேரில்தான் இந்தத் தொட்டிலை நான் செய்து கொண்டு வந்திருக்கிறேன்.

**அத்தை:** ஏ சோம்பேறி அட்டையே! நீயா இதைச் செய்து வர உத்திரவு கொடுத்தாய்? பிறரைச் சுரண்டித் தின்னும் பிராணியே! யாருக்காக இந்தத் தொட்டில்? மனிதத் தன்மையில்லாத திருடா! ஜீவனத்துக்குச் சம்பாதிக்கத் தெரியவில்லை; மனைவிக்கும் குழந்தைக்கும் சோறுபோட விதியில்லை. இன்னொரு குழந்தைக்காகத் தொட்டில் செய்யச் சொல்லிவிட்டான், தொட்டில்! துன்பமும் மிடியும் நோயும் சூழ்ந்த, நாசமாய்ப் போன இக் கொடிய உலகுக்கு இன்னொரு அழுமூஞ்சி ஜந்து வந்திருக்கிறதாக்கும்! இன்னொரு குழந்தை! மானங் கெட்ட மிருகமே!

**சிறுமி:** என் அப்பா கிட்ட இப்படிப் பேசாதே. நான் சொல்லுகிறேன்; அது தொட்டில் அல்ல.

**அத்தை:** அதிகப் பிரசங்கிக் கழுதை! (சிறுமியை அறைகிருள். சிறுமி சுருண்டோடித் தகப்பனின் படுக்கையருகே சென்று விம்மி யழுகிருள்.)

**மோஹன் :** இதை நான் பொறுக்க மாட்டேன், அத்தை! உன்னையும் உன்னுடைய பிதற்றலை யும் என் வாழ்நாள் பூராவும் நான் சகித்து வந்தேன். நீ என்னை நாசம் செய்துவிட்டாய். என்னை வாழ்க்கையிலே ஒன்றுக்கும் உதவாதவனாக்கிவிட் டாய். கண்ணாடிப் பெட்டியிலே வைத்து, என்னை எல்லாரும் காட்சி பார்க்கும்படி செய்தாய். உன் னுடைய தற்பெருமையைத் திருப்தி செய்துகொள்வ தற்காக, என்னை இப்படிச் சூட்சுமமாய் உபயோகித் துக் கொண்டாய். இன்னும் என் குழந்தையை வேறு அறையத் துணிகிறாயே! அவளை நீ வேண்டிய மட்டும் துன்புறுத்தியாயிற்று. இல்லற சுக ஆசையை நீ அடக்கியதால், பிறரைத் துன்புறுத்தும் குரூர ஆசையான மனக் கோளாறு உனக்கு ஏற்பட்டிருக் கிறது. உனது வாலிபத்திலே நீ மணம் செய்துகொண் டிருக்க வேண்டும். ஆத்மார்த்த காரணங்களுக்காக மணம் செய்துகொள்ளாதிருந்ததை விட்டு, இயல் பான வாழ்க்கையை நீ நடத்தியிருக்க வேண்டும்........ உன் ஆத்மார்த்தம் பாழாய்ப் போக! நீ பல கதம்ப உணர்ச்சிகளின் பிண்டமாவாய். உனக்கு நான் இரங்குகிறேன்; ஆனால், உன்னுடைய சில செயல் களுக்காக, உன்னை நான் வெறுக்கிறேன்.

**அத்தை :** பேஷ்! சொல்லு, இன்னும் சொல்லு! ........திட்டு என்னை! உன் வாழ்நாள் பூராவும் உனக்கு நான் சோறு போட்டேன். பாங்கி முறிந்தது; அதில் உன் பேரால் நான் போட்டிருந்த அத்தனை பணமும் போய்விட்டது. அது என் குற்றமா? எல்லாப் பணத்தையும் உனக்காக, உன் பேரால் நான் போட்டுவைக்கவில்லையா? (அழுகிறாள்.) இன்னும் திட்டு........திட்ட வேண்டியதையெல்லாம் திட்டித் திருப்தியடை........ஆண்மையற்ற கொள்ளைக் காரனே!

**மோஹன் :** நீ என்னைப் பாழாக்கிவிட்டாய்.

**தச்சன் :** நமஸ்காரம்......நான் போய்விட்டு, அப்புறம் வரட்டுமா? (ஒரு புறமாய்) இதோ பணக்காரக் குடும்பம் ஆடி விழுகிறது; பட்டப்பகல்போல் அது தெளிவாய்த் தெரிகிறது. (வெளியே செல்கிறான்.)

**மோஹன் :** அத்தை! என்னை மன்னி; இந்த நிலைமையில் உன்னோடு பேச, எனக்கு விருப்பமில்லை.

**அத்தை :** உன் சொந்த நிலைமையை நீ கவனித்தால் போதும். பலமான குடியில் நீ இறங்கி யிருக்கிறாயே; இதற்கெல்லாம் எங்கேயிருந்து உனக்குப் பணம் கிடைக்கிறது? மேற்குலப் பணக்காரப் பெண்ணொருத்திக்கு 'மாமா' வேலை செய்கிறாய்! (நகைக்கிறாள்)

**மோஹன் :** நான் குடிக்கிறேன்; நீதான் அதை எனக்கு என் வாலிப முதலே கற்றுக்கொடுத்தவள். இந்த வீடும் சரி, நமது வகுப்பும் சரி, எவ்வித வாழ்க்கை நடத்தி வருகிறதோ அந்த ஏற்பாடுதான், என்னைக் குடியனாக்கியது. இந்த வாழ்க்கை முறை எனக்குச் சலித்துப் போய்விட்டது. உலகின் பிரத்யட்ச நிலைமைகளை அறியாமல், தனிப்படுத்தப்பட்டு, கண்ணாடிக் குப்பியில் வைத்த செடியைப்போல், பல வருஷங்களாய், நான் ஒதுக்கி வைக்கப் பெற்று விட்டேன். நீயே என்னைப் போஷித்து வளர்த்தாய் என்று நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அப்படி வளர்த்ததில் உனது நோக்கம் பூராவும் தவறானதாகும். எனது நன்மைகளைப்பற்றி நீ கவலைகொண்டிருந்தால், என்னை என்னிஷ்டப்படி நடக்குமாறு விட்டிருப்பாய்; பரம ஏழைகளோடும் மிகத் தாழ்ந்தவர்களுடனும் நான் பழக விட்டிருப்பாய்; மிதிபட்டுக் கிடக்கும் மக்கள் நடுவே என்னை வசிக்க விட்டிருப்பாய்; வாழ்க்கையின் பிரத்யட்ச உண்மைகளைப்பற்றி நான் எழுத விட்டிருப்பாய். இதை யெல்லாம் விட்டு, ஆத்

மார்த்தப் பொய்களடங்கிய புத்தகங்களை எனக்குப் புகட்டினாய்; கண்ட கண்ட லாகிரிகளை ஊட்டி என்னை மயங்க வைத்தாய். நான் வாழ்க்கையையே அறியாத படி, என்னை அவை தடுத்துவிட்டன. நான் ஒரு கடவுள் என்று நினைத்துக்கொள்ளும்படி, என்னை நீ முகஸ் துதி செய்தாய்; அந்த வேஷத்தைக் காப்பாற்றுவதற்காக, எனக்கு உன் பணத்தைக் கொடுத்தாய். நான் ஒரு மேதை என்றும், அளவிடற்கரிய தெய்வாம்சம் பெற்றவனென்றும், தன்னலத் தனிமையிலே அரசாளப் பிறந்தவனென்றும், ஏகாந்தத் துறவிலே அரியாசன மிருக்கத்தக்கவ னென்றும் புகழ்ந்தாய். என்னைச் செல்வமாய் வளர்த்தாய்; என் சோற்றுக்கு நானே சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்று நான் எண்ணவும் நீ இடங்கொடுக்க வில்லை. என் கைகளிலே அழுக்குப்படலாகாது, மாசு மரு இருக்கலாது என்று கூட, எனக்கு நீ போதித்தாய். வேலையே செய்யக் கூடாதென்றும், வேலை செய்வது ஆபாசம் என்றும் உபதேசித்தாய். அறையின் ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்கு ஒரு நாற்காலியை எடுத்துச் செல்லவும் என்னை நீ விடுவதில்லை. சமாசாரப் பத்திரிகைகள் பொய்யே நிறைந்திருப்பதாய்ச் சொல்லுவாய்; அவற்றை நான் படிக்க விடமாட்டாய். இப்படியாக, வாழ்க்கையின் துன்பங்களையும் உண்மைகளையும், நான் அறியாதபடி செய்து விட்டாய். யுத்தங்களையும், போராட்டங்களையும், உலகிலே வேலை செய்யும் பல சக்திகளையும் நான் அறியாமற் செய்து விட்டாய். என் புத்தகசாலைக்கு வரும் அத்தனை புத்தகங்களும் நீயே வாங்கித் தந்தவையா யிருக்கும்படி கவனித்துக் கொண்டாய். அந்தப் புத்தகங்களெல்லாம், யோகத்தைப்பற்றியும் ஜோதிஷத்தைப்பற்றியும் சூட்சுமமான மூட நம்பிக்கைகளைப் .பற்றியுமே சொல்லின. இப்போது அதன் பலனைப் பார்க்கிறாய். ஏகாந்தமாய் ஓய்வோடிருந்தேன்; உன் பாங்கியிலிருந்து முட்டின்

றிப் பணங் கிடைத்தது. அதன் பலனைத்தான், ஆத்மாவையும் கடவுளையும் பற்றி, அழகழகாய் என்னால் எழுத முடிந்தது. இதை நான் முன்னே உணராமற் போனேன். பாங்கி முறிந்த நிமிஷத்திலே, நான் வாடி விழுந்தேன்; என் கவிதையும் என்னை விட்டகன்றது. இந்தப் பேடித்தனத்தைக் கண்டுகொண்ட அதிர்ச்சியால், என் ஆண்மையுங்கூடப் போய்விட்டது. நான் ஒரு கோழையானேன். வெகு சொகுசாய் நான் பாடியது எந்த ஆத்மாவைப் பற்றியோ அந்த ஆத்மா, சின்னஞ்சிறிய தொரு சுண்டெலியாய்ச் சுருங்கி, குறுகிய நாற்றச் சாக்கடை யொன்றின் இருளிலே அகப்பட்டுக்கொண்டது. கடவுளே ஓர் பனிப் படலமானான்; அந்தப் படலத்தினூடே, எனது உறக்கமற்ற கண்கள், இரத்தச் சிவப்புடைய இரு சூரியன்கள் போல, வர்ணமும் ஒளியுமற்று, குடி வெறியுற்ற அகண்ட வெளியிலே சுழல லாயின. வெறும் மாயை! மாயை! உன் பணத்தைக் கொண்டு, வெறும் மாயைகளை எனக்கு ஊட்டி வளர்த்தாய். முட்டாள்தனமாய் உன்னையே சார்ந்து நான் வாழ்ந்ததை, என் சுதந்திர மென்றாய். வைத்தியசாலைகளில் பஷாணச் சீசாக்களுக்கு விலாசம் ஒட்டுவார்களே அதேபோல, எனக்கு நீ மேதை என்று விலாசமிட்டாய்; இவ்வாறு என்னைப் பொய்யும் வீணுமான கண்ணாடிப் பெட்டியிலே, முகஸ்துதியால் மகிழ்ந்த தொரு கைதியாக வைத்துவிட்டாய். உன் பணம்! யார் பணம்? அதை நீ எப்படிப் பெற்றாய்? ஏழை மக்களிடம் சுரண்டிய யாரோ ஒருவன் உனக்கு வைத்துச் சென்றதுதானே. என் மேதை! யார் மேதை? மேதை யென்பது ஒரே ஒருவனுக்கு, ஒரு குடும்பத்துக்கு, ஒரு வகுப்புக்கு மட்டிலுமே சொந்தமாய், ஆத்மஸ்துதியும் சுயநலமுமே குறிக்கோளாய்க் கொண்டதுபோல் பேசுகிறாயே! நான் வியர்வை சொட்ட உழைக்கவேண்டும்; வேலை தேடி அலையவேண்டும். ஓய்வையும் சுகத்தையும்

இழந்த இப்போது நான், என்னை மேதாவி யாக்கியது எது என்று திடீரெனக் கண்டு கொண்டேன்........ பிறர் உழைப்புத்தான் எனக்கு ஓய்வு அளித்தது; நான் அவர்களுக்குத் திரும்பக் கொடுத்தது என்ன? எனது நன்றியை, அவர்களுக்கு நான் எப்படிக் காட்டினேன்?

**அத்தை:** எனக்கு எப்படி நீ நன்றி காட்டிஞய்? இதுதானு வழி?

**மோஹன்:** பொய், அத்தை! நமது வகுப்பு, ஏமாற்றமும் துரோகமும் பொய்யும் நிறைந்த வகுப்பு. நாம் போலிகள். நாம் இறந்த காலத்தைச் சேர்ந்தவர்கள். சமூக அமைப்பு மாறி விட்டது; ஆனுல், அந்த உண்மையை ஒப்புக்கொள்ளும் தைரியமற்ற கோழைகளாக, நாம் இருக்கிறோம்.

[ரஞ்சித்தும், வர்ணப் பூச்சுக்கள் நிறைந்த நளினியும் பிரவேசிக்கிருர்கள். ரஞ்சித்தும் நளினியும் உரக்க நகைக்கிருர்கள்.]

**நளினி:** ஆமாம்; அது ரொம்பத் தமாஷாய்த் தான் இருந்தது.........

**ரஞ்சித்:** கிஞ்சிராவைக் கொட்டிக் கொட்டிக் கொண்டு, குறத்தி நடனமாடினுளே, அது எனக்கு ரொம்பப் பிடித்தது. உனக்குப் பிடிக்கவில்லையா? ஹலோ, மோஹன்! இன்னும் வீட்டிலேயா இருக்கிருய்? வேலை தேடப் போக வில்லையா?

**நளினி:** இவனுக்கு யார் வேலை கொடுப்பார்கள்?

**அத்தை:** என்னேடு தர்க்கம் செய்கிருன்; என்னைத் தூஷிக்கிருன்........

**நளினி :** அவனைப் பற்றி நீ லட்சியமே செய்யாதே, அத்தை! அவனை நாம் இழந்து விட்டோம்; அவன் இனி நமக்குச் சொந்தமில்லை. அவனுடைய கருத்துக்களெல்லாம் மாறிக்கொண் டிருக்கின்றன. சேரிகளைப் பற்றியும் குடிசைகளைப் பற்றியும் கப்பல் கூலிகளைப் பற்றியும் பேசி மனம் பேதளித்த ஒருவனிடம் பேசிப் பயனில்லை.

**ரஞ்சித் :** மோஹன்! அற்றைக் கூலி வேலைக்காக நீ அங்குமிங்கும் அலைகிறாயே; அதை விட்டு, என் தொழிற்சாலையில் வேலை செய்ய, ஏன் சம்மதிக்க மாட்டேனென்கிறாய்? முதலில் உன்னைப் பரீட்சார்த்தமாக எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்கிறேன். பிறகு நீ மெள்ள மெள்ள ஏறிவிடுவாய்; உனக்கு நல்ல மூளை யிருக்கிற தல்லவா?

**நளினி :** இது நான் சொன்ன யோசனை.

**மோஹன் :** மஹாராஜியா யிருப்பாய்........

[நளினியும் ரஞ்சித்தும் நகைக்கிறார்கள்.]

**நளினி :** ரஞ்சித்! நமக்கு நேரமாகிவிட்டதே? போகவேண்டாமா? ஸ்டுடியோவுக்கு நான் செல்ல வேண்டும். என்ன குஷியான வேஷம் நான் போடப் போகிறேன், தெரியுமா? மோஹம் நிறைந்து தேக பலம் மிகுந்த ஒரு ஸ்திரீயாய், நான் நடிக்கப் போகிறேன். அந்த ஸ்திரீயின் புருஷனோ ஒரு பேடி! (நகைக்கிறாள்; ரஞ்சித்தும் நளினியும் வெளியே செல்கிறார்கள்.)

**அத்தை :** ரஞ்சித்! உங்களிடம் ஒரு வார்த்தை. வண்டிவரையில் உங்களைக் கொண்டுவந்து விடுகிறேன். (அவர்களைப் பின் தொடர்ந்து செல்கிறாள்.)

**மோஹன் :** இதுதான் ஆடி விழுந்து வரும் சமூகம்! வர்ணப் பொடியும் வாசனைத் தூளும் பூசி,

வீண் படாடோபமாய், ஆபாசம் நிறைந்து, வரன் முறை கெட்ட சிற்றின்பக் களஞ்சியமாய், போலி யாய், யாதொரு நோக்கமு மற்ற சமூகம் விழு கிறது!...........பணக்கார நாகரிகம் விழுகிறது!

**சிறுமி:** (ஒரு மூலையிலிருந்து) அப்பா!

**மோஹன்:** ஏன், குழந்தையே?

**சிறுமி:** அவர்கள் எல்லாரும் போய் விட்டார் களா?

**மோஹன்:** போய்விட்டார்கள், என் கண்ணே!

**சிறுமி:** எனக்குத் தேக மெல்லாம் எரிகிறது. தோழி ஷீலா இப்போது எனக்கு வேணும். அவர் கள் எல்லாரும் நிஜமாகவே போய்விட்டார்களா?

**மோஹன்:** ஆம்; எல்லாரும் போய் விட்டார் கள்........

**சிறுமி:** கசாப்புக் கடைக்கு மேலே ஆகாசத் தில் பறக்கும் கழுகுகளும் பருந்துகளும் மாதிரி அவர்கள் எனக்குத் தோணுகிறார்கள். தோழி ஷீலா எனக்கு வேணும்.

**மோஹன்:** இதோ நான் இருக்கிறேன், ராணி! தோழி ஷீலா தொழிற்சாலையில் வேலை செய்ய வேண்டு மல்லவா?

**சிறுமி:** அவள் வேணும்.

**மோஹன்:** சாயங்காலம் வருவாள், கண்ணே! அவள் இப்போது வர முடியாது. வேலை செய்து, அவளுடைய கூலிகளை வாங்கிக்கொண்டு வருவாள். இல்லாவிட்டால், அவளது குழந்தைகள் பட்டினி யால் வாடுமே!

**சிறுமி :** அவள் வருவாள் சாயங்காலம். ஆனால், சாயங்காலம் வருமா? என்னை என்னவோ பண்ணு கிறது, அப்பா! என் வயிற்றிலே காயம் பட்டிருக் கிறது; தேகம் எரிகிறது. கொஞ்சம் ஜலம் கொண்டு வா, அப்பா!

**மோஹன் :** (அவளுக்கு ஜலம் கொண்டுவந்து கொடுத்து விட்டு) இதோ இருக்கிறது; குடி, கண்ணே! பயப்படாதே. பார்; இதோ அப்பா இருக்கிறேன். இங்கே பார்........உனக்கு ஒரு கதை சொல்லுகிறேன்.

**சிறுமி :** தோழி ஷீலா அருமையான கதைகள் சொல்லுகிறாள்; சேரிகளைப் பற்றியும் பட்டினியால் வதங்கும் குழந்தைகளைப் பற்றியும் கதைகள், அப்பா! எனக்கு நீ ஒரு பிரமாணம் பண்ணித் தருகிறாயா?

**மோஹன் :** தருகிறேன், கண்ணே!

**சிறுமி :** இனிமேல் கடவுளைப் பற்றியும் பட்சி களைப் பற்றியும் மலர்களைப் பற்றியும் நீ எழுதுவதில்லை யென்று பிரமாணம் பண்ணித் தா. பட்டினியால் வாடும் குழந்தைகளையும் குரூர எஜமான்களையும் கண் ணீர் விடும் ஏழைப் பெண்களையும் சோறு கேட்டதற் காகச் சுட்டுத் தள்ளப்பட்ட மக்களையும் பற்றியே இனி நீ எழுதுவதாகப் பிரமாணம் பண்ணித் தா.

**மோஹன் :** அப்படியே எழுத முயற்சிப்பதாக, நான் பிரமாணம் செய்கிறேன்........ராணி!........ ஆனால், நீ கஷ்டப்படுவதைப் பார்க்க, எனக்கு மிகவும் சங்கடமா யிருக்கிறதே.

**சிறுமி :** நான் உன் பெண் அல்ல, அப்பா! நான் ராணி அல்ல. சேரிகளிலுள்ள ஒவ்வொரு நோயாளிக் குழந்தையும் நானே; தொழிற்சாலை களில் வேலை செய்ய நிர்ப்பந்தப் படுத்தப் பெறும்

ஒவ்வொரு குழந்தையும் நானே! தாய் தொழிற்சாலையிலே வேலை செய்ய, தான் ஒரு துணி மூட்டைபோல், நாள் முழுதும், கொளுத்தும் வெயிலிலே, பாலின்றிக் கிடக்கும் ஒவ்வொரு பாப்பாவும் நானே! இப்படித்தான், தோழி ஷீலா எனக்குச் சொன்னாள். தோழி ஷீலா கிட்ட எனக்கு ரொம்பப் பிரியமாயிருக்கிறது. அவள்தான் என் அம்மா.

**மோஹன்:** என் அருமைக் குழந்தையே! சீக்கிரம் குணமடைந்து விடு. அப்புறம் நாம் இருவரும் எங்கேயாவது போய் விடுவோம்; எங்கே வேண்டுமானாலும் போவோம்........

**சிறுமி:** ஷீலாவையும் நம்மோடு அழைத்துக் கொண்டு போவோமா? தொழிலாளியையும் அவனுடைய குழந்தைகளையும் பற்றிக் கதைகளும் கவிகளும் நாடகங்களும் நீ எழுதுவாயா? அதிக ஒளியும் சோறும் மகிழ்ச்சியும் வேண்டுமென்று அவர்கள் தொடுக்கும் போராட்டத்தைப் பற்றி, வீர கீதங்களும் பாடுவாயா?

**மோஹன்:** வீர கீதங்களா? (அழுகிறான்) முயற்சிக்கிறேன்; முயற்சிக்கிறேன்........ ஐயோ! நான் ஒரு கோழையாகி விட்டேன்; நலிந்து விட்டேன். துயரம், சாவு, தற்கொலை இவைகளைப் பற்றி மட்டிலுமே என்னால் எழுத முடிகிறது....ஐயோ!

**சிறுமி:** அப்பா!........

**மோஹன்:** புதிய சக்திகளிடம் எனக்குப் பிரியமாய்த்தான் இருக்கிறது. அவையே சரியானவை, நியாயமானவை, சத்தியமானவை........ஆனால், நான் அவற்றோடு சேர்ந்து கொள்ள முடியவில்லை....... அவற்றை என்னால் தாங்க முடியவில்லை. என்னை அவை மூச்சு முட்டித் திணறச் செய்கின்றன....

**சிறுமி:** அப்பா!....என்னால் மூச்சுவிட முடியவில்லை. ஷீலாவிடம் அவளே என் தாய் என்று சொல்லு; அவள் கதைகளே எனக்குப் பிரியமாயிருந்ததாய்ச் சொல்லு. ஷீலாவைக் கவனித்துக் கொள்...........அம்மாவை எனக்குப் பிடிக்க வில்லை என்று உன்னிடம் சொன்னதாக, நீ அம்மாவிடம் சொல்லாதே. ஷீலா சாயங்காலம் வருவாள்; ஆனால், சாயங்காலம் எப்போதாவது வருமோ? வராது; வராது........போய் வருகிறேன், அப்பா! எல்லாம் இருள்கிறது; போய்வருகிறேன். சீக்கிரம் வந்து விடு, அப்பா! நான் தன்னந் தனியாய் இருக்கிறேன் என்பதை ஞாபகத்தில் வை.

[சாகிறாள்]

**மோஹன்:** (தலையணைக்கடியிலே ஒளித்துவைத்திருந்த மதுக் குப்பியை எடுத்துக் குடிக்கிறான்.) போயிற்று! என் வாழ்க்கையின் ஒரே கைவிளக்கு உடைந்து போயிற்று! இரவே, வா! இந்தச் சமூக அமைப்பு பொடிப் பொடியாய் உதிர்ந்து விழுகிறது. சமூகம் தனது இதயத்திலே ஒளித்து வைத்திருந்த பிளவையால் அரித்துத் தின்னப் படுகிறது. எங்கும் பொய் சூழ்ந்திருக்கிறது. பட்டினியால் வாடும் குழந்தைகளைக் குறித்து எழுதவேண்டுமா? எந்தக் குழந்தையைப் பற்றியாவது எனக்கு இப்போது கவலையுண்டா? என்றாலும், அப்படி எழுத முயற்சிப்பதாய், நான் வாக்களித்தேன்........நான் முயற்சிக்கத்தான் வேண்டும்.........ஆஹா!...........குடிசைகளின் துன்பத்தையும் சோகத்தையும், சுரண்டப்படும் ஏழை மக்களையும், தொழிற்சாலைகளையும் பற்றி, எனது புத்தி சாதுர்யத்தைக் கொண்டு தான் ஏதாவது எழுதவேண்டும்........எனினும் அதுவே முதற்படியாகும்; பொய்களைக் குறித்தும் கடவுளைப் பற்றியும் ஆத்மாவைப் பற்றியும் பாடும்

கிதங்களை விட அதுவே மேலாகும். நான் முயற்சிக்கிறேன்....எங்கும் பொய். எனது ஒரே சத்யம், எனது வழிகாட்டி, எனது ஒரே பாசப் பொருள் மறைந்து போய்விட்டது!

**அத்தை :** (உள்ளே வருகிறாள்) ஏ சோம்பேறிப் பிணமே! போய் இன்னும் கொஞ்சம் விறகு கொண்டுவா. கொஞ்சம் கூடப் பணம் கொண்டு வரமாட்டேனென்கிறாயே. நண்பர் ரஞ்சித் மட்டிலும் இல்லா விட்டால், நாம் என்ன திண்டாடுவோம்! அவர் ஒருவர்தான் கொள்ளைக்கார ரல்ல; பெருந்தன்மையானவர்; தொழிற்சாலைகளின் கண்ணியமான எஜமான்.

**மோஹன் :** (போக எழுந்திருக்கிறான்) என் குழந்தையே! நீ தன்னந் தனியே இருக்கிறாய் என்பதை நான் ஞாபகம் வைத்திருக்கிறேன். உனக்கு வாழ்விலும் துணையில்லை; சாவிலும் துணையில்லை. நான் வந்து விட்டேன்.......என் பிரமாணத்தை மீறுகிறேனே, இதற்கு மன்னி....நான் வந்து விட்டேன்; நீ தனியே யிருக்க வேண்டாம்.

**அத்தை :** போய் இந்தப் பணத்தையும் குடித்துத் தொலைத்து விடாதே....விறகு வாங்கிவா, தெரிகிறதா?

**மோஹன் :** தெரிகிறது. இன்று நமக்கு எவ்வளவு விறகு கிடைத்தாலும் தேவைதான்.......அங்கே கிடக்கும் உருவத்தைப் பார்த்தாயா? நாடி நின்றுவிட்டது; சத்தியக் கடிகாரம் நின்றுவிட்டது. என்னைப் பார்க்கிறாயா? இல்லை, நீ பார்க்கவில்லை........ விடை கொடு, அத்தை! போகிறேன்.(மெல்ல வெளியே செல்கிறான்)

**அத்தை:** (சிறுமியின் சவத்தைக் கண்டு வீறிட்டுக் கூச்சலிட்ட வண்ணம், தொட்டிலை எடுத்துக் கொண்டு, வெளியே பாய்ந்தோடுகிருள்) சவப் பெட்டி !........சவப்பெட்டி !

[திரை விழுகிறது.]

---

# ஜன்னல்

[ஒரு தொழிலாளி அறையின் உட்புறம். மத்தியில் ஒரு ஜன்னல் திறந்திருக்கிறது. அதன் வழியே ஆகாயம் தெரிகிறது. வலது பக்கத்தில் ஒரு கதவு.

ஓர் அடுப்பின் அருகே தொழிலாளியின் மனைவி உட்கார்ந்திருக்கிருள். **அஜா, ஜோதி** என்ற இரு குழந்தைகள் ஜன்னலின் பக்கத்திலே பேசிக்கொண்டிருக்கிருர்கள்.]

**அஜா :** தங்கச்சி ஜோதி! அதோ அந்த மேகத்தைப் பார்த்தாயா? (ஜோதி குதூகலமாய்க் கையைத் தட்டுகிருள்.) அது ஒரு பெரிய வெள்ளைக் குதிரை, நிஜக் குதிரை.

**ஜோதி :** ஆனுல், அது நொண்டி; அதனுல் வேகமாய் ஓட முடியாது.

**அஜா :** அது நொண்டியல்ல; கிழம்.

**ஜோதி :** அண்ணு, அண்ணு! அதோ பார்! அதோ அந்த மேகம், தாத்தா மீசை யிருந்ததே அந்த மாதிரி வெள்ளை வெளேர் என்றிருக்குது, பார்........... என்ன வெளுப்பு!

**அஜா :** பார், பாரடி! அது போகுது. எங்கேயடி போகும்?

**ஜோதி :** இப்ப பார்! அது ஒட்டைமாதிரி யாயிடுச்சு. அந்தத் திமிலைப் பார். அதன் மேலே யாரோ சவாரி செய்கிறுங்களே! எங்கேயோ ரொம்ப தூரம் பயணம் போகுது.

**அஜா :** அது எப்படி ஒட்டையா யிருக்க முடியும்? ஒட்டையிடம் மணி யோசை கேட்குமோ? நீ கேட்ட துண்டா? நான் கேட்டதில்லை யம்மா; ஏனென்றால், ஒட்டைக்கு மணி கிடையாது.—பார், பாரு! என்ன சிவப்பாய் அது மாறுது! அம்மாடி! என்ன சிவப்பு—அப்பா ராத்திரி வீட்டுக்கு வரச்சே அவர் கண் இருக்குமே, அந்தமாதிரி யல்லவா சிவக்குது! எனக்குச் சிவப்பு மேகத்தைக் கண்டால் பிடிக்கவில்லை யம்மா; உனக்குப் பிடிக்குதோ?

**ஜோதி :** எனக்குந்தான் பிடிக்கவில்லை............ அது விகாரமா யிருக்கு; வொர்க்ஷாப்பிலே கொப்பரையிலே தள தள வென்றிருக்கே, அந்த நெருப்புமாதிரி யிருக்கு. சிவப்பு மேகத்தைக் கண்டால், எனக்கு ரொம்ப வெறுப்பு வருது. அது, தாத்தாவை எரிச்ச நெருப்புமாதிரி யிருக்கு. ஒருநாள் ராத்திரி தாத்தா கண்ணை மூடிட்டார்; அவர் செத்துப் போய்விட்டார்னு சொல்லி, எரிச்சுட்டாங்களே அந்த நெருப்பு மாதிரி யிருக்குது சிவப்பு மேகம்.

**அஜா :** ஆமாம்; சிவப்பு மேகம் எதுமாதிரி யிருக்கென்றால்...............எது மாதிரி யிருக்கு, தங்கச்சி? அப்பாவின் சிநேகிதர் ஜீவாவை உனக்கு ஞாபகமிருக்கா ?—மெஷினிலே கால் மாட்டிண்டு சட்ணியா யிடுச்சே, அவரை? அந்தச் சதை அப்படியே தொங்கிச்சே, அது ஞாபக மிருக்கா?........... அது எப்படி யிருந்தது?...........அப்பாடா!....

**ஜோதி :** (அதை நினைத்ததால் வீறிட்டுக் கத்திக் கொண்டு) ஐயோ!...........சிவப்பு மேகத்தைக் கண்டாலே, எனக்கு மகா வெறுப்பா யிருக்கு!

**அஜா :** ஆனால், சிவப்பு ரோஜாவைக் கண்டால், பிரியமா யிருக்கு. அப்பாவின் வொர்க்ஷாப் எஜமான்,

நிதம் காலையில் அங்கியிலே ஒரு சிவப்பு ரோஜாவைச் சொருகிக்கொண்டு வருகிறார்.

**தொழிலாளியின் மனைவி:** போதும், நிறுத்துங்கள். அஜா! அங்கே போய் விளக்கை யேற்று.

**அஜா:** ஆனால், இன்னும் இருட்ட வில்லையே, அம்மா?—இன்னும் வானம் விழித்துக் கொண்டிருக்கே?

**ஜோதி:** எனக்கு இந்த ஜன்னலின் மேல் ரொம்பப் பிரியமாயிருக்கு, அஜா! உனக்குப் பிரியமா யில்லே?

**அஜா:** ஜன்னல் திறந்திருக்கும் போது, வானத்தின்மேல் எனக்குப் பிரியமா யிருக்கு.

**ஜோதி:** ஜன்னலைச் சாத்தி யிருக்கும்போது, அதன் உடைந்த கண்ணாடிக் கதவு வழியாய் ராத்திரியைப் பார்ப்பதிலே, எனக்குப் பிரியமா யிருக்கு. ராத்திரி என்றால் என்ன, அஜா?

**அஜா:** ஏன்! யாரைக் கேட்டாலும் சொல்லுவாங்களே! உனக்குத் தெரியாதா?

**ஜோதி:** தெரியாமலென்ன? தெரியும்........ இருந்தாலும் உனக்குத் தெரியுமோன்னு கேட்டேன்.

**அஜா:** ஆஹா! எனக்குந்தான் தெரியும். சுவாமி தூங்கப் போகிறபோது, அதை ராத்திரி என்று அழைக்கிறோம். அவர் விழித்துக் கொள்கிறபோது பகல்.

**ஜோதி:** அஜா! அந்த மேகம் ரொம்ப தூரம் போயிடுச்சு! தாத்தா போன அதே இடத்துக்கு இதுவும் போகிறாப் போலே எனக்குத் தோணுது.

நம்ம தாத்தா எவ்வளவு நல்லவரா யிருந்தார்! அவர் எப்ப பார்த்தாலும் துக்கமாகவே யிருந்தார்.

அஜா: ஜோதி! உனக்கு எப்போதாவது துக்கமாய் இருக்கிறதுண்டா?

**ஜோதி:** அம்மா சில சமயம் அழுகிருளே, அப்போதான் எனக்குத் துக்கமா யிருக்கு. ஆனல், வானம் ஜன்னல் வழியாக நம்மைப் பார்த்துப் புன் சிரிப்புச் சிரிக்குதே, அப்போ எனக்கும் ரொம்பச் சந்தோஷமா யிருக்கு.

அஜா: விளக்கை நான் ஏற்றுகிறேன், அம்மா! தீப்பெட்டி எங்கே யிருக்கு?

**தொழிலாளியின் மனைவி:** இதோ இருக்கு. இந்தப் பெட்டியில் பதிமூணு குச்சிதான் மிச்ச மிருக்கு. விளக்கை யேற்றும்போது, ஜன்னலைச் சாத்தி வை. இல்லாவிட்டால், காற்றடித்து, ரொம்பக் குச்சி அணைந்துபோகும்.

அஜா: இல்லை, அம்மா! நான் எவ்வளவு ஜாக்கிரதையாய் விளக்கை ஏற்றுகிறேன், பார். முதல் குச்சியே ஏற்றி விடும்; இது நிச்சயம்.

[குச்சியைக் கிழிக்கிருன்.]

**ஜோதி:** ஓஹோ!........என்ன அழகு! குச்சியின் ஜ்வாலை ஒரு கண்மாதிரி இருக்கே! அந்தக் கண் எதையோ தேடுகிருப்போலே தோணுது.

அஜா: இதோ, இதோ, ஜோதி! ஜாக்கிரதை! (குச்சி அணைந்து போகிறது.)

**தொழிலாளியின் மனைவி:** ஐயோ! ஒரு குச்சி வீணுய்ப் போச்சு! நான் சொன்னேனே....

அஜா : இல்லை, அம்மா! என்மேலே பிசகில்லை ........ஜோதி........

**ஜோதி :** அஜா! நான் ஒண்ணும் செய்யலை யேடா. ஏன் அல்பத்தனமாய்ப் பேசறே!

அஜா : அம்மா! அம்மா! இந்தக் குச்சி யெல் லாம் இதுக்கு முன்னே இப்படி அநியாயம் பண்ணி னதே யில்லே!

**தொழிலாளியின் மனைவி :** இரண்டு குச்சி வீணாச்சு. இன்னும் பதினொண்ணுதான் மிச்சம். மொத்தம் பதிமூணு இருந்தது.

**ஜோதி :** பதிமூணு 'துக்குறி நம்பர்' என்று வொர்க்ஷாப்பிலே எல்லாரும் சொல்லுவா, அம்மா!

**தொழிலாளியின் மனைவி :** (தீப்பெட்டியைச் சிறுவனிடமிருந்து வாங்கிக்கொண்டு) அதை நானே ஏற்றுகிறேன். நீங்கள் தொலையுங்கள், துஷ்டச் சனி யன்களா! இப்போ அப்பா வந்து, அறை இருட்டாய் இருப்பதைப் பார்த்தால், திட்டு திட்டென்று திட்டு வார். பாவம்! அப்பா நாள் பூராவும் கஷ்டப்பட்டு வேலை செய்துவிட்டு வருவார்........நாள் பூராவும் மெஷின்மாதிரி........மெஷின்மாதிரி வேலை செய்து விட்டு........

[ குழந்தைகள் மீண்டும் ஜன்னலிடம் செல் கின்றன.]

**தொழிலாளியின் மனைவி :** இந்த விளக்கை நான் ஏற்று மட்டும் ஜன்னலைச் சாத்துங்கள்.

[ குழந்தைகள் ஜன்னலைச் சாத்துகின்றன ]

அஜா : ஜோதி! இருட்டிலே உனக்குப் பயமா யிருக்கா?

**ஜோதி :** இல்லை; உனக்கு?

**அஜா :** இல்லை. இருட்டிலே எனக்குப் பய மில்லை.

**ஜோதி :** அப்பா ஒருநாள் அம்மாகிட்டச் சொன்னார், பகலைக் கண்டால் அவருக்குப் பயமா யிருக்காம்! அவர் இப்படிச் சொல்லச்சே நான் கேட் டுண்டிருந்தேன். பகலைக் கண்டால் அப்பாவுக்கு ஏன் பயமா யிருக்கு?

**அஜா :** உனக்குத் தெரியலையா? பகல் பூராவும் அவர் வேலை செய்ய வேண்டி யிருக்கு; அதனால் தான்—ஓ பார்! பார்! பார்! அதோ அந்தக் குன்று களுக்குப் பின்னால் பெரிய மஞ்சள் வெளிச்சம் உனக்குத் தெரியுதா? அதோ, அதோ!

**ஜோதி :** ஓ! அது சந்திரன்...........சந்திரனைக் கண்டால், எனக்கு ரொம்பப் பிரியம், அண்ணா! சந் திரன் எனக்கு வேணும்!

**அஜா :** அதை நீ அடைய முடியாது.

**தொழிலாளியின் மனைவி :** (விளக்கை ஏற்றிச் சுவரிலுள்ள ஒரு சிறு புரையில் வைத்து, தனக்குத் தானே முணுமுணுத்துக் கொள்கிறாள்.) ஆடு மாடுகள் போன்ற வாழ்வு—யாருக்கும் அக்கறை கிடையாது நம்மிடம்—போஷித்துக் காப்பாற்றுவோரும் எவரு மில்லை நமக்கு. எளிய தொழிலாளிகளாகிய நமது குடும்பங்கள், படிப்பற்று, போகங்களற்று, போஷணை யற்று வாழ்கின்றன. நாம் வறுமைப் பிணியுற்று, கந்த லுடுத்தி, உடல் சிதைந்து—பாழும் இருட் குகை களில் வசித்து—அஞ்சியஞ்சி, நடைப்பிணங்களாய், பிறர் கைக் கருவிகளாய், நிழல்களாய்—பிறரின் சொத்துக்களாய், தமக்கொரு சொத்துமற்று—சாக் கடையிலே, கேவலமாய், நோயிலுழன்று—மெல்ல

மெல்ல அழுகிச் சாகிறோம்!—இப்படி யெல்லாம், பாவம், என் ஏழைப் புருஷன் தூக்கத்திலே கூட முணுமுணுக்கிறார்! (சமையலைக் கவனிக்கத் திரும்பிச் செல்கிறாள்.)

**அஜா :** (உயர எழும் சந்திரனைச் சுட்டிக் காட்டி) அது எவ்வளவு பெரிதாயும் வட்டமாயு மிருக்கு!

**ஜோதி :** அது ஓர் தங்கக் காசு என்று நான் நினைக்கிறேன். அது என்னிட மிருக்கக் கூடாதா? அதைக்கொண்டு நான் எத்தனையோ சாமான்க ளெல்லாம் வாங்குவேனே!

**அஜா :** நீ என்ன வாங்குவாய்?

**ஜோதி :** கடைத்தெருவில் உள்ள மிட்டாய்க ளெல்லாம் வாங்குவேன்.

**அஜா :** நான் ஒரு பந்து வாங்குவேன். நாள் பூராவும் அதை வைத்துக்கொண்டு விளையாடினால், எத்தனை குஷியா யிருக்கும்! ஏன், தங்கச்சி! சந்திரனே உண்மையில் ஒரு பந்துதான் என்று நான் நினைக்கிறேன். சுவாமி ஒரு வேளை அதை வைத்துக் கொண்டு விளையாடுகிறாரோ?

**ஜோதி :** எனக்கு இந்த ஜன்னல் மேல் ரொம்பப் பிரியமா யிருக்கு—இங்கே யிருந்துகொண்டு, எத்தனை அற்புதமான பொருள்களை யெல்லாம் பார்க்க முடியுது, இந்த ஜன்னல் வழியாய்!—நாம் பாடுவோம், அஜா!

**அஜா :** என்ன பாடுவது?

**ஜோதி :** ஜன்னலைப் பற்றி ஒரு பாட்டு.

**அஜா :** சரி; நீ தொடங்கு.

**ஜோதி:** இல்லை; நீதான் தொடங்கு.

**அஜா:** முதலில் இரண்டு பேரு மாகவே தொடங்குவோமே?

[**ஜோதி**யும் **அஜா**வும் தங்கள் பாட்டைத் தொடங்குகிறார்கள்.]

ஜன்னல் பாட்டு

பலகணியே! அருமைமிக்க
பலகணியே நீயாவாய்!
உலகிலுயர் நிலவதனை
உன்வழியே உணர்ந்திடுவோம்.

திறந்திருந்தால் நின்மூலம்
திசைமேகம் கண்டிடுவோம்;
மறைத்திருந்தால் கண்ணாடி
வழியதனால் பார்த்திடுவோம்.

பலகணியே! பலகணியே!
பண்புமிக்க பலகணியே!
நிலவதனை யருகுகோணர்
நீர்மைநிறை பலகணியே!

[பாட்டின் முடிவிலே அஜாவும் ஜோதியும் குதூகலமாய் இரைந்து கத்துகிறார்கள். சேரியி லுள்ள அத்தனை குழந்தைகளும் கீழே தெருவி லுள்ள குழந்தைகளும் அந்தக் கோஷத்தைத் தொடர்ந்து எதிரொலி செய்கிறார்கள்.]

**தொழிலாளியின் மனைவி:** சரி, குழந்தைகளா! நேரமாகி விட்டது. உங்கள் சூப்பைக் குடித்துவிட்டுப் படுக்கப் போங்கள்.

[ஒரே ஒரு சட்டியில் தாய் கொடுத்த சூப்பை வாங்கிக்கொண்டு, இரு சிறுவர்களும் அறையின் ஒரு மூலையில் போய் உட்காருகிறார்கள்.]

[ஒரு ஸ்திரீ - பக்கத்து வீட்டுக்காரி - பிரவேசிக்கிறாள்.]

**பக்கத்து வீட்டுக்காரி:** ஒரு மண்பானை இன்று ராத்திரிக்கு மாத்திரம் இரவல் கொடுக்கிறாயா, அம்மா?

**தொழிலாளியின் மனைவி:** ஆஹா, அக்கா! கட்டாயம் தருகிறேன். இதோ இதை எடுத்துக்கொண்டு போ. நீ ஒன்றும் அதைத் திருப்பித் தரவேண்டாம்.

**பக்கத்து வீட்டுக்காரி:** நீ எத்தனை உத்தமியாயிருக்கிறாய்! எங்கள் பானை மேல் என் குழந்தை இடறி விழுந்து, அதை உடைத்து விட்டது.

**தொழிலாளியின் மனைவி:** ஆமாம், அக்கா! சகலமும்தான் என்றாே ஒரு நாள் உடையப் போகிறது.

**பக்கத்து வீட்டுக்காரி:** இன்று ராத்திரி உன் புருஷன் வீட்டுக்கு வர ஏன் இத்தனை நாழி?

**தொழிலாளியின் மனைவி:** உன் புருஷன் வொர்க்ஷாப்பிலிருந்து வந்துவிட்டாரா என்று இப்போதுதான் நானே உன்னைக் கேட்க நினைத்தேன்.

**பக்கத்து வீட்டுக்காரி:** இல்லை. நீ பாரு, அவர் சொன்னாரு, அவர்களெல்லாம் - தொழிலாளிகளெல்லாம் - ஆமாம், எல்லாத் தொழிலாளிகளுமே கூடப் போறாங்களாம். கூட்டம் கூடி ஏதோ யோசித்து முடிவு கட்டப் போறாங்களாம். எதைப்பற்றி என்று அவர் சொல்லவில்லை. நான் வழக்கப்படி திரும்பி வந்து விட்டேன்.

**தொழிலாளியின் மனைவி:** ஆமாம். அவர்களெல்லாம் களைத்துப் போயிருக்கிறார்கள். பாவம்! என் புருஷன் என்ன கஷ்டப்படுறாரு! உன் மாதிரி, மற்ற வீட்டுப் பெண்கள் மாதிரி, நானும் கொஞ்சம்

வேலைக்குப் போனால், அவருக்கு ஒத்தாசையா யிருக்கும். அது முடியலையே என்று வருத்தமாயிருக்கு. இருந்தாலும் நானும் போவேன்—கூடிய சீக்கிரம் போவேன், உடம்பு கொஞ்சம் தேறினவுடனே. நீ பாரு, என் ஈரற் குலையிலே ரொம்ப வலிக்கிறது. துப்பினால் ரத்தம் வருது. ஆனால், இதையெல்லாம் நான் சட்டை பண்ணப் போறதில்லை. நான் வேலை செய்ய ஆரம்பிச்சிட்டேனே, இதெல்லாங் கூடக் குண மாயிடும்.

**பக்கத்து வீட்டுக்காரி :** வேலை, வேலை, வேலை! வேலை செய்து செய்து என்னத்தைத்தான் காணப் போறோமோ? நாம் ஏன் இப்படிக் கஷ்டப் படுவதற்காகவே பிறந்திருக்கோம்? நாம் ஏன்தான் பிறந்தோம் என்றே எனக்குத் தெரியவில்லை. வேலையே செய்யாமல் சுகமாய் ஜீவிப்பதற்கென்றே சிலரும், உழைத்து உழைத்து அழுது வாடவென்றே மற்ற வரும் ஏன் பிறக்கவேண்டும்?

**தொழிலாளியின் மனைவி :** அதுதான் கர்ம பலன் என்று நமது எஜமான்கள் சொல்லுகிறார்கள். அதாவது, நம்ப தலைவிதி—சுவாமியின் சித்தம். ஆமாம்; இப்படித்தான் நமக்கு எப்போதும் சமாதானம் சொல்லுகிறார்கள்.

**பக்கத்து வீட்டுக்காரி :** நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ராத்திரியும் கடவுளைத் தோத்திரம் செய்து கொண்டே இருக்கோம்-என்றைக்காவது ஒரு நாள் நம்ப பிரார்த்தனையைக் கேட்டு நமக்கு அவர் உதவி செய்ய மாட்டாரா என்ற ஆசையால்!

**அஜா :** (கிசு கிசுத்த குரலில்) ஜோதி! நாளைக்கு நீளமான ஒரு கயிற்றிலே நாம் ஒரு கல்லைக் கட்ட வேணும்; அதை முத்தத்திலே தொங்கவிட வேணும்.

**ஜோதி :** ஆமாம், தொங்கவிடலாம். (இருவரும் தூங்கச் செல்கிறார்கள்.)

**தொழிலாளியின் மனைவி :** ஆமாம், தோத்திரம் செய்துகொண்டே யிருக்கோம். முதுகு முறியுது, உதடு உலருது, எலும்பு தளருது, உடம்பு சோகை பிடித்து வெளிறிடுது—நாம் தோத்திரம் செய்து கொண்டே இருக்கோம். குரல்தான் பாக்கி—அது வும் செத்துவிட்டால், எல்லாம், சகலமும் செத்து விடும்.

**பக்கத்து வீட்டுக்காரி :** ஆனால், கடவுள் வாழ்ந்து கொண்டிருப்பார்!

**தொழிலாளியின் மனைவி :** எனக்கென்னவோ அதுவும் சந்தேகமாய்த்தான் இருக்கு!

[இப்படி இவள் சொல்லி முடிக்கு முன்பு, பக்கத்து வீட்டுக் குழந்தை யொன்று வீறிட்டுக் கத்தும் குரலோசை காற்றைப் பிளந்துகொண்டு வருகிறது.]

**பக்கத்து வீட்டுக்காரி :** இது என் குழந்தையின் புலம்பல். நேற்று ராத்திரி அவன் கத்தலால் உங்க ளுக்கு ரொம்பத் தொல்லையா யிருந்ததோ, அக்கா?

**தொழிலாளியின் மனைவி :** அப்படியா? நேற்று ராத்திரி அப்படிக் கூச்சல் போட்டது உன் குழந் தையா? பாவம்! இந்தண்டைப் பக்கத்து வீட்டுக் காரியின் குழந்தை யென்றே நினைத்துக்கொண் டிருந் தேன்; கக்குவான் இருமல் பிடித்திருக்குதே, அந்தக் குழந்தையென்று. உன் குழந்தைக்கு என்ன உடம்பு?

**பக்கத்து வீட்டுக்காரி :** அது ஒன்றும் புதிசல்ல, அக்கா! அவன் உடம்பு பூராவும் ஒரே புண்ணு யிருக்குது; அவன் மூச்சு விட்டால், சாக்கடை மாதிரி நாறுது. இதையெல்லாம் நாம் பொறுமை

யாய்ச் சகித்துக்கொள்ள வேண்டியதுதான் நம்ம தலை விதி.......இந்தப் பானை கொடுத்து உதவினையே; நீ மகராஜியாய் இருக்கணும், அக்கா! (வெளியே போகிருள்.)

**தொழிலாளியின் மனைவி:** பகவானே! நீ நிஜமாகவே, அங்கே-ஆழ்ந்த, இருண்ட வானத்திலே-இருக்கிருயா? உனக்குக் காது கேட்கிறதா? கேட்காவிட்டால், நீ என்ன செவிடா? கேட்டால், நீ என்ன ஊமையா? பகவானே! நீ யார்? பகவானே, பகவானே, பகவானே! நீ ஒரு வேளை நிஜமாகவே யிருப்பாயாளுல், நீ என்னதான் ஆவாய்?

[தொழிலாளி, சிறிது குடித்து, களைத்து, அதிக உழைப்பால் சோர்ந்தவனாய், பிரவேசிக்கிருன்.]

**தொழிலாளி:** பெண்பிள்ளையே! நீ இன்னுமா பகவானைக் கூப்பிட்டுக்கொண்டிருக்கிருய்? உனக்குக் களைத்துப் போகவில்லையா? பகவான் கடினசித்தன், குரூரன், திரவமற்றவன் என்று நீ அறியவில்லையா? வியர்வை சிந்த உழைக்கும் அற்பர்களாகிய நாம் சொல்லுவதை யெல்லாம் காது கொடுத்துக் கேட்கப் பகவானுக்கு அவகாசம் ஏது? அதை நீ அறியவில்லையா? இயந்திரங்களின் எஜமான்களான ஆலை முதலாளிகள் பகவானை விலைக்கு வாங்கிவிட்டார்கள் என்று நீ அறியவில்லையா? ஏன் உன் நேரத்தை வீணடிக்கிருய்? பாவம்! உன் தொண்டையை ஏன் வீணே கிழித்துக் கொள்கிருய்? கொப்பரைகளின் புகையும் தொழிற்சாலைகளின் விஷக்காற்றும் நாம் வசிக்கும் இந்தப் பாழடைந்த அறையும் ஏற்கனவே உன் தொண்டையை நோகச் செய்திருப்பது போதாதா?

**மனைவி:** நீங்கள் இன்று ராத்திரி ஏன் இவ்வளவு நாழி கழித்து வருகிறீர்கள்?

**தொழிலாளி:** குழந்தைகள் எங்கே?

**மனைவி:** இப்பத்தான் குழந்தைகள் தூங்கப் போனதுகள். இத்தனை நாழியும் மேகத்தைப் பற்றியும் நிலாவைப் பற்றியும் வானத்தைப் பற்றியும் தாத்தாவின் வெள்ளைத் தாடியைப் பற்றியும் இன்னும் என்னவெல்லாமோ ஓயாமல் உளறிக்கொண்டே யிருந்தன, அதோ அந்த ஜன்னல் பக்கம் நின்றுகொண்டு.

**தொழிலாளி:** அந்த ஜன்னலிடம் அவை ரொம்பப் பிரியம் வைத்திருக்கின்றன, இல்லையா! பாவம்! அசட்டுக் குழந்தைகள்! அவைகளுக்கு இந்த ஒரு சந்தோஷந்தானே உண்டு? மேகமும் சந்திரனும் நட்சத்திரங்களும் அடங்கிய வானம்தான் அவைகளின் பொம்மைப் பெட்டி. வேறு பொம்மைகள் ஏது? ஆமாம், ஒரு தொழிலாளியின் வீட்டிலே பிறந்த பாவத்துக்கு வேறென்ன கிடைக்கும்? பகவானும், பகவான்! பகவான் நாசமாய்ப் போக!!! நான் புரிவது தெய்வ நிந்தையானால், அதை அவன் மன்னிப்பானோ?

**மனைவி:** என் சிநேகிதியான அடுத்த வீட்டு அக்காள் கொஞ்ச நேரத்துக்கு முன் வந்து, ஒரு மண் பானை இரவல் கேட்டாள். போன வாரம் சாலையோரத்துச் சந்தையிலே இரண்டு பானைகள் வாங்கினீர்களே, அதில் ஒன்றை அவளுக்குக் கொடுத்துவிட்டேன்.

**தொழிலாளி:** நல்லது, அவர்கள் பானை என்ன ஆச்சு? உடைந்து போச்சுப்போ விருக்கு?

**மனைவி:** ஆமாம். 'சகலமும்தான் ஒரு நாள் உடைந்து போகப் போகிறது' என்று நான் அவளிடம் சொன்னேன்.

**தொழிலாளி:** பேஷ், நன்ருய்ச் சொன்ஞய்!—ஆமாம், ஒரு நாள் என்ன, வெகு சீக்கிரத்திலேயே சகலமும் உடைந்துபோகப் போகின்றன—நாம் நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிஷத்திலும் ஒடிந்து விழுகிருேம். நானும் நாசம்—நீயும் நாசம்—நாம் அனைவருமே நாசம்—ஏழை மண்பாண்டங்கள், மலிந்த மண்பாண்டங்கள்!

**மனைவி:** நீங்கள் வொர்க்ஷாப்பிலிருந்து நேரேயா வருகிறீர்கள்?

**தொழிலாளி:** ஆமாம்; உனக்குத்தான் தெரியுமே, இடையிலே கொஞ்சம் தங்கிவிட்டு வந்தேன்.

**மனைவி:** கள் நாற்றம் வீசுகிறதே!

**தொழிலாளி:** நல்லது, அது ஏனென்று உனக்குத் தெரியும்.

**மனைவி:** தெரியும். ஆனல், தொழிலாளிகள் கள்ளை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாய்க் கடவுளைப் பற்றிப் பாடி ஆனந்திக்கும்படி செய்ய, அவர்கள் முயற்சிக்கிருர்களே?

**தொழிலாளி:** ஏழைத் தொழிலாளி, கள்ளை விட்டால் கடவுளையும் விட்டு விடுவான்; கடவுளை விட்டால் கள்ளையும் விட்டுவிடுவான்.

**மனைவி:** வாருங்கள், வாருங்கள்; சாப்பிட நேரமாக வில்லையா?

**தொழிலாளி:** எனக்கு இன்று ராத்திரி பசியில்லை. நான் களைத்துப் போயிருக்கிறேன். ரொம்பக் களைத்திருப்பதால், ஒரு கவளம் கூட என்னல் உண்ண முடியாது.

**மனைவி:** ஏதோ சஞ்சலப்படுகிறீர்கள் போல் தோணுது.

**தொழிலாளி:** ஆமாம். ஒரு வதந்திதான் அதன் காரணம்.

**மனைவி:** என்ன வதந்தி?

**தொழிலாளி:** கூடிய சீக்கிரம் அவர்கள் சகலத்துக்கும் வரி போடப் போகிறார்களாம்.

**மனைவி:** சட்டங்களைச் செய்வது யார்?

**தொழிலாளி:** சட்டங்கள் செய்பவரை நாம் ஒரு நாளும் பார்த்த தில்லை. அவர்கள் மகா புனிதமானவர்கள்; மகா மதிப்புடையவர்கள். அவர்கள் தேவர்களைப் போன்றவர்கள்; ஒரு நாளும் அவர்களை நாம் பார்க்கமுடியாது. ஏனெனில், அவர்களை ஒரு தரம் நாம் பார்த்து விட்டோமானால், அவர்கள் தேவர்களா யிருப்பது ஒழிந்து விடும்; முழு உண்மையும் வெளிப்பட்டு விடும்.

**மனைவி:** சட்டங்கள் விசித்திரமா யிருக்கின்றனவே! சகல சட்டங்களும் மனிதன் செய்தவை தானே?

**தொழிலாளி:** சகலமும்—ஆம், சகலமுந்தான்; ஆலைச் சட்டங்கள், தொழிற்சாலைச் சட்டங்கள், நிலச் சட்டங்கள்!

**மனைவி:** கர்ம பலனைப் பற்றிய சட்டங்கூட மனிதன் செய்தது தானே?

**தொழிலாளி:** ஆமாம், பெண்ணே! அதுவுங் கூடத்தான்! சகலத்திலும் மகா தந்திரமான, அதி யுக்தியான சட்டம் அதுதான்! சென்ற ஜன்மத்திலே செய்த பாவங்களுக்காகவே நாம் நசுக்கப்பட்டு, ஒடிந்து, பட்டினியில் உழன்று தவிக்கிறோம் என்று அது சொல்லுகிறது! அவை யெல்லாம் நாசமாய்ப்

போக! இந்தச் சட்டங்களுக் கெல்லாம் நாம் தலை பணிந்து கிடக்கிறோம். ஹா........பெண்ணே! நீ என்ன நினைக்கிறாய்? இப்போது அவர்கள் மற்றொரு சட்டம் செய்யப் போகிறார்கள். இன்று சாயந்திரம் அதை நாங்கள் கேள்விப்பட்டோம். அது என்ன சட்டமா யிருக்கும் என்று உன்னால் ஊகிக்கவே முடியாது.

**மனைவி:** சொல்லுங்கள், சொல்லுங்களேன்.

**தொழிலாளி:** மகா கொடியது, அற்பத்தன மானது, கேவலமானது. ஐயோ! என் ஏழைக் குழந்தைகள் என்ன செய்யும்!

**மனைவி:** என்ன? நம்ம குழந்தைகளை அவர்கள் எடுத்துக்கொண்டு போய்விடப் போகிறார்களா, என்ன?

**தொழிலாளி:** அதற்குத் துணிச்சல் உண்டா அவர்களுக்கு? பெண்ணே! நான் இங்கே உள்ள மட்டில், விஷமேறிய இந்த நாடி நரம்புகளில் ஒரு சொட்டு ரத்தம் மிஞ்சி இருக்கு மட்டில், அவர்களால் அது முடியாது.

**மனைவி:** பின்னே அது என்ன?

**தொழிலாளி:** இப்போது அதை உனக்கு நான் சொல்லமுடியாது. இல்லை. சொல்லக்கூடாது. சொல்லமாட்டேன். நல்லது! சரி, சரி. அவர்கள் பார்க்கட்டும்; முடிந்த கெடுதலை யெல்லாம் செய்து பார்க்கட்டும். சகலமுந்தான் என்றோ ஒரு நாள் உடைந்து போகப் போகிறது. (பேய்ச் சிரிப்புடன்) பெண்ணே! நீ சொன்னது சரி!

[பக்கத்து வீட்டுத் தொழிலாளி யொருவன் திடீரென்று பிரவேசிக்கிறான்.]

**பக்கத்து வீட்டான்:** அண்ணு! அது நிஜந்தான்; வதந்தி நிஜந்தான். அவன் இப்போதே வந்து விட்டான். (பிரவேசித்தது போலவே வேகமாய் வெளியேறி விடுகிருன்.)

**தொழிலாளி:** அவர்கள் நம்மை நசுக்கி, புண் படுத்தி, அங்கவீனமாக்கி விடுவதென்று முனைந்திருக்கிருர்கள். சிலர், சிலரே கொடுங்கோலர்கள்—அவர்கள் நம்மைக் கையையும் காலையும் கட்டி, சக்கரங்களிலே பூட்டி, குதிரைகளைப்போல் ஜேணமிட்டு, ஆடுகளைப் போல் தார்போட்டு விரட்டுகிருர்கள்; நமது கால்களிலே விலங்கிட்டு விட்டார்கள். நமது வருங்கால சந்ததிகளெல்லாம் தாய் வயிற்றிலே பிறக்கும்போதே, மணிக்கட்டிலே பார விலங்குகளோடும் கணைக்காலிலே கனத்த இரும்புச் சங்கலிகளோடும் பிறப்பதைத் தாங்கள் காணலாம் என்று அவர்கள் ஆசை கொண்டிருக்கிருர்கள்! நம்மை வாயில்லாப் பாமர மக்கள் என்று அவர்கள் அழைக்கிருர்கள். இன்னும் மிஞ்சிவிட வில்லை. நாம் யாரென்று அவர்களுக்குக் காட்டுவோம். பாமர மக்களாமே, பாமர மக்கள்! நமது இருள்சூழ்ந்த பாழடைந்த குகைகளுக்குள்ளும் சேரிகளுக்குள்ளும் அவர்கள் வந்து பார்க்கட்டுமே! இந்தப் பாமர மக்கள் ஊமையும் குருடுமல்ல, தங்கள் இஷ்டப்படி யெல்லாம் உபயோகப்படுத்திக் கொள்வதற்காகப் படைக்கப்பட்ட ஏதோ வொரு மிருக சக்தியல்ல எனக் காண்பார்கள். பாமர மக்களும், பெண்டு, பிள்ளை, குழந்தை, குட்டிகளெல்லா மடங்கிய மனித குலந்தான் என்றும், அந்த ஒவ்வொருவரும் தனித்தனி உயிரும் பண்பும் பூர்ணமும் கம்பீரமும் வாய்ந்தவர்தான் எனவும் காண்பார்கள். நம் ஒவ்வொருவர் இதயமும் வெற்றியை நாடிச் சித்தமான போர்முரசுபோல் அடித்துக் கொண்டிருப்பதையும் அவர்கள் காண்பார்கள்.

**மனைவி:** களைத்திருக்கும் தோழா! வாஸ்தவம்; நீங்கள் சொல்வதெல்லாம் வாஸ்தவம்.

**தொழிலாளி:** வேலை செய்யும் தொழிலாளிக்கு எண்ணும் சிந்தை யுண்டு; களிக்கும் நகைப் புண்டு; கற்பனைக் கனவுண்டு; சகிக்கும் தியாக முண்டு—ஆமாம், அவர்களை விட அழகாகக் காதல் புரியக் கூடத் தெரியும். பாமர மக்கள்! ஆம், பெண்ணே! என்றோ ஒரு நாள் அது ஓடிந்து விழப்போகிறது—ஜல வெள்ளம்போல, உறுமும் அலை கடலின் ஜல வெள்ளம் அணை கடப்பது போல! அவர்களைப் பழிக்குப் பழி வாங்குவோம். நீண்ட சாவினின்றும் மீண்டெழுந்து திடீரென்று பரிபூர்ணமாய் விழித்துக் கொண்டு விட்டோம் என்று நாளையே அவர்கள் உணரும்படி செய்வோம். கடைசியாய், பெண்ணே! கொடுங்கோலனின் கொடுங்கோன்மைக்கு நாம் நன்றியே செலுத்தவேண்டும். அதுவே யன்றோ நம் அனைவரையும் உறக்கத்தினின்றும் தட்டி யெழுப்பி விட்டது! சக்கரங்களில் பூட்டிய அடிமைகளாய் இனி வாழோம்; சிலருக்குச் சொந்தமான பார இயந்திரங்களிலே அகப்பட்டு உடலும் உயிரும் நசுங்கி நொந்து இனி வாழோம். ஆர்த்தெழுந்து பறித்து அவ்வியந்திரங்களுக்கு நாமே எஜமானுவோம்—அதன் பின்? ஓய்வு! சாந்தி!—இயந்திரங்கள் கோடிக் கணக்கான மக்களுக்குச் சொந்தமாகும்! நல்லது—நாம் நடைப் பிணங்களாய் இரோம். என்ன! நம்பிக்கையா? சுதந்தரமா? நமக்கா? நமக்குக் கூடவா? எளிய, மிதிபட்ட ஜந்துக்களான நமக்கா? ரத்தம் செத்துக் களைத்துச் சோர்ந்த அடிமைத் தொழிலாளிக்கா? பசியே! கடைசியாய்ப் பார்க்கப் போனால் நீ வெறும் புகைப் படலந்தானு? இவ்வளவு சீக்கிரம் போய் விட்டாயே! துன்பமே! நீ வெறும் உருவெளிதானு? இவ்வளவு சீக்கிரம் அற்றொழிந்தாயே! அது சாத்தியமா

என்ன? என்ன? நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன், பெண்ணே? எனக்குப் பித்தா பிடித்திருக்கிறது? நான் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்? பசியும் தொழும்பும் மிடியும் நம்மை விட்டு விலகி விடுமா? நிஜமாகவா?

**மனைவி:** ஆம், விலகிவிடும். களைத்துச் சோர்ந்த என் ஏழைத் தோழா! கூடிய சீக்கிரம் நமக்கு நல்ல காலம் பிறந்து விடும்!

**தொழிலாளி:** இல்லை........அந்தக் காலம் வெகு தூரத்தில் இருக்கிறது. நாமோ களைத்துக் கிடக்கிறோம்.

[தார் பூசுவோன், கையிலே ஒரு வாளியில் தாரும் புருஷும் எடுத்துக்கொண்டு பிரவேசிக்கிறான்,]

**தார் பூசுவோன்:** இவ்வளவு நேரங் கழித்து வந்ததற்கு மன்னியுங்கள். ஜன்னல் எங்கேயிருக்கிறது?

**மனைவி:** அவனுக்கு இங்கே என்ன வேண்டுமாம்? அவன் யார்?

**தொழிலாளி:** வதந்தி உண்மையாகி விட்டது. வந்து விட்டாயா, அப்பா! அதோ இருக்கிறது ஜன்னல்—அழகான ஜன்னல்! உனக்கு வாழ்க்கையிலே சலிப்புத் தட்டினால் ஏறிக் குதித்து விடலாம் இந்த ஜன்னலிலே.

**தார் பூசுவோன்:** (ஜன்னலின் உடைந்த கண்ணாடிக் கதவுகளில் தாரைப் பூசத் தொடங்குகிறான்) பாவத்தைப் போல் கறுத்தது, பாவத்தைப் போல் கறுத்தது— அதுதான் தார். நான் எனக்கிட்ட வேலையையே செய்கிறேன்; அவ்வளவுதான்.

**தொழிலாளியின் மனைவி :** அவன் என்ன பைத்தியமா! என்ன செய்கிறான்?

**தொழிலாளி :** ஜன்னலுக்கும் அதன் உடைந்த கண்ணாடிக் கதவுகளுக்கும் தார் பூசுகிறான்! சிலரேயான முதலாளிகள், புதியதொரு சட்டத்தைச் செய்திருக்கிறார்கள். இப்போது அவர்கள், **வெளிச்சத்துக்கு** வரி போட்டிருக்கிறார்கள்.

**மனைவி :** வெளிச்சத்துக்கு வரியா? மறுபடியும் நம் வீட்டுக்கு வெளிச்சமே ஒரு போதும் வராதா?

**தார் பூசுவோன் :** இனி வராது—அதற்கு வரி செலுத்தும் வரையில் வராது. படிப்படியான வரி விகிதங்கள் தயாரித்திருக்கிறார்கள். அதை யனுசரித்து, உங்களுக்கு வேண்டிய வெளிச்சத்தை நீங்கள் கிரயத்துக்கு வாங்கிக் கொள்ளலாம். நமஸ்காரம். போய் வருகிறேன்.

[தார் பூசுவோன் தனது வாளியையும் புருஷையும் எடுத்துக்கொண்டு வெளியேறுகிறான்.]

**தொழிலாளி :** இதுதான் பட்டப் பகலிலே அடிக்கும் பகற் கொள்ளையின் உச்சம்—பகல் வெளிச்சத்தையே அடிக்கும் கொள்ளை!

**மனைவி :** கூடிய சீக்கிரம் சகலத்துக்கும் அவர்கள் வரி போட்டு விடுவார்கள். நமது கண்கள், நமது குழந்தைகளின் கண்களுக் கெல்லாம் வரி போட்டு விடுவார்கள் போலிருக்கிறதே? நமது வாய்களையும் பூட்டி முத்திரையிட்டு விடுவார்கள். நமது கனவுகள், நமது பாட்டுக்கள், நமது அழுகைகள், நமது சிரிப்புக்கள் எல்லாவற்றுக்குங்கூட ஒரு வேளை வரி போட்டு விடுவார்கள்!

**தொழிலாளி:** ஆனால், நமது பிரார்த்தனைகளுக்கும் பஜனாவளிகளுக்கும் மாத்திரம் வரி விதிக்க மாட்டார்கள். ஏனெனில், அங்கே யிருக்கிறாரே அங்கே, (வானத்தை நோக்கிக் குத்து விடுபவன்போல் முஷ்டியை ஓங்குகிறான்) சகல விஷயங்களையும் பார்த்துக் கொண்டு, என்றாலும் ஒரு வார்த்தையும் சொல்லாமல் அங்கே யிருந்துகொண் டிருக்கிறாரே அந்தக் **கடவு**ளுக்கு நமது பிரார்த்தனைகளையும் பஜனைகளையும் நாம் தாராளமாய்ச் செய்துகொண் டிருக்க வேண்டுமல்லவா, அதற்காக! நமது **கடவுள்** விக்கிரயமாகி விட்டார்; இயந்திரங்களுக்கும் நிலத்துக்கும் சகல பொருளுக்குமே சொந்தக்காரரான பணக்கார கர்விகள் **கடவுளைக்** கிரயம் வாங்கி விட்டார்கள். ஏன், பெண்ணே! உன் உடலுக்குங் கூட அவர்கள் வரி போட்டு விடக் கூடும்; அப்போது உன்னைக் காதலிக்கும் ஒவ்வொரு தடவையும் நான் கட்டணம் செலுத்த வேண்டியதுதான்!

**மனைவி:** என்ன கொடுமை! என்ன துர்ப்பாக்கியம்! இதெல்லாம் உண்மைதானா?

**தொழிலாளி:** மெத்த உண்மை—ஆனால், அத்தனையும் இன்று மகத்தான மோச நாசப் **பொய்**யாய் இருக்கிறது! அவர்கள் அத்தனை பேரும் பொய்யர்கள்!

[வெளியே நகரில் சேமக்கலம் ஏழு மணி அடிக்கிறது.]

**மனைவி:** என்ன அடிக்கிறது? ஏழு மணியா? விளக்கின் சுடரோ அணைந்து விட்டது. பகவானே! என்ன இருள்! என்ன காரிருள் இங்கே சகலத்தையும் சூழ்ந்து விட்டது!

**தொழிலாளி:** சுடுகாடு போன்ற இருள்! குருடனின் கண்கள் போன்ற இருள்! ஜதையில் கருகிய

உடல்போன்ற இருள்! நிலக்கரி போன்ற மையிருட்டு! அண்டை அயல் வீட்டுச் சகோதரர்களே! (பித்தனைப் போல் வீறிட்டுக் கத்துகிருன்) **சகோதரர்களே!!!**

**அஜாவும் ஜோதியும்:** (இருளிலே விழித்தெழுந்து) அம்மா! அப்பா! நாம் எங்கே யிருக்கிறோம்? (சேரியெங்கும் சஞ்சலமும் பரபரப்பும் கொண்ட சந்தடி கேட்கிறது.)

**தொழிலாளி:** சூரியோதயம் வெளியிலே வந்து காத்திருக்க வேண்டியதுதான்; காத்து, நமக்கெல்லாம் என்ன நேரிட்டது என்று ஆச்சர்யப் பட்டுக் கொண் டிருக்கவேண்டியதுதான்! ஒளி! ஒளி! பெண்ணே! நீ சொன்னது சரி. சகலமும் என்ருே ஒரு நாள் உடைந்து போகத்தான் வேண்டும்! ஒளி! ஒளி! ஒளி! (ஜன்னலின் கண்ணுடிக் கதவுகளைக் குத்தி உடைக்கிருன்...........அக்கம் பக்கமெல்லாம் நாற்புறமும் ஜன்னல் கண்ணுடிக் கதவுகள் நொறுங்கும் சத்தம் கேட்கிறது.) கடைசியாக, அவர்களுக்கு நமது சவாலைக் கொடுத்து விட்டோம்! ஒளி! ஒளி! தொழிலாளியின் வீட்டிலே........சாசுவதமான ஒளி!

[அழகிய ரோஜா வர்ண ஒளிக் கதிர் ஒன்று உள்ளே வீசி, **தொழிலாளருக்கு** மகிமையும் பெருமையும் நல்கும் நவயுகத் தொடக்கத்தின் அடையாளமாக இலங்குகிறது.]

# அந்தி விளக்கு

[நிழல்கள்மீது மோகங்கொண்டஒரு வாலிபனின் படிப்பறை. வாலிபன் தனியா யிருக்கிருன். ஏற்றிய விளக்கொன்றைக் கரத்தில் தாங்கி, வேலேக்காரக் கன்னி யொருத்தி பிரவேசிக்கிருள்.]

**கன்னி:** ஸ்வாமி, நமஸ்காரம்.

**வாலிபன்:** நல்லது. கையிலே விளக்குடன் உன்னைக் காண, நான் களிப்புறுகிறேன். ஏனெனில், விளக்கு உன் நிழலை வீசுகிறது.

**கன்னி:** விளக்கு அறையிலே ஒளி வீசுவதால் பொருள்களை யெல்லாம் நீங்கள் பார்க்க முடிகிறது என்ற சந்தோஷந்தானே ?

**வாலி:** பொருள்களை நாம் காணும்படி செய்யும் ஒளி யெதுவும் உலகிலேயே கிடையாது. அதை ஒளி யென்று சொல்லுகிருய்? சொல்லாதே. ஆயினும், அதனிடம் எனக்கு நன்றிதான். ஏனெனில், நிழல்கள் பிறக்க அது உதவுகிற தல்லவா?

**கன்னி:** ஸ்வாமி! என்னவோ விசித்திரமாய்ப் பேசுகிறீர்களே!

**வாலி:** இப்படி வா; உன் கைகளைப் பிடித்து, நிழல் செடிகளும் நிழல் விலங்குகளும் ஏகாந்த மலைச் சிகர நிழல்களும் செய்யும் விதத்தை, உன் விரல்களுக்கு நான் கற்றுக் கொடுக்கிறேன்........

[அவள் கைகளைப் பிடித்து, நிழல் சிருஷ்டி வித்தையை அவளுக்குக் கற்றுக் கொடுப்பவன் போல, விளக்குக்கு எதிரே தூக்கிப் பிடிக்கிருன்.]

**கன்னி:** எனக்குப் பயமாயிருக்கிறது ; ஐயோ! எனக்குப் பயமாயிருக்கிறது, ஸ்வாமி! என் உடம்பு நடுங்குகிறது........

**வாலி:** உண்மையான காதல் தோன்றும் போதுதான் உடம்பு நடுங்கும். நமது நிழல்கள் எப்படிக் கூடிக் கலக்கின்றன, பார்! புரோகிதரின்றியே-மூடச் சடங்கொன்றுமின்றியே - அவை மணம் புரிந்து விட்டன. நிழல்களுக்குப் பொய்யுறவொன்றும் தெரியாது. என் அன்னையின் நிழல் எனது நிழலைச் சந்திக்கும்போது, அவையுங்கூட மணந்து விடுகின்றன! நிழல்கள் பரிசுத்தமானவை ; போலியாசாரங்கள் அவற்றுக்குக் கிடையாது.

**கன்னி:** ஸ்வாமி! எனக்கு நாசம் தேடுகிறீர்கள்!

**வாலி:** நாசகார உலகினின்றும் உன்னை விடுவித்து, வழிகாட்டப் போகிறேன். நிழல்களைக் காதலித்து, நீ அமரத்துவம் பெறவேண்டும் என்பதுதான் என் விருப்பம்.

**கன்னி:** நீங்கள் எப்போதும் துயரத்தோடிருக்கிறீர்களே!

**வாலி:** இந்த வீட்டிலே என்னையன்றி வேறெவரும் நிழல்களின் பெருமையை அறிந்து, அவற்றைக் காதலிக்கிறார்களில்லை. அதுவே என் துயரம். ஆ! இதோ பார், உன் நிழலை! அதை நான் காதலிக்கிறேன்!

[அந்நிழலை நோக்கிப் பாய்ந்தோடி, அதைக் கொஞ்சுகிறான்.]

**கன்னி:** ஸ்வாமி! என்ன காரியம் செய்கிறீர்கள்! ஐயோ! அடடா!

**வாலி:** விலகி நில். (அவளை முரட்டுத் தனமாய்ப் பிடித்து ஒரு புறம் தள்ளுகிறான்.) சுந்தர வாலிபக் கன்னிகையே! நீ பிரசன்னமா யில்லாமலே, ஆபாசச் சதையும் குருதியும் எலும்புமான உன் தோற்றமின்றியே, உனது நிழலை நீ வீசமாட்டாயா! உன் பிரசன்னம் ஓர் இடைஞ்சலாக வன்றோ இருக்கிறது! உன்னை அடித்துத் தகடாக்கி, என்றென்றும் நிலைத்த, சாந்த, மோன நிழல் சித்திரமாய்ச் செய்து விட நான் ஆசை யுறுகிறேன்.

**கன்னி:** (வீறிட்டுக் கத்துகிறாள்) இவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது! நிச்சயமாய்ப் பைத்தியம்தான்....

[வாலிபனின் தாய் பிரவேசிக்கிறாள்.]

**தாய்:** என்ன விஷயம்?

**கன்னி:** இவரை ஏதோ பிசாசு பிடித்திருக்கிறது, அம்மா! இந்த அறையிலே பிசாசு சுற்றுகிறது; அது என்னையும் சுற்றுகிறது. நான் இந்த வீட்டை விட்டே ஓடிவிடப் போகிறேன்........ (விம்மி விம்மி யழுதுகொண்டே வெளியே ஓடுகிறாள்.)

**வாலிபன்:** நமஸ்காரம், தாயே!

**தாய்:** நல்லது, மகனே! உன் பரீட்சைக்கு இன்னும் பனிரண்டு நாட்கள்தான் இருக்கின்றன. இது உனக்குத் தெரியும். அப்படியிருந்தும், சென்ற சில மாதங்களாக, நீ நிழல்களையே பார்த்துக்கொண்டும் அவற்றோடேயே பேசிக்கொண்டு மிருக்கிறாயே?

**வாலிபன்:** அம்மா! இதைக் கேள்....அப்பா எங்கே?

**தாய்:** கல்லறையிலே புதைந்து விட்டார், என் மகனே!

**வாலி:** இப்போது அவர் ஒரு நிழலாகிவிட்டார்; ஆகையால்தான், அவரிடம் நான் பிரியம் கொண்டிருக்கிறேன்.

**தாய்:** என் மகனே! இருண்டு மழை சொரிந்த அந்த ஐப்பசி யிரவிலிருந்து, உன் நடத்தை சதா காலமும் மிக விசித்திரமா யிருக்கிறதே!

**வாலி:** தாயே! உன்னைவிட உன் நிழலிடம் எனக்கு அதிகப் பிரியமா யிருப்பது உனக்குத் தெரியுமா? உண்மையைச் சொன்னால், சாரமென்று மூடர்கள் கூறும் பொருள்களைவிட, அவற்றின் நிழல்களையே நான் நேசிக்கிறேன். எரிதழல் போல் பூச் சொரியும் மரமும், வர்ண விசித்திரத் தோகை மயிலும், தங்கள் நிழல்களில் பாதி யழகு மில்லை; பாதி உண்மையு மில்லை; பாதி உயிரு மில்லை. அடடா! மலைமீது வீசும் மேகத்தின் நிழலும், குன்றிலே விழும் பட்சியின் நிழலும், பயிர்ப்புலத்தில் சாயும் ரயில்வண்டி நிழலும், ஜலத்திலே தோன்றும் கப்பலின் நிழலும் என்ன அழகு! அவற்றை யெல்லாம் எனக்குத் தா! அவற்றின் முன் வணங்கி விழுந்து தொழுது அருள்பெற் றெழுகிறேன். நிழலே பரிசுத்தமானது; நலந்தருவது; மாசற்றது. அது உன்னதமானது; சாந்தி நிறைந்தது; கறைப்படுத்த முடியாதது. சர்ப்பத்தின் நிழலிலே, விஷம் கிடையாது; புலியின் நிழலிலே அதன் மூர்க்கப் பசியில்லை; வெறுக்கத்தக்க புரோகிதனின் நிழலிலே அவனது அபரிசுத்தம் இல்லை; கோயிலின் நிழலில், அதனுள்ளே நிகழும் அக்ரமக் களங்க மில்லை; சர்க்கார் அதிகாரியின் நிழலிலே, அவன் இதயத்தி லுறையும் தொழுநோ யில்லை; பாசாங்குப் பக்தனது நிழலின் நெற்றி, அவனது பட்டை நாம விபூதி ஜாதிக் குறிகளின் களங்கத்தை உதறி யெறிந்துவிடுகிறது. தாயே! நிழல் எவ்வளவு அற்புதமான பொருள்!

**தாய்:** மகனே! நீ நிழல்களையே தேடித் திரிகிறாயே!

**வாலி:** இறுதி ஜோதி நிழலான ஒளியின் வாயிற்படியை எட்டும் வரையில், நான் நிழல்களைத் தேடிக் கொண்டுதான் இருப்பேன். அற்ப ஒளி யெதற்கும் இடமற்ற அகில நிழல் திரளே அந்த ஜோதி நிழலாகும். தாயே! பார்........பார்........

**தாய்:** உனது மிருக சாஸ்திரப் பாடத்தை நீ தொட்டுப் பல மாதங்களாகி விட்டனவே?

**வாலி:** என் விரல்களிலுள்ள சாஸ்திரத்தைப் பார்; நிழல்களின் மிருக சாஸ்திரம் இது. பார்,—அம்மா! இப்போது இதோ ஒரு கோவேறு கழுதை, இதோ ஒரு வாலில்லாக் குரங்கு, இதோ ஒரு அற்புதமான காண்டா மிருகம்; இதோ பார்........கூர்ந்து பார்........ஒரு குதிரை - எந்த ராஜகுமாரியும் கூடச் சவாரி செய்யத் தனக்கு யோக்கியதை யில்லை யென்று தலை கவிழத்தக்க குதிரை........எவ்வளவு சுறு சுறுப்பும் உற்சாகமும் லாகிரியும் நிறைந்திருக்கின்றன இவை!........

**தாய்:** உன் உபாத்தியாயர் புகார் சொல்லுகிறாரே! பீஜ கணிதத்திலும் க்ஷேத்திர கணிதத்திலும் நீ மனம் செலுத்துவதே யில்லையாமே? கணிதத்தில் தானே நீ மிகக் கீழே யிருக்கிறாய்?

**வாலி:** தாயே! கணனங்களில் எனக்கு மகா வெறுப்பு. அலசி ஆராய்ச்சிகள் புரிந்தால், வாழ்க்கை வியர்த்த மாகிவிடும். எனக்கு வாழ் வென்பது, முறியா நிழலொன்றை வீசும் பிரம்மாண்டமான அழகுச் சித்திரமாகும். உண்மையில், தாயே! நிழல் உலகத்திலே, கணனங்கள் கிடையாது; பின்ன லட்சணங்கள் கிடையாது. ஒவ்வொரு நிழலும் மற்ற நிழல்

களைப் போன்றே இயல்புடையது. அவை யாவும் ஒன்று கூடிக் கலந்து விடும்போது, ஒரு மகோன்னதப் பெரு நிழல் ஆகிவிடுகிறது. சண்டை சச்சரவுகளும் முறிவுகளும் துன்பமும் வீண் கனவுகளும் நிறைந்த உலகிலேதான், பின்ன லட்சண வித்தியாசங்கள் இருக்கும்.

**தாய்:** நீ என்னவோ உளறுகிருய்.

**வாலி:** நீயும் கூட ஒரு நாள் நிழல்களை மோகிக்கும்படி நான் செய்யப் போகிறேன். ஒரு வேளை நாளைக்கே அல்லது இன்றே இப்பொழுதே கூட நீ அவற்றை மோகித்து விடலாம்; நிழல் மோகிகளுக்கிருக்க வேண்டிய லட்சணம் இப்போதே உன்னிடம் இருக்கிறது. என் சிறந்த தந்தையின் கல்லறைக்குச் சாத்த, நீ புஷ்பங்கள் எடுத்துச் செல்லுகிருயே, அதென்ன? உன்னை யறியாமலே, உண்மையில் நீ நிழலுக்கு மரியாதை செலுத்துகிருய் என்றுதானே அர்த்தம்?........ஆனல், உன் மன மறிந்து அவ்விதம் நிழலைப் பூஜிக்க, நீ கற்றுக்கொள்ள வேண்டும். இப்படி வா, அம்மா!—என் பக்கத்தில் உட்கார்; என் கண்களைக் கூர்ந்து நோக்கு.

**தாய்:** உன் பிடி எவ்வளவு குரூரமா யிருக்கிறது! அட பகவானே!

**வாலி:** நிழலுக்கு மனிதன் கொடுத்த முதல் பெயர்தான் கடவுள். வா இப்படி....ஆழ்ந்து பார்.... என் கண்களை........

**தாய்:** என்னை என்ன செய்ய விரும்புகிருய்? மனோவசியமா?

**வாலி:** ஒரே ஒரு தரம், அம்மா!........பார்!

**தாய்:** நான் மாட்டேன்; ஏனெனில், உன் கண்கள் பிசாசு பிடித்த நிழல்களைப் போல் இருக்கின்றன.

**வாலி:** உலகிலேயே மகா ஏகாந்தமான நிழல் கிணறுகள் அவை.

**தாய்:** பார், பார்........

**வாலி:** எங்கே, அம்மா?

**தாய்:** உன்னையேதான். உனக்கு ஜன்னி பிடித்திருக்கிறது.

**வாலி:** காதல் ஜன்னி — நான் காதலுற்றிருக்கிறேன், காதல் — என் ஆசை, என் ஆசை—

**தாய்:** யாரிடம் விழுந்திருக்கிறது?

**வாலி:** அவளிடம்! (தேம்பித் தேம்பி அழுகிறான். தலையை ஒரு மெத்தையில் புதைக்கிறான்; பிறகு தூக்குகிறான். கண்ணைத் துடைத்துக் கொள்ளுகிறான். அச்சமயம் உள்ளே பிரவேசிக்கும் டாக்டரை வெறுப்போடு நோக்குகிறான்.)

**தாய்:** நமஸ்காரம், டாக்டர்!

**டாக்டர்:** வீட்டில் எப்படி? எல்லாரும் சௌக்கியமா?

**வாலி:** நமஸ்காரம், டாக்டர்! உங்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை. டாக்டர்களாகிய உங்கள் அத்தனை பேர் மண்டைகளையும் உங்களுடைய பாட்டில்களையும் சேர்த்து உடைத்து, உங்களது ரத்தத்தையும் அவற்றின் மருந்துகளையும் சிந்தி விடுவேன். ஆனால், மருந்து பாட்டில்களும் டாக்டர்களும் நிழல் வீசுவதுண்டே, அதற்காகத்தான் பார்க்கிறேன். (உறுதியாய், கம்பீரமாய் நடந்து, வெளியே செல்லுகிறான்.)

**டாக்டர்:** இல்லை, அவன் பைத்தியமே யில்லை; இது நிச்சயம்.

**தாய்:** அவன் காதல் பித்தம் கொண்டிருக்கிறான்.

**டாக்டர்:** அப்படித்தான் தோன்றுகிறது.

**தாய்:** இதை அவனே ஒப்புக் கொண்டான்.

**டாக்டர்:** யாரிடம் காதல்?

**தாய்:** என்னால் அதை ஊகிக்க முடியவில்லை. ஆனால், அவன் ஒரு பைத்தியத்தைப் போல் நடந்து கொள்ளுகிறான். இது காதல் கொண்டவனின் லட்சணந்தான்.

**டாக்டர்:** நேற்றிரவு அவன் நன்றாய்த் தூங்கினானா?

**தாய்:** எப்போதும் போலவே மோசந்தான். இராத்திரியிலே அவனுக்கு அமைதியே கிடையாது. சற்று நேரத்துக்கொருதடவை திடீரென்று விழித்து, படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்து, விளக்கேற்றி, கைகளைத் தட்டி, சுவரிலும் மேஜையிலும் நாற்காலியிலும் விழும் நிழல்களை அழைக்கிறான்; என்னவோ மந்திரம் செய்பவன்போல் விசித்திரமாய், மர்மமான சைகைகள் செய்கிறான்; கடைசியில் குனிந்து, தன் நிழலையே கட்டியணைக்க முயல்கிறான்.

**டாக்டர்:** இந்த வர்ணனையைக் கேட்பதே ஆச்சர்யமா யிருக்கிறது. அவன் ரகஸ்யமாய் ஏதாவது துர்த்தேவதைகளை உபாசனை புரிய மந்திரங்கள் கற்றுக் கொள்ளுகிறானோ என்னவோ! இங்கே சில மைல் தூரத்தில் ஒரு மந்திரவாதி யிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவன் ஒரு வார்த்தைகூட வாய் திறந்து உச்சரிப்பதில்லையாம். சரியான பாத்திரம்

என்று தனக்கு யாரைத் தோன்றுகிறதோ அவர்களுக்குத் தன் எண்ணங்களை அவன் மானஸீகமாக அப்படியே மாற்றி விடுகிறானும்; துன்மந்திரமாகிய நஞ்சை அவர்களின் உள்ளத்திலே அவன் பொழிந்து விடுகிறானும்.......அல்லது, ஒரு வேளை........

**தாய்:** நான் எப்போதும் அவனைக் கவனித்துக் கொண்டேதான் இருக்கிறேன். அவன் ஒருபோதும் இந்த அறையை விட்டு வெளியேறுவதேயில்லை. எப்போதும் அறையிலேதான் இருக்கிறான். அவன் எப்போதாவது வெளியே சென்றானால், ஒரு கல்லறைக்குத்தான் போகிறான். அதன்மீது அவனுக்குப் பரம பிரியம். (கண்ணீர்த் துளியொன்று அவள் கண்களிலிருந்து உதிர்கிறது.) ஆனால், அவன் ஒரு துறவி, தூயவன், உத்தமன், நற்குணம் நிறைந்த பையன்—நான் அறிவேன், நான் அறிவேன்; அவன்—அவன் காதல் பித்துத்தான் பிடித்திருக்கிறான்........

**டாக்டர்:** யாராவது வாலிபப் பெண்ணின் போட்டோப் படத்தை எப்போதாவது அவன் வைத்திருந்ததை நீங்கள் கண்டதுண்டோ?

**தாய்:** இல்லை; ஒருபோதுமில்லை....

[வேலைக்காரக் கன்னிகை வீறிட்டுக் கத்திக்கொண்டே உள்ளே ஓடி வருகிறாள்.]

**கன்னி:** அம்மா, அம்மா!........உங்கள் உத்தம மகன் தோட்டத்துப் பாதை வழியாக இடுகாட்டை நோக்கிச் செல்கிறார். வழியிலே என் கண்களை உற்றுநோக்கி, 'நான் காதல் கொண்டுளேன்' என்று, ஜபமாலை உருட்டுகையில் ஜபிப்பதுபோல் அவ்வார்த்தைகள் ஒவ்வொன்றையும் எண்ணி உச்சரித்து விட்டுச் சென்றார். அவர் **காதல்** கொண்டிருப்பதாய்ச் சொன்னார்; ஆனால்....**என்மீது** காதல்

கொண்டதாய்ச் சொல்லவில்லை—சத்தியமாய்ச் சொல்லுகிறேன், அம்மா! கடவுள் சாட்சி. ஆயினும், என்னை ஏதோ பிசாசு துரத்துவதுபோல் பயமாயிருக்கிறதே! ஒருநாள் அது நடந்துவிடும் என்று நான் அறிந்தேயிருந்தேன். இப்போது இந்தச் சுவர்களை என்னால் பார்க்கச் சகிக்கவில்லை. இந்த நாற்காலிகளை, இந்தப் புஸ்தகங்களை, இந்த மேஜையை, இந்த விளக்கை ஒன்றையும் எனக்குப் பார்க்கச் சகிக்கவில்லை!—பல நாளாய் ஏதோ மந்திரோச்சாரணம் போல என்னை என்னவோ வாட்டி வருகிறது—இப்போது நிழல்களைக் கண்டால் எனக்குப் பயமாயிருக்கிறது—ஆமாம், என் நிழலையே கண்டாலும் பயமா யிருக்கிறது....

**தாய்:** பொறு, பொறு, பெண்ணே! பதறாதே!

**டாக்டர்:** (தமது கிளாட்ஸ்டன் பையிலிருந்து ஒரு சூர்ணத்தை எடுத்து) சரிதான்; சரி, சரி; மனதைத் திடப்படுத்திக் கொண்டு, கொஞ்சம் ஜலத்தோடு இதை விழுங்கிவிடு. ஒன்றுமில்லை, நரம்புத் தளர்ச்சி. அதெல்லாம் இதோ சரியாகிவிடும். (தாயை ஒரு புறமாய் அழைத்துச் சென்று) இவள் தான் இத்தனை தொல்லைக்கும் காரணமென்று நான் நினைக்கிறேன். இனி இந்த வீட்டில் ஒரு கணங்கூட இவள் இருக்கக்கூடாது. இல்லாவிட்டால், பையன் ஏதாவது பெரிய விபரீதம் செய்து விடுவான். இவள் தான் அந்தத் துர்த்தேவதை........நமஸ்காரம்; விடை கொடுங்கள். நாளைக்கு மறுபடியும் வருகிறேன். (டாக்டர் வெளியே செல்கிறார்.)

**தாய்:** பெண்ணே! உண்மையைச் சொல். உன்னிடம் எப்போதாவது அவன் ஏதேனும் சொன்னதுண்டா?

**கன்னி:** உண்டு. அந்த விளக்கு என்னை நிழல் வீசச் செய்கிறதாம். அதனால், அந்த விளக்கிடம் தமக்குப் பிரீதி உண்டானதாக அவர் சொன்னார்........

**தாய்:** வேறு என்ன சொன்னான்?........உன் கையை எப்போதாவது அவன் தொட்டதுண்டா?

**கன்னி:** உண்டு, தாயே! அடிக்கடி என் கைகளைத் தம் கைகளில் அவர் பிடித்து வைத்துக் கொள்கிறார்.

**தாய்:** அவற்றை அவன் முத்தமும் இடுவானோ?

**கன்னி:** இல்லை—என் கைகளால் நான் நிழலுருவங்கள் சிருஷ்டிக்கும்படி எனக்கு அவர் கற்பிப்பார். என் விரல்களைக் கொண்டு ஓர் எலும்புக் கூட்டின் உருவத்தைச் சிருஷ்டிக்க, இப்போதே எனக்குத் தெரியும்—ஐயோ!—எனக்கு இதோ பைத்தியம் பிடித்து விடும்போ லிருக்கிறதே.

**தாய்:** உன் கைகளை அவன் தீண்டும்போது, உனக்கு என்ன தோன்றுகிறது?

**கன்னி:** அவை நிழல்களாய் மாறி விடுமென்று தோன்றுகிறது.

**தாய்:** உன்னிடம் தனக்குக் காதல் விழுந்ததாக, எப்போதாவது உனக்கு அவன் சொன்னதுண்டா?

**கன்னி:** ஒரே ஒரு சமயம் அவர் சொன்னார்—தமக்குக் காதல்........

**தாய்:** உன்னிடம் ஏற்பட்டதாகவா?

**கன்னி:** இல்லை, அம்மா!—ஆனால், என் நிழல் மீது காதல் ஏற்பட்டதாகவே சொன்னார்—ஐயோ! —எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும், பெரும் பைத்தியம். (வாலிபன் தன் கைகளிலே மலர்களோடு பிரவேசிக்கிறான்.)

**வாலி:** அந்த ஆசாமி போய்விட்டாரா? நல்லது. இப்போது, பெண்ணே! நான் சொல்வதைக் கேள்........

**கன்னி:** தாயே! பாருங்கள்—அவரது நிழலைப் பாருங்கள்! அது எவ்வளவு அழகும் எவ்வளவு கருணையும் நிறைந்திருக்கிறது! அதன் வளைவுகளையும் ரேகைகளையும் பாருங்கள்....என்ன ராஜ தேஜஸ்........

**வாலி:** அம்மா!

**தாய்:** நீ கொண்டுவந்திருப்பதென்ன?

**வாலி:** மலர்கள்.

**தாய்:** யாருக்கு?

**வாலி:** என் காதல் பொருளுக்கு.

**தாய்:** அப்படியானால், அவற்றை அவளிடம் கொடு.

**வாலி:** இதோ, பெற்றுக் கொள்—யாரிடம் கொடுத்தாலும் எனக்கு ஒன்றுதான். எல்லாருமே நான் நேசிக்கும் ஒரே பொருள்தான். இந்த மலர்களை, விளக்குக்கு எதிரே பிடி. பார், பார் உன் கைகளின் நிழலையும், அவை பிடித்த மலர்களின் நிழலையும். இன்னும் உனக்குப் புரியவில்லையா?

**தாய்:** பெண்ணே! இந்த விளக்கை இவ் வறையை விட்டு வெளியே எடுத்துச் செல். நிழல் களைக் கண்டால், எனக்குப் பயமா யிருக்கிறது. (தாய்க்கு எதிரேயுள்ள சுவரில் நெட்டையான ஒரு நிழல் உருவம் தோன்றுகிறது.) ஐயோ! நிழல்.... நிழல்....நிழலே! நீ யார்?

**வாலி:** அதுதான் தகப்பனார்; நமது பிரேமை யின் நிழல்.

**தாய்:** இதென்ன? நான் எங்கே யிருக்கிறேன்? இந்த மலர்களை நீ எங்கிருந்து கொண்டுவந்தாய்?

**வாலி:** தந்தையின் கல்லறையிலிருந்து. அவை புதிய ஞானோதயத்தின் பூர்ண மணம் கமழ்கின்றன. தாம் உயிரோடிருக்குங்கால், நான் நிழல்களைத் தேடிச் சென்றதற்காக, ஒருமுறை என்னை அவர் மென்னி யைப் பிடித்து விட்டார். ஆனால், இப்போது அவர் பரிபூர்ண ஞானோதயத்தின் அன்படையாளமாக இவற்றை அனுப்பியுள்ளார். இது மட்டிலு மன்று; உன்னை நான் - நிழலைக் காதலிப்பவனான நான் - சத்திய லோகத்துக்கு அழைத்துச் செல்லும்படி பார்த்துக் கொள்வதற்காக, அவருமே நேரே வந்துவிட்டார்.

**தாய்:** நிழலே! உன்னை நான் காதலிக்கிறேன்.

[சுவரின் நிழல் உருவம் மறைகிறது.]

**கன்னி:** (வாலிபனின் நிழலைப் பார்த்து) நிழலே! உன்னை நான் காதலிக்கிறேன்........

**வாலி:** கடைசியாக, நிழலின் காதலர்களும், தாமே நிழல்களுமான நாம், நமது புது மனையில் - வாழ்

வெனும் மணப் பெண் காத்திருக்கும் புது மனையில்-புகுவோம்........வாருங்கள் ; நமது புது மனைக்கு உங்களை நான் அழைத்துச் செல்லுகிறேன்.

[இருள் கதவம் திறந்து, தாவள்ய வெண்மை ஒளிச் சோதியொன்றைத் தோற்றி, மாசுபடுத்த முடியாப் புனிதத்தைக் குறிக்கிறது.]

3978

---

சக்தி பிரஸ் லிமிடெட் (சாந்தி பிரஸ்), சென்னை.

# சக்தி மலர்கள்

**1.** **இனி நாம் செய்யவேண்டியது யாது?**
[லியோ டால்ஸ்டாய்] ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு

*சுத்தமான தமிழ் மொழிபெயர்ப்பு. ஒரு அனுபவக் களஞ்சியம்.* அணு **12**

**2.** **உலகம் சுற்றும் தமிழன்** ஏ. கே. செட்டியார்

*பல நாட்டின் பழக்க வழக்கங்களையும், புதுமைகளையும் எளிய இனிய தமிழில் சித்தரித்துக்காட்டுவது.* அணு **12**

**3.** **நிர்மலகுமாரி** காழி. சிவ. கண்ணுசாமி

*இந்து தேச சரித்திரத்தை யொட்டி யெழுந்த ஒப்பற்ற இனிய நவீனம். எளிய நடை. படிப்பதற்குகந்த இனிமையான கதை.* அணு **12**

**4.** **அசலா [கிருஹதாஹ்]** [சரத் சந்திர சட்டர்ஜி]
ஆர். ஷண்முகசுந்தரம் மொழிபெயர்ப்பு

*ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜியின் நாவல்களில்* **அசலா** *தலை சிறந்த தென்று எல்லோராலும் புகழப்பெற்றது.* ரூ. **$1\frac{1}{2}$**

**5.** **சிறை அனுபவங்கள்** கி. சடகோபன்

*மனிதனுடைய உண்மைச் சொரூபத்தைக் காட்டிவிடக் கூடியது சிறைதான். அந்தச் சிறை நம் நாட்டில் எப்படி யிருக்கிறது என்பதை இதில் காணலாம்.* அணு **12**

**காந்தித் தாத்தா கதை**
ஸ்ரீமதி காவேரி வெங்கட்டராமன்
ஸ்ரீ எஸ். ஆர். வெங்கட்டராமன்

*முதியோர் கல்வி அபிவிருத்திக்காகவும், சிறுவர் அறிவைப் பெருக்க வேண்டியும் பொதுவாக அனைவருக்கும் பயன்பட வேண்டியும் எழுதப்பட்டது இந்தப் புஸ்தகம்.* அணு **8**

## சக்தி காரியாலயம்

**46, முத்துமாரி செட்டித் தெரு, ஜி. டி. சென்னை**

3978

# சக்தி மலர்

சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ்மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக்களையும் கற்பனைகளை யும் தெளிவான நடையில் வெளியிட எழுந்தனவாகும்.

இத்தொகுப்பில் அடங்கிய ஐந்து ஓரங்க நாடகங்களிலும் புதுமை பொங்கிநிற்கிறது; சிந்தனையைக் கலக்கும் பெருங் கருத்துக்கள் நிரம்பியிருக்கின்றன. சம்பிரதாயச் சோட்டிலே போகவில்லை. ஹரீந்திரரின் கற்பனை, மடையை உடைத்துக் கரைபுரண்ட வெள்ளம் போலப் பெருக்கெடுத்துச் செல் கிறது; மனித சமூகக் கொந்தளிப்பின் பிரதிபலிப்பு அது. அதற்கு யார் அணைபோடுவது? படித்து, யோசியுங்கள்.

சக்தி காரியாலயம்
46, முத்துமாரி செட்டித் தெரு
: சென்னை :